# சித்திரக்கவிக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

**வ. ஜெயதேவன்**

தொகுப்பாசிரியர்

**கி. காவேரி**



சென்னைப் பல்கலைக்கழகம்

**2007**



2726


150ஆம் ஆண்டு சிறப்பு வெளியீடு

# சித்திரக்கவிக் களஞ்சியம்

*பதிப்பாசிரியர்*

**வ. ஜெயதேவன்**

தகைசால் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
முதன்மை ஆய்வாளர் & தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

2726
04/11/10

*தொகுப்பாசிரியர்*

**கி. காவேரி**

முன்னைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

சென்னைப் பல்கலைக்கழகம்
2007

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு: 4

சித்திரக்கவிக் களஞ்சியம்
வ ஜெயதேவன் (பதிப்பாசிரியர்)

150ஆம் ஆண்டு வெளியீடு

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு. அக்டோபர் 2007

விலை ரூ 105/-

கணினி வடிவமைப்பு திரு இல கணேசன்

வடிவமைத்து அச்சிட்டோர்: ஸ்ரீ ராகவேந்திரா பிரஸ்
✆ 24614545, 24952913

வெளியிடுவோர் பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005



# சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் - சென்னை - 600 005

பேராசிரியர் சு. இராமச்சந்திரன்
M.Sc., Ph.D., Ph.D. (Miami)
துணைவேந்தர்

## அணிந்துரை

புத்தகங்கள் நாகரிகத்தைச் சுமந்து வருவன; அவை இன்றேல், வரலாறு ஓசையற்றுப் போகும்; இலக்கியம் ஊமையாகி விடும்; அறிவியல் ஊனப்பட்டு விடும்; சிந்தனையும் எதிர்காலக் கணிப்பும் இயக்கமற்று விடும் எனப் புத்தகம் பற்றிச் சரியாகக் கூறப்பட்டுள்ளது. நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய அன்னை நிறுவனமான சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டை அடையாளப்படுத்த... நினைவு நூல்கள் வெளியிடுவதை விடவும் சிறந்த நிலையான வேறுபணி என்ன இருக்கமுடியும்?

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைப்பு நிறுவனங்களின் ஆசிரியப் பெருமக்கள் படைத்த இந்த நூல் தொகுதிகளுக்கு முகவுரை வரைவது அருமையும் பெருமையும் சான்ற சிறப்பு. இந்நூல்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு அர்ப்பணிப்புக்கும் நிலையான நினைவுப் பொருள்களாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்நூல்கள் அவற்றின் புத்தாக்க அணுகுமுறை, ஆய்வுத்தரம், நடைநலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பெறுகின்றன.

நமது பெருநிறுவனத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் இன்றியமையாத மைல் கல்லாக மட்டுமன்றி நமது நாட்டின் கல்விப் பாங்கிற்கு ஓர் உண்மையான, பொருண்மை மிக்க பங்களிப்பை இந்நூல்கள் நல்கும் என்று நம்புகிறேன்.

கல்விச் சமூகத்தினர், கூட்டுறவாளர்கள், பங்காளர்கள் அனைவருக்கும், அவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் அக்டோபர் 9, 2007இல் வெளியிடத்தக்க வகையில் இந்நினைவு நூல்களை உருவாக்கிய ஏனைய அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய செப்டம்பர் 5, 1857 முதல் இன்றுவரை எத்தனையோ மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது. மேலும் பல சிறப்புகள் வரவுள்ளன என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க இதயம் இறும்பூது எய்துகிறது. அன்பார்ந்த வணக்கத்துடனும் மனமார்ந்த வாழ்த்துக்களுடனும்

**சு. இராமச்சந்திரன்**

அக்டோபர் 2007

# பதிப்புரை

கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருசேர விருந்தளிப்பது சித்திரக்கவியின் சால்பு. புலமை விளையாட்டின் விளைச்சலே சித்திரக்கவி எனலாம். இந்தியாவில் சித்திரக்கவிகள் தமிழிலும் வடமொழியிலும் பிற மொழிகளிலும் இயற்றப்பட்டுள்ளன. இலங்கையிலும் இலங்கையிலிருந்து மலேஷியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்ற தமிழ்ப் புலமையாளர்களாலும் சித்திரக்கவிகள் இயற்றப்பட்டுள்ளன.

இலத்தின், சீனம், ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் சித்தரக்கவிகள் மிகத் தொன்மைக்காலத்திலிருந்தே இயற்றப்பட்டுவந்துள்ளன. Patteren Poem, Shaped Verse, Figure Poem, Concrete Poem, Iconic Poem, Alter Poem முதலிய பல்வேறு பெயர்களால் ஆங்கிலத்தில் அமைந்துள்ள சித்திரக்கவி வகையிலான பாடல்கள் கூறப்படுகின்றன. Diamante என்னும் பாடல்வகை வைரம் போலக் காட்சி தருமாறு புனையப்படுவது என்பதையெல்லாம் அறியும்போது சித்திரக்கவி குறித்த ஒப்பாய்வுக்களங்கள் பல உள்ளமையை உணரலாம்.

தமிழில் உள்ள சித்திரக்கவிகள் குறித்த விளக்கக் கையேடாகவும் தகவல் கருவூலமாகவும் திருமதி கி. காவேரி உருவாக்கியுள்ள இந்தச் சித்திரக்கவிக் களஞ்சியம் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீட்டு வரிசையில் வெளியிடப்படும் நான்காவது நூலாகும். தமிழ் உலகம் இந்நன் முயற்சியை வரவேற்றுப் போற்றும் என்று நம்புகிறேன். இதன் நிறைகுறைகள் குறித்த கருத்துகளை எதிர்பார்க்கிறேன். இந்நூலுக்கு அணிந்துரை நல்கிச் சிறப்பித்த மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு எனது மனம் நிறை நன்றியினைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள
வ. ஜெயதேவன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | x |
| 2. | சித்திரக்கவிகள் அட்டவணை | xix |
| 3. | பயன்பட்ட நூல்கள் | xxv |
| 4. | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | xxix |
| 5. | சித்திரக்கவிக் களஞ்சியம் | 1 |

# முன்னுரை

தமிழ் மொழியில் தோன்றிய நூல்களுள் காலத்தால் மூத்தது தொல்காப்பியம் இதன்கண் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்றிலக்கணம் இடம்பெற்றுள்ளது பொருளில் கூறப்பட்ட யாப்பு, அணி இரண்டும் பின்னர்த் தனித்தனி இலக்கணங்களாகக் கிளைத்தன எனவே தமிழ் இலக்கணம் ஐந்து என வரையறுக்கப்பட்டது ஐந்திலக்கணத்தைக் கூறும் நூல்களாக வீரசோழியம், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமி நாதம், தொன்னூல் விளக்கம் ஆகியன அமைந்துள்ளன இவ்வைந்திலக்கணங்களைத் தவிர அணிஇலக்கணத்தைத் தனியே விளக்கும் முதல் நூலாக நமக்குக் கிடைப்பது தண்டியலங்காரம் இந்நூல் வடமொழி காவியாதரிசனத்தின் தமிழ்ப்பெயர்ப்பு. தண்டியலங்காரத்திற்கு முன்பே அணி இலக்கணம் பற்றிக் கூறும் தமிழ் நூல் ஒன்று இருந்தமையை யாப்பருங்கல விருத்தி சுட்டும் 'அணியியல்' புலப்படுத்துவதாக அறிஞர்கள் கருதுவர் மறைந்துபோன நூல்களுள் அணி இலக்கண நூல்களும் அடங்கும் என மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுவார்

## அணி

புலவன் தான் உணர்த்த விரும்பும் செய்தியினை எளிமையாகவும், இனிமையாகவும் புலப்படுத்த அணிகள் துணைபுரிகின்றன செய்யுட்கு அழகு தருவது அணி எனத் தண்டியலங்காரமும், செய்யுளை அழகுபடுத்துவது அணி என மாறனலங்காரமும், பொருள் புலப்பாட்டிற்கும் அழகிற்கும் துணையாவது அணி என இலக்கண விளக்கமும் குறிப்பிடுகின்றன செய்யுளை அழகுறுத்துவதோடு கற்போரை மகிழச்செய்யும் ஆற்றல் உடையனவாகவும் இவை திகழ்கின்றன

இவ்வணிகளைப் பொதுவணி, பொருளணி, சொல்லணி என மூன்றாகப் பிரித்து அவை பற்றிய விளக்கங்களைத் தண்டியலங்காரம், எடுத்துரைக்கின்றது பொதுவணி, சொல்லும் பொருளும் இணைந்த செய்யுளின் பொதுஇயல்பை விளக்குகிறது பொருளணி பொருளை விளக்கியுரைக்கக் கையாளப்படும் வெளியீட்டு முறையின் தன்மையை எடுத்துரைக்கிறது சொல்லணி, பொருளைப்பற்றி நோக்காமல் சொற்களின் அமைப்பினால் ஏற்படும் அணிகளை விளக்குகின்றது

பொருளணியைப் போன்றே சொல்லணியும் அணிஇலக்கண மரபில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது சொல்லணியில் எழுத்து மடக்கு, சொல் மடக்கு, அடி மடக்குப் பற்றியும் இவை விரிந்து செல்லும் முறை, சித்திரக்கவிகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன

சொல்லணியைப் பற்றி இலக்கண விளக்கம்,

> சொல்லணி என்பது சொல்லுங் காலை
> மடக்கும் அதன்வழிப்படூஉம் சித்திரமும்என
> நடக்கும் என்மனார் நயன் உணர்ந்தோரே (684)

எனக் கூறுகிறது.

மடக்கு கேட்போரின் செவிக்கு இனிமையளிப்பதுடன் சிந்தனையைத் தூண்டுகிறது செவியின்பம் மட்டுமன்றிக் காட்சியின்பத்தையும் அளிப்பதாக அமைகிறது சித்திரக்கவி இது மிறைக்கவி என்றும் அழைக்கப்பெறும்.

கவிதையை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நான்காக வகைப்படுத்திக் கூறுவர் இந்நால்வகைப் பகுப்பால் இவற்றை இயற்றும் கவிஞரும் நால்வகையினர் ஆவர்

### ஆசுகவி

செய்யுளுக்கான பொருள், உரிய பா, அடி வரையறை, அணி இவற்றைக் கொடுத்துப் பாடுக என்றதும் புலவனால் உடன் பாடப்படும் செய்யுள் இது கடுங்கவி என்றும் அழைக்கப்படும் இங்குக் கடுமை என்பது விரைவு என்னும் பொருள் உடையது

பொருளடி பாவணி முதலிய கொடுத்துப்
பாடெனப் பாடுவோனே யாசு கவியே (*முத்துவீரியம்*, 1017)

### மதுரகவி

சொற்சுவை, பொருட்சுவை, தொடை விகற்பம் மற்றும் உருவகம் முதலிய அணிகளோடு சிறப்புற இயற்றப்பெறும் செய்யுள். இது இன்கவி எனவும் அழைக்கப்பெறும்

தொடையும் தொடையின் விகற்பமும் செறியச்
சொற்சுவை பொருட்சுவை தோன்ற உருவகம்
ஆதிய அணிகளோடு அணிபெறப் பாடுவோன்
மதுர கவியென வழுத்தப் படுமே (*முத்துவீரியம்*, 1018)

### சித்திரக்கவி

மாலை மாற்று முதலான கவிகளைச் சித்திரத்தில் பொருத்தி இயற்றப்படும் செய்யுள் இது அருங்கவி, மிறைக்கவி எனவும் அழைக்கப்பெறும்

ஏக பாத மெழுகூற் றிருக்கை
காதை கரப்புங் கரந்துறைச் செய்யுள்
கூட சதுக்கங் கோமூத் திரிமுதல்
தெரிந்து பாடுவோன் சித்திரக் கவியே (*முத்துவீரியம்*, 1019)

### வித்தாரக்கவி

பன்மணி மாலை, தசாங்கம், மும்மணிக் கோவை முதலியன விரித்துப் பாடப்படும் பாடல். இது பெருங்கவி என்றும் அழைக்கப்பெறும்.

மறங்கலி வெண்பா மடலூர்த லியலிசை
பாசண்டத் துறை பன்மணி மாலை
தசாங்கம் மும்மணிக் கோவை கிரீடை
இவை முதலிய விரித்து இசைத்துப் பாடுவோன்
வித்தாரக் கவியாம் விளம்பிடினே (*முத்துவீரியம்*, 1020)

### சித்திரக்கவி

சித்திரம் - பொருள் விளக்கம்

சித்திரம் என்பதற்கு ஓவியம், சிறப்பு, அழகு, அலங்காரம், அதிசயம் என்னும் பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது இவ்வளவு பொருண்மைக்கும் பொருந்தப் பாடப்படுவது சித்திரக்கவி எனலாம்

சித்திரக் கவியை இரண்டு வகையாகப் பகுத்து விளங்கிக் கொள்ளலாம். 1. சொற்சித்திரம் 2 வடிவச் சித்திரம்.

## சொற்சித்திரம்

சொல் விளையாட்டுகளால் அமையும் செய்யுள் வகையைச் சொற்சித்திரம் எனலாம் சான்றாக, (1) வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றாி இனமாக அமையும் செய்யுள்; (2) ககரம், சகரம், தகரம் என ஒரே வர்க்கமாக அமையும் செய்யுள், (3) சொற்களுடன் ஒவ்வோர் எழுத்தாய்ச் சேரச்சேர வேறுவேறு பொருள் தரும் செய்யுள், (4) உதடு ஒட்டாமல் பாடப்படும் செய்யுள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்

## வடிவச் சித்திரம்

தேர், பாம்பு, சக்கரம், சிவலிங்கம் போன்றனவற்றில் பொருத்தப்படும் செய்யுட்களை வடிவச் சித்திரம் எனலாம் சித்திரத்தில் பொருத்துவது என்பது எளிமையானதன்று ஒவ்வொரு சித்திரத்திற்கும் தனியான சில விதிமுறைகள் உள்ளன சித்திரத்திற்குரிய துருவங்களை அறிந்துகொண்டு அதற்குத் தக இயற்றினால்தான் பாடல் முறையாகச் சித்திரத்தில் பொருந்தும்

இது ஒரு நோக்கு நூலாக இருப்பதால் இவ்விரு வகைப்பாடுகளும் தனித்தனியே பிரித்துக் கொள்ளப்படாமல் அகர வரிசையில் இதன்கண் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன

## சித்திரத் துருவம் - விளக்கம்

ஒரு சித்திரத்தில் எழுத்துகள் முறையாக அடக்கப்படும். இவ்வாறு அடக்கப்படும் எழுத்துகளில் ஒரே எழுத்து பலமுறை வேறுவேறு இடங்களில் வாசிக்கப்பெறும் ஒரு செய்யுளின் மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை, அவற்றுள் சித்திரத்தில் பொருந்துவனவற்றின் எண்ணிக்கை, எந்தெந்த எண்களுள்ள எழுத்துகள் ஒன்றாக அமையும் எனும் விவரம் துருவம் எனப்பெறும் இந்தக் களஞ்சியத்தில் இடம்பெற்றுள்ள வடிவச் சித்திரத்துடன் கூடிய சித்திரக்கவிகள் எல்லாவற்றுக்கும் இந்தத் துருவம் தரப்பட்டுள்ளது

செய்யுளில் அமையும் எழுத்துகளின் எண்ணிக்கை சித்திரத்தில் அமைகையில் குறைவுறும் ஒரே எழுத்து பல முறை படிக்கப்படுவதே இதற்குக் காரணம் இத் துருவம் பற்றி அறிதலே சித்திரக் கவிகளை இயற்றவும் படிக்கவும் துணைபுரிகிறது

யாப்பு, அணி இரண்டும் ஒருங்குணர்த்தும் இலக்கிய வகையாகச் சித்திரக்கவி அமைந்திருக்கின்றது

திருஞானசம்பந்தர் இயற்றிய திருவெழுகூற்றிருக்கை, ஏகபாதம் ஆகியனவே தமிழ் மொழியில் முதன்முதலில் தோன்றிய சித்திரக்கவி வகை இச் சித்திரக் கவிகளைப் பற்றித் தொகுத்துக் கூறும் முதல் தமிழ் நூலாகத் திவாகரம் (12 52) அமைந்துள்ளது

## திவாகரம்

எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய திவாகர நிகண்டு பின்வரும் இருபது சித்திரக் கவிகளைச் சுட்டுகின்றது. 1 மாலைமாற்று, 2 சக்கரம் 3 சுழிகுளம், 4 ஏகபாதம், 5 எழுகூற்றிருக்கை, 6. காதை கரப்பு, 7 கரந்துறைப் பாட்டு, 8 பாத மயக்கு, 9 பாவின் புணர்ப்பு, 10. கூட சதுக்கம், 11 கோமூத்திரி, 12 எழுத்துப்பாட்டு, 13. ஒற்றுப் பெயர்த்தல், 14. ஒரு பொருட் பாட்டு, 15. சித்திரப்பா, 16 விசித்திரப்பா, 17. விகற்பநடை, 18 வினாவுத் தரம், 19 சருப்பதோபத்திரம், 20 எழுத்து வருக்கம்

[விகற்பநடைய வினாவுத்தரமே எனப்பாடம் கொண்டால் 19 வகை சித்திரக்கவிகள் கிடைக்கின்றன ]

## பிங்கலம்

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பிங்கல நிகண்டு இருபத்திரண்டு சித்திரக்கவிகளைத் தொகுத்துரைக்கின்றது திவாகரம் சுட்டிய இருபது கவிகளுடன் தூசங்கொளல், வாவன் ஞாற்று எனும் இரண்டு புதிய சித்திரக்கவிகளைப் பிங்கல நிகண்டு கூறுகிறது.

## சூடாமணி நிகண்டு

பதினாறாம் நூற்றாண்டில் உருவான சூடாமணி நிகண்டு பதினெட்டு சித்திரக்கவிகளைப் பட்டியலிடுகின்றது திவாகரம் கூறும் இருபது சித்திரக் கவிகளில் விகற்பநடை, ஒற்றுப்பெயர்த்தல் எனும் இரண்டைத் தவிர ஏனையவற்றைச் சூடாமணி நிகண்டு கூறுகிறது ஒருபொருட் பாட்டு எனும் சித்திரக்கவியைக் கூறுகையில் 'ஒற்றெழுத்து யாவும் தீர்ந்த ஒருபொருட் பாட்டு' எனக் கூறுகிறது இந்த 'ஒற்றெழுத்து யாவும் தீர்ந்த' என்பது பிற்காலத்தில் ஒற்றெழுத்தின்றி வருவது (ஒற்றெழுத்து இல்லாத செய்யுள்) எனும் புதிய வகைச் சித்திரக்கவியாகத் தோற்றம் பெற்றது.

## பொருள்தொகை நிகண்டு

சொல்லணியின் இரு பிரிவுகளாக மடக்கு, சித்திரம் என்ற இரண்டை இந்நிகண்டு குறிப்பிடுகிறது

அணியின் இலக்கணம் உவமை ஆதி
ஏதுஇல் துதிநூ றாகிய பொருள்அணி
மடக்குச் சித்திரம் ஆகிய இருவகைச்
சொல்அணி என்னச் சொல்லுவர் புலவர் (389)

## இலக்கண நூல்கள்

நிகண்டுகளை அடுத்துச் சித்திரக்கவிகள்பற்றி அறிய இலக்கண நூல்கள் துணைபுரிகின்றன. அணி என்னும் தனி இலக்கணப் பிரிவு தோன்றும் முன்னரே யாப்பு இலக்கணம் இக்கவிகளைப் பட்டியலிடுகின்றது. பிங்கல நிகண்டு கூறும் இருபத்திரண்டு சித்திரக்கவிகளை யாப்பருங்கலம் எந்த மாற்றமுமின்றிக் குறிப்பிடுகின்றது

திவாகரம், பிங்கலம், ஆகிய இரு நிகண்டுகளும் விகற்ப நடை என்பதைத் தனியொரு சித்திரக்கவியாகக் கூறுகின்றன. ஆனால் விகற்ப நடை என்பது ஒரு சித்திரக்கவி வகை என்பதற்கான விளக்கம் எதுவும் எங்கும் கிடைக்கப்பெறவில்லை. இதனையே விகற்பநிடைய வினாவுத்தரம் எனக் கொண்டால் இருவருக்கிடையே நடக்கும் வினா உரையாடல் ஆகிய வினாவிடை என்னும் பொருள் கிடைக்கிறது எனவே, விகற்பநடைய வினாவுத்தரம் என்பதுதான் சரியான பாடமாக இருக்கக் கூடும்.

## உரையாசிரியர் உரைப்பன

யாப்பருங்கல நூற்பாவில் (96·14) 'விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டே' என்றதனால் உரையாசிரியர் சில சித்திரக்கவி வகைகளை உரையிற்கோடலாக உரைக்கின்றார் அவை: 1 அக்கரச் சுதகம், 2. அலகிருக்கைவெண்பா, 3. கண்டகட்டு, 4. கல்லவல், 5. திரிபாகி, 6. தேர்கை, 7 நிரோட்டி, 8 பிந்துமதி, 9. முண்டப்பாட்டு என்பனவாம்

இவற்றில் அலகிருக்கை வெண்பா, கண்டகட்டு, கல்லவல், தேர்கை, முண்டப்பாட்டு ஆகியவை தெளிவாக விளக்கப்படவில்லை. இவற்றினை அறிந்தோர் எமக்குத் தெரிவித்தால் மிக்க நன்றியுடையேம்.

## வீரசோழியம்

கி.பி பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் பத்து சித்திரக் கவிகளைக் கூறுகிறது இப் பத்தும் யாப்பருங்கலம் சுட்டியவையே ஆகும்

பிறவும் விரித்துரையே என்றதனால் முந்தைய நூலின் செய்திகளை இந்நூலாசிரியர் அறிந்துள்ளார் எனக் கருதலாம்.

## தண்டியலங்காரம்

அணியிலக்கணத்தைப்பற்றி மட்டுமே கூறும் முதல் நூலான தண்டியலங்காரம் பன்னிரு சித்திரக் கவிகளைக் கூறுகிறது நாக பந்தம், எழுத்து வருத்தனம் என்னும் இரண்டும் தண்டியலங்காரத்தில் கூறப்படும் புதிய வகைச் சித்திரக்கவிகள் ஏனைய பத்தும் யாப்பருங்கலத்தில் கூறப்பட்ட சித்திரக்கவிகளே

## உரையாசிரியர் உரைப்பன

தண்டியலங்காரத்தின் உரை வாயிலாக நிரோட்டம், மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, முரச பந்தம், திரிபங்கி, திரிபாகி, பிறிதுபடு பாட்டு என்பனவற்றை அறிய முடிகிறது யாப்பருங்கலம் சுட்டிய ஏகபாதம், எழுகூற்றிருக்கை, தூசங் கொளல், வாவன் ஞாற்று, ஓரெழுத்துப்பாட்டு, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, ஒருபொருட் பாட்டு, ஒற்றுப் பெயர்த்தல், சித்திரப்பா, விசித்திரப்பா என்பனவற்றைத் தண்டியலங்காரம் சுட்டவில்லை ஓரினப்பாட்டு என்பதை வல்லினப் பாட்டு, மெல்லினப் பாட்டு, இடையினப் பாட்டு எனத் தனித்தனி மூவகைகளாக மடக்கின்கீழ்ச் சுட்டுகிறது

## மாறனலங்காரம்

பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய மாறனலங்காரம் இருபத்தாறு வகையான சித்திரக் கவிகளைக் கூறுகிறது. முந்தைய இலக்கண நூல்கள் கூறிய சித்திரக் கவிகளுடனே மேலும் சில புதிய சித்திரக்கவிகளை மாறனலங்காரம் கூறுகிறது அவை, 1 ஓட்டியம், 2 ஓட்டிய நிரோட்டியம், 3. வக்கர உத்தி, 4. பதுமபெந்தம், 5. பிரிந்தெதிர் செய்யுள் என்பனவாகும்.

யாப்பருங்கலத்தில் கூறப்படாத பதினைந்து புதிய சித்திரக்கவிவகைகளை மாறனலங்காரம் குறிப்பிடுகிறது எனினும் இவற்றுள் சில தண்டியலங்காரத்தில் கூறப்படுவனவேயாம்.

## உரையாசிரியர் உரைப்பன

மாறனலங்கார உரையாசிரியர் மாத்திரைச் சுருக்கம், மாத்திரைப் பெருக்கம், ஒற்றுப் பெயர்த்தல், திரிபதாதி, அக்கரச் சுதகம், சதுரங்க பெந்தம், கடக பெந்தம் என்னும் சித்திரக் கவிகளைத் தம் உரையில் குறிப்பிடுகிறார்

## இலக்கண விளக்கம்

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம் இருபது சித்திரக் கவிகளைக் குறிப்பிடுகிறது. அவை முந்தைய நூல்களில் சுட்டப்பட்டனவேயாகும்

## முத்துவீரியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய முத்துவீரியம் பன்னிரண்டு சித்திரக்கவிகளைப் பற்றிக் கூறுகிறது. இவை முந்தைய இலக்கணங்களில் கூறப்பட்டனவே ஆகும்

## சுவாமிநாதம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சுவாமிநாதம் இருபத்து மூன்று வகையான சித்திரக் கவிகளைக் குறிப்பிடுகிறது தண்டியலங்காரம் கூறிய பன்னிரண்டு, தண்டியலங்கார உரையில் கூறப்பட்ட எட்டு, இவற்றுடன் புதியனவாகக் கடகபந்தம், சதுரங்கம், தேர்க்கவி மூன்றையும் சேர்த்து இருபத்து மூன்று எனச் சுவாமிநாதம் கூறுகிறது

## குவலயானந்தம்

காலம் உறுதியாக அறியப்படாததாக மாணிக்கவாசகர் என்பவரால் இயற்றப்பட்ட குவலயானந்தம் பதினேழு சித்திரக்கவிகளைக் குறிப்பிடுகிறது இவை முந்தைய இலக்கண நூல்களில் கூறப்பட்டனவேயாம்

இவற்றை நோக்குகையில் யாப்பருங்கலம் குறிப்பிடும் சித்திரக்கவிகளில் சில பின்னர்த் தோன்றிய இலக்கணங்களில் விடுபட்டமையை அறிய முடிகிறது அதே கணம் புதிய வகைகள் சில அறிமுகமாகின்றன இதனால் சித்திரக் கவிவகைகளின் வளர்ச்சியையும் பழையனவற்றுள் சில வழக்கிழந்தமையையும் அறிய முடிகிறது

## வேறுபாடுகள்

ஓரினப்பாட்டு என்பதை யாப்பருங்கலம், வீரசோழியம், மாறனலங்காரம் ஆகிய மூன்றும் சித்திரக்கவியில் கூறுகின்றன ஆனால் தண்டியலங்காரம், இலக்கண விளக்கம், மூத்துவீரியம் ஆகியன மடக்குடன் சேர்த்துக் கூறுகின்றன.

எழுத்து மடக்கில் கூறப்படும் ககர வர்க்கம், சகர வர்க்கம் போன்றவை சித்திரக்கவித் தன்மை கொண்டவை நான்கடி மடக்காகக் கூறப்படும் பாடல் ஏக பாதம் ஆகும்.

தண்டியலங்காரமும், இலக்கண விளக்கமும் குறிப்பிடும் ஒற்றெழுத்தின்றி வருவது (ஒற்றெழுத்து இல்லாத செய்யுள்) சித்திரக்கவித் தன்மை கொண்ட பாடலாகும். இதனை இரண்டு இலக்கணங்களும் மடக்குடன் சேர்த்துக் கூறியுள்ளன பின் வந்த இலக்கிய நூலார் இதனைச் சித்திரக்கவி வரிசையில் வைத்து இலக்கியம் படைத்துள்ளனர்

தண்டியலங்காரம், இலக்கண விளக்கம், முத்துவீரியம் என்னும் மூன்று நூல்களும் கூறும் கரந்துறை செய்யுளைக்காதை கரப்பு என யாப்பருங்கலமும், மாறனலங்காரமும் கூறுகின்றன இதேபோல் முற்கூறிய மூன்று நூல்களும் காதை கரப்பு என்று கூறும் சித்திரக்கவியைக் கரந்துறை செய்யுள் என்று யாப்பருங்கலமும் மாறனலங்காரமும் குறிப்பிடுகின்றன

முத்துவீரியம் யாப்பதிகாரத்தில் ஆசு முதலான நான்கு கவிகள் பற்றிக் குறிப்பிடுகையில் சித்திரக்கவி என்பதின் கீழ் ஏகபாதம், கரந்துறை பாட்டு, காதை கரப்பு, கோமூத்திரி, கூட சதுக்கம், எழுகூற்றிருக்கை என்னும் ஆறு கவிகளைக் குறிப்பிடுகின்றது ஆனால் அணியியலில் பன்னிரண்டு சித்திரக்கவிகளுடனே கரந்துறைப்பா, காதை கரப்பு இரண்டைத் தவிர மற்றவை பற்றிய குறிப்பு எதுவும் காணப்பெறவில்லை

இவ்வாறாக இலக்கண நூல்களில் சித்திரக்கவிகளைப் பற்றிக் கூறுமிடத்துச் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன

படிப்போரைச் சொல்லால் ஈர்ப்பதற்காகக் கவிதைகளில் பல்வேறு உத்தி மற்றும் அணி நலன்களைப் பயன்படுத்துவதைப் போலக் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் இயற்றப்படுவது சித்திரக்கவி. புலமைத்திறம் மிக்கோரே இக்கவியை இயற்ற முடியும் அத்திறம்

வாய்க்கப்பெற்றவரே இக்கவியைப் படித்துச் சுவைக்கவும் முடியும் இடைக்காலத்தே மிகுதியும் வழக்கிலிருந்த இக்கவிகள் காலப்போக்கில் செல்வாக்கிழந்து விட்டன

இவ்வகைச் செய்யுளைத் தேவர்கள், முனிவர்கள், முடிபுனைந்த மன்னர்களுக்குப் பாடலாம். அவ்வாறில்லாது பிறர்க்குப் பாடினால் பாட்டுடைத் தலைவர்க்குப் புத்திர நாசம், பிராண நாசம் ஏற்படும் பாடிய புலவன் குட்ட நோய் பிடித்துக் கையும் காலும் குறைந்து மரிப்பான் என்றெல்லாம் விதிக்கப்பட்டிருந்ததால் இக்கவி வகை வழக்கிறந்தது

மேலும் பாடலில் இடம்பெறும் ஒற்றெழுத்துகள் சித்திரத்தில் சில இடங்களில் பொருத்திக் காண்பிக்கப்படுவதில்லை. இது இக்கவியில் ஏற்படும் குறைபாடாகும் எவ்வாறிருப்பினும் சித்திரக் கவிகள் இடைக்காலத்தில் மிகுதியான வழக்கில் இருந்தன என்பதை நூல்கள்வழி உணர முடிகிறது.

இந்நூல் ஒவ்வொரு சித்திரக் கவிவகைக்கும் உரிய விளக்கம், அவற்றிற்கான இலக்கணம், சான்றுப் பாடல், தேவைப்படும் இடங்களில் உரை என்னும் வகையில் அமைந்துள்ளது சித்திரங்கள் இருப்பின் அவற்றில் செய்யுளை வாசிக்கும் முறை, துருவம், செய்யுளில் அமையும், மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை, சித்திரத்தில் அமையும் எழுத்துகளின் எண்ணிக்கை ஆகியவையும் கொடுக்கப்பட்டுள்ளன

சான்றுப் பாடலின்கீழ் நூலின் பெயர் கொடுக்கப்பட்டு அதையடுத்து எண் மட்டும் கொடுக்கப்பட்டிருந்தால் அது பாடலின் எண்ணைக் குறிக்கும். நூல் பெயரை அடுத்துப் ப எண் என இருந்தால் அது நூலின் பக்க எண்ணைக் குறிக்கும்

ஒரு சொல்லின் முன் ► இக்குறியிருப்பின் அச் சொற்பதிவைக் காண்க எனப் பொருள்படும் ஒரு சொல்லின் முன் ► இக் குறியும் அதன்பின் ▼ இக் குறியும் இருப்பின் அச்சொற்பதிவினுள் காண்க எனப் பொருள்படும்.

திருவலங்கற்றிரட்டு நூலில் உள்ள சித்திரக்கவிகளைத் தொகுத்து ப. இராமன் அவர்கள் ‘சித்திர கவிகள்’ எனத் தனி நூலாக வெளியிட்டுள்ளார் சான்றுகள் இவ்விரண்டில் எதிலிருந்து எடுக்கப்பட்டதோ அந்நூலின் பெயரே பாடலின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது

உரைகளின் முடிவில் சில இடங்களில் உடுக்குறி தரப்பட்டுள்ளது இவ்வுடுக்குறி இடம்பெற்ற உரை, குறிப்புரைகளைப் புலவர் ப வெ நாகராஜன் அவர்கள் எழுதி உதவினார் மேலும் அவர் சித்திரக் கவிகள் தொடர்பான நூல்களை வழங்கியுதவினார் அவ்வப்போது சித்திரக்கவிகளில் எற்பட்ட ஐயங்களைக் களைந்து இந்நூல் உருவாக்கத்தில் பெரிதும் துணை நின்றார் அவருக்கு எனது இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்

சித்திரக் கவிக்களஞ்சியம் என்னும் இந்நூலை உருவாக்க வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், குறிப்பாகத் தமிழ் மொழித்துறைத் தலைவரும், நூலைச் செறிவாக்கிப் பதிப்பித்து உதவியவருமாகிய பேராசிரியர் வ ஜெயதேவன் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைக் கணிப்பொறியில் அச்சேற்றியதோடு சித்திரங்களை வரைந்துதவிய திரு இல. கணேசன் அவர்களுக்கு எனது நன்றி உரியது

கணிப்பொறியில் சித்திரங்களைச் சீரமைப்பதில் உதவிய திருமதி ந சுமதி, திருமதி ஐ ஜோஸ்பின் ஆகியோருக்கும் மெய்ப்புத் திருத்தத்தில் உதவிய திரு வை. சிவநேசன் அவர்களுக்கும், சித்திரங்களை வரைதலில் உதவிபுரிந்த தோழியர்க்கும், இலக்கண நூல்களைக் கொடுத்துதவிய நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்

சென்னை 600 005
20 04 2005

கி காவேரி

# சித்திரக்கவிகள் அட்டவணை

# சித்திரக்கவிகள் அட்டவணை

| வ எண் | சித்திரக்கவிகள் | திவா | பிங் | யா கலம் | யா கல விரு | வீரசோ | வீரசோ உ | தனடி | தண்டி உ | வெண் பா | நவ பா | மாறனலங் | மாறனலங் உ | குடா | பிர மா | இலக் விள | இலக் விள பா | மு வீ | சுவாமி | குவல | காருசி பு | அம்பர் பு | நாகைக் பு | பிர தீர 1908 | திருவிளக் | ஊ தனிப் தி | திருவலங் | ஸ்ரீமத்இரா 1927 | க சி பந் மாலை 1932 | சி க வி 1939 | தி க க சி க மா 1956 | தி நா ரா சி க மா | சித் க | சி க 1987 | குறுக்குத் கலம் | தோ ம 2003 | சிரவை மு கோ | கழகம் தனிப் தி | மா தனிப் தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அக்கரச் சுதகம் | - | - | - | + | - | - | + 98 | + | + | + | + 277 | + | - | + | + 690 | + | +[1] 1145 | +[2] 196 | - | - | + | - | - | - | + | - | - | - | + | + | + | - | - | - | - | - | + | - |
| 2 | அக்கர வருத்தனம் | - | - | + | + | - | - | + | + | + | - | + | + | - | - | + | - | +[3] 1144 | +[4] 198 | - | + | + | - | - | - | + | - | - | - | + | + | + | - | - | - | - | - | - | - |
| 3 | அலகிருக்கை வெணபா | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 4 | அறுமீன்பந்தனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | + | - | - | - | - |
| 5 | இரட்டைவெண்பா | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 6 | இரத பநதம் | - | - | - | - | - | - | - | - | - | - | +[5] 286 | + | - | - | - | - | - | +[6] 200 | - | - | + | - | + | - | + | + | + | + | - | + | + | + | - | + | + | - | + | - |
| 7 | உருததிராகக கண்டிகா பந்தனம | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | + | - | - | - | - |
| 8 | எழுகூற்றிருககை | + | + | + | + | - | - | - | - | + | + | + 297-299 | + | + | + | - | - | + 1019 | - | + | - | - | - | - | + | - | + | - | - | - | + | - | - | + | - | - | - | - | - |
| 9 | எழுத்துப் பாட்டு | + | + | - | - | + | + | + | + | - | - | + | + | + | - | - | - | + | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | + | + |
| 10 | ஏகபாதம | + | + | + | + | + | + | + | + | + | + | + 263 | + | + | + | - | - | + 1019 | - | - | - | + | - | - | + | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - |
| 11 | ஒருபொருட்பாட்டு | + | + | + | + | - | - | - | - | + | + | - | - | + | + | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 12 | ஒறறுப் பெயரத்தல | + | + | + | + | - | - | - | + | - | + | - | - | - | + | + | + | + 1152 | + 198 | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | + | - |
| 13 | ஒற்றெழுத்தினறி வருவது (ஒறறெழுதது இலலாத பாடல்) | - | - | - | - | - | - | + 97 | + | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - |
| 14 | ஓடடியம் | - | - | - | - | - | - | - | - | - | - | + 275 | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 15 | ஓட்டிய நிரோட்டியம | - | - | - | - | - | - | - | - | - | - | + 276 | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |

1 எழுததழிவு 2 எழுததுச சுதம 3 எழுதது வருததனம 4 எழுதது வருததனம 5 இரதபெநதம 6 தேரககவி

| வ எண் | சித்திரக்கவிகள் | திவா | பிங் | யா கலம | யா கல விரு | வீரசோ | வீரசோ உ | தண்டி | தண்டி உ | வெண் பா | நவ பா | மாறனலங் | மாறனலங் உ | குடா | பிர மா | இலக் வின | இலக வின பா | மு வீ | சுவாமி | குவல | காருசி.பு | அம்பர் பு | நாகைக் பு | பிர திர 1908 | திருவிளக் | வஉ தனிப தி | திருவலங் | பூரீமதஇரா 1927 | க சி.பந மாலை1932 | சி க வி 1939 | தி.க ச சி.க மா 1956 | தி.நா ரா சி க மா | சித் க | சி க 1987 | குறுக்குத கலம | தோ ம 2003 | சிரவை மு கோ | கழகம தனிப தி | மா தனிப தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | ஓரிணப்பாட்டு | + | + | - | - | + | + | - | - | - | - | + 271-273 | + | + | - 277 | - | - 1145 | - | - | + | - | - | - | - | - | - | + | - | - | - | + | + | - | - | - | - | - | + | + |
| 17 | கடகபந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | + 200 | - | - | - | - | - | - | - | - | - | + | - | + | + | - | - | - | - | - | - | - |
| 18 | கணடகட்டு | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 19 | கமலபந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | +[1] 283 | + | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | + | + | - | + | + | + | - | - | + | - | + | - |
| 20 | கரந்துறைசெய்யுள் | + | + | + | + | - | - | + | + | + | + | + 288 | + | + | + | + | + 690 | +[2] 1142 | + 197 | + | - | + | - | - | - | - | - | + | + | + | + | + | - | - | - | - | - | - | - |
| 21 | கரவுவெளிப்படுப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | +* | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 22 | கலலவல் | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 23 | காதைகரபபு | + | + | + | + | - | + | + | + | + | + | + 289 | + | + | + | + | + | + 1141 | + 197 | + | + | + | - | - | - | - | + | - | - | + | + | + | - | - | + | - | - | - | - |
| 24 | கூடசதுக்கம் | + | + | + | + | - | - | + | + | + | + | +[3] 293 | + | + | + | + | + | + 1019 | + 197 | + | + | + | - | - | - | - | - | - | + | + | + | + | - | - | - | - | - | + | - |
| 25 | கோமூததிரி | + | + | + | + | + | + | - | + | + | + | + 294 | + | + | + | + | + | + 1019 | + 196 | + | + | + | - | - | - | - | + | + | + | + | - | + | - | - | + | - | - | + | - |
| 26 | சக்கரம் | + | + | - | - | + | + | + | + | + | + | + 281-282 | + | + | + | + | + | - | + 197 | + | - | + | - | - | - | - | + | + | + | + | + | + | + | - | + | + | - | - | - |
| 27 | சங்குபந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | + | - | - | - |
| 28 | சடாக்கரபந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | + | - | - | - |
| 29 | சதுரஙகபந்தம் | - | - | - | - | - | + | - | - | - | - | - | +[4] | - | - | - | - | +[5] | - 197 | - | - | - | + | + | + | + | - | + | + | + | + | + | + | + | - | - | - | + | - |
| 30 | சருப்பதோபத்திரம் | + | + | + | + | - | - | + | + | + | + | + 292 | + | + | + | + | - | + | + 197 | + | + | - | - | - | - | + | - | + | + | - | - | - | - | - | - | - | - | - | - |
| 31 | சித்திரப்பா | + | + | +[6] | + | + | + | - | - | + | + | - | - | + | + | - | - | + | + | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 32 | சிவலிங்க பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | + | - | + | + | - | - | - | + | + | - | - |

1 பதுமபெந்தம் 2 கரநதுறை பாட்டு 3 கூட சதுர்ததம் 4 சதுரங்க பெந்தம 5 சதுரங்கம் 6 சிததிரக்கா

| வ எண் | சித்திரக்கவிகள் | திவா | பிங் | யா கலம் | யா கல விரு | வீரசோ | வீரசோ உ | தண்டி | தண்டி உ | வெண் பா | நவ பா | மாறனலங | மாறனலங் உ | குடா | பிர மா | இலக் விள | இலக் விள பா | மு வீ | சுவாமி | குவல | காஞ்சி பு | அம்பர் பு | நாகைக பு | பிர திர 1908 | திருவிளக் | ஊ தனிப் தி | திருவலங | ஸ்ரீமத்இரா 1927 | க சி பற மாலை1932 | சி க வி 1939 | தி க க சி.க மா 1956 | தி நா ரா சி க மா | சித் க | சி க 1987 | குறுக்குத் கலம | தோ ம 2003 | சிரவை மு கோ | கழகம தனிப தி | மா தனிப் தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 33 | சுழிகுளம் | + | + | - | - | + | + | + | + | + | + | + 295 | + | + | + | + | + | - | + 197 | + | + | + | + | - | - | - | + | + | + | + | + | + | + | - | + | - | - | - | - |
| 34 | சொக்கட்டான் பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - |
| 35 | தமருக பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 36 | திரிபங்கி | - | - | - | - | - | - | - | - | - | - | + 296 | + | - | - | + | + | + 1150 | + 198 | - | + | + | - | - | - | - | - | + | + | + | + | + | - | - | - | - | - | - | + |
| 37 | திரிபாகி | - | - | - | + | - | - | - | + | - | - | - | +[1] | - | - | + | + | + 1151 | + 198 | - | - | - | - | - | - | - | + | - | + | + | - | - | - | - | - | - | - | - | - |
| 38 | திருக்கைபந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - |
| 39 | திருவடிப்பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - |
| 40 | தூசங்கொளல் | - | + | + | + | - | + | - | - | + | + | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 41 | நடுவெழுத்தலங்காரம | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | + | - | - | - | - | + | + | - | - | - | - | + | + | + |
| 42 | நாகபநதம | - | - | - | - | - | - | + | + | + | + | + 285 | + | - | + | + | + | - | + 201 | - | + | + | - | + | - | - | + | + | + | + | + | + | + | - | + | + | - | + | - |
| 43 | நாமாந்திரப் பிரகேளிகை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + |
| 44 | நிரோடடகம | - | - | - | + | - | - | - | + | + | - | +[2] 274 | + | - | - | + | + | +[3] 1147 | + 198 | - | - | + | - | - | - | + | + | + | - | + | + | + | - | - | - | - | - | + | - |
| 45 | பாதமயக்கு | + | + | - | - | - | - | - | - | - | - | - | - | +[4] | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - |
| 46 | பாவினபுணர்ப்பு | + | + | + | + | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 47 | பிநதுமதி | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 48 | பிரிநதெதிரசெயயுள | - | - | - | - | - | - | - | - | - | - | + 290 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 49 | பிரேளிகை | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 50 | பிறிதுபடு பாடடு | - | - | - | - | - | - | - | - | - | - | + 291 | + | - | - | + | + | + 1153 | +[5] 200 | - | + | + | - | - | - | - | - | - | + | + | + | - | - | - | - | - | - | - | - |
| 51 | மயிலவாகனபபநதம | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | + | - | - | + | - | - | - |

1 திரிபதாதி 2 நிரோட்டியம 3 நிரோடடகம் 4 அடிமயக்கு 5 பிறிதுகவி

| வ எண | சித்திரக்கவிகள் | திவா | பிங் | யா கலம் | யா கல விரு | வீரசோ | வீரசோ உ. | தண்டி | தண்டி உ. | வெண் பா | நவ பா | மாறனலங் | மாறனலங் உ. | குடா | பிர மர. | இலக் விள | இலக் விள பா | மு வீ | சுவாமி | குவல | காஞ்சிபு | அம்பர் பு | நாகைக் பு. | பிர திர 1908 | திருவிளக | வஉ தனிப் தி | திருவலங் | பூரிமத்இரா 1927 | க சி பந் மாலை1932 | சி க வி 1939 | தி க க சி க மா 1956 | தி நா ரா சி க மா | சி த க | சி க 1987 | குறுக்குத கலம் | தோ ம 2003 | சிரவை மு கோ | கழகம தனிப் தி | மா தனிப் தி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 52 | மலைப்பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | + | + | - | - | - | - | - | - | - |
| 53 | மாணிக்க மாலைப் பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - |
| 54 | மாத்திரைச் சுருக்கம | - | - | - | + | - | - | - | + | + | - | - | + | - | - | + | + | + 1149 | + 199 | - | + | + | - | - | - | - | + | - | + | + | + | + | - | - | - | - | - | + | - |
| 55 | மாத்திரை வருத்தனம் | - | - | - | - | - | - | - | + | + | - | - | +[1] | - | - | + | + | + 1149 | +[2] 199 | - | + | + | - | - | - | - | + | - | + | + | + | + | - | - | - | - | - | + | - |
| 56 | மாலை மாற்று | + | + | + | + | + | - | + | + | - | - | - | + 287 | + | - | + | + | + 1146 | + 196 | + | + | + | - | + | + | - | - | - | + | + | + | + | - | + | + | - | - | + | - |
| 57 | முண்டகப்பாட்டு | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 58 | மும்மணடில வெண்பா | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | + | + | - | + | + | - | + | - | - | - | - | + |
| 59 | மும்மீன் பநதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - |
| 60 | முரச பந்தம் | - | - | - | - | - | - | - | + | + | + | + 284 | + | - | + | + | - | - | + 199 | - | + | + | - | - | - | - | - | + | + | + | - | - | - | - | + | - | - | - | - |
| 61 | வக்கிர உத்தி | - | - | - | - | - | - | - | - | - | - | + 279 | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 62 | வாவன் ஞாறறு | - | + | - | - | - | - | - | - | + | + | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 63 | விகறப நடை | + | + | + | + | - | - | - | - | + | + | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 64 | விசிததிர அகவல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 65 | விசித்திரப்பா | - | - | + | + | - | - | - | - | + | + | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 66 | விததாரக்கா | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 67 | விதான வருக்கம் | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 68 | விருச்சிக பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | - | - | - | - | - | - | - | - |
| 69 | விளக்கு பநதம் | - | - | - | - | - | - | - | - | + | + | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 70 | வினாவுத்தரம் | + | - | + | + | + | + | + | + | - | - | + 280 | + | + | - | + | + | + 1143 | +[3] | + | - | - | - | - | - | - | + | - | - | + | + | + | - | - | - | - | - | - | + |
| 71 | வேலாயுத பந்தம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | + | - | + | + | + | - | - | + | - | - | - |

1 மாத்திரைப் பெருக்கம் 2 மாத்திரை வர்த்தனம் 3 வினாவிடை

குறிப்பு :

1 அட்டவணையில் -, + குறிகள் குறிப்பிட்ட சித்திரக்கவி முறையே இடம்பெறாமையையும் இடம் பெற்றுள்ளமையையும் குறிக்கின்றன

2. அட்டவணையில் + என்பதற்கு மேல் எண்ணால் காட்டப்பட்டவை அணி இலக்கண நூல்களில் பரியாயப் பெயர்களால் சுட்டப்பட்டுள்ளன

3 + என்பதின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் நூற்பா எண்கள்

4 குவலயானந்தத்தில் காணப்பெறும் * குறியீடு மீனாட்சி கவிராயர் இயற்றிய குவலயானந்தத்தைக் குறிக்கிறது

5 பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் சித்திரக்கவிகள் என்பவை உரையின் வாயிலாக அறியப்படுபவை ஆகும்

# பயன்பட்ட நூல்கள்


| எண் | நூல் பெயர் | ஆசிரியோர் பதிப்பாசிரியர்: தொகுப்பாசிரியர் | பதிப்பு |
|---|---|---|---|
| 1. | அணியிலக்கண வரலாறு | இரா. கண்ணன் | சென்னை கூத்தன் பதிப்பகம், 2003 |
| 2 | அணியில் அகராதி | இரா. விசயராணி | சென்னை சென்னைப் பல்கலைக் கழக ஆய்வேடு, 1984 |
| 3 | அறுவகை இலக்கணம் | தண்டபாணி சுவாமிகள் | பேரூர்த் தமிழ்க் கல்லூரி, 1978 |
| 4 | இரத்தினாசல யமக அந்தாதி | சிரவைக் கந்தசாமி சுவாமிகள் | சிரவை ஆதீனம், 1919 |
| 5. | இலக்கண விளக்கம் (பொருளதிகாரம்-அணியியல்) | வைத்தியநாத தேசிகர் (பதிப்பாசிரியர் தி வே கோபாலையர்) | தஞ்சை சரசுவதி மகால், 1973 |
| 6. | இலக்கண விளக்கப் பாட்டியல் | வைத்தியநாத தேசிகர் | தஞ்சை சரசுவதி மகால், 1974 |
| 7 | எழுகூற்றிருக்கை | இரா கண்ணன் (பதிப்பாசிரியர்) | சென்னை அப்பர் பதிப்பகம், 2003 |
| 8. | ஏகத்தாள் இதழகல் அந்தாதி | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | சிரவை ஆதினம், சுவடி |
| 9 | ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு | குரு இராமசாமிக்கோன் (பதிப்பாசிரியர்) | மதுரை ஸ்ரீராமச்சந்திர விலாஸ் பிரஸ், 1963 |
| 10. | கந்தன் சித்திர பந்தன மாலை | ஆர். என். கல்யாண சுந்தர கவுண்டர் | கோவை சத்திவடிவேல் அச்சுக்கூடம், 1932 |
| 11. | கம்பராமாயணம் | பதிப்பாசிரியர் குழு | சென்னை கம்பன் கழகம் |
| 12 | கலாநிதி நா சுப்பிரமணியனின் ஆய்வுகள் - பார்வைகள் - பதிவுகள் (தொகுதி 2) | கௌசல்யா சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்) | சென்னை சவுத் விஷன், 2005 |
| 13. | காஞ்சி புராணம் | சிவஞான முனிவர் (குறிப்புரை சி அருணை வடிவேலு முதலியார்) | காஞ்சிபுரம் மெய்க்கண்டார் கழகம், 1937 |
| 14. | குவலயானந்தம் | ச வே சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்) | சென்னை தமிழ்ப் பதிப்பகம், 1979 |
| 15 | குவிபாவொருபது | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | புலவர் ப வெ நாகராஜன் கையெழுத்துச் சுவடி |
| 16 | குறுக்குத்துறைக் கலம்பகம் | சிவதாசன் | நூலாசிரியர் |
| 17. | சிங்கப்பூர் மரபுக் கவிதைகள் - ஒரு திறனாய்வு | ஏ ஆர் ஏ சிவகுமாரன் | சென்னை பாரதி புத்தகாலயம், 2001 |
| 18 | சித்ர கவிகள் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | தஞ்சாவூர் சால்பகம், 1987 |
| 19. | சித்திர கவிகள் | சி ந சதாசிவ பண்டிதர் | சிங்கப்பூர் தீனோதயவேந்திர சாலை, 1887 |
| 20 | சித்திர கவிகள் | பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் | சென்னை ஸ்ரீ கைலாஸ் பிரிண்டர்ஸ், 1998 |
| 21. | சித்திர கவிகள் | சு பொன்சுவாமி செட்டியார் | ஊத்தங்கரை இராசீபுரம் எஸ் பி இளங்கோசேரமான் |

| எண் | நூல் பெயர் | ஆசிரியர்<br>பதிப்பாசிரியர்<br>தொகுப்பாசிரியர் | பதிப்பு |
|---|---|---|---|
| 22 | சித்திரக் கவிகள்<br>(ஆய்வு நூல்) | வே இரா மாதவன் | சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983 |
| 23 | சித்திர கவி விளக்கம் | வி கோ சூரியநாராயண சாஸ்திரி<br>உரை - பலராம ஐயர் | வி சு சுவாமிநாதன், 1939 |
| 24 | சிரவை மும்மணிக் கோவை | ஜெ பிருந்தாஸ்ரீ (பதிப்பாசிரியர்) | தஞ்சாவூர் குமார் பிரஸ், 2003 |
| 25 | சுவாமிநாதம் | சாமி கவிராயர்<br>செ வை சண்முகம் (பதிப்பாசிரியர்) | அண்ணாமலை நகர்<br>அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1975 |
| 26 | சூடாமணி நிகண்டு | மண்டல புருடர் | சென்னை. சாந்தி சாதனா, 2004 |
| 27 | சேந்தன் திவாகரம் | சேந்தனார் | சென்னை சாந்தி சாதனா, 2004 |
| 28 | தண்டியலங்காரம் | சுப்பிரமணிய தேசிகர் உரை | சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1997 |
| 29 | தண்டியலங்காரம் | வை மு கோபாலகிருஷ்ண மாச்சார்யார் உரை | சென்னை வை மு கோ பதிப்பு, 1973 |
| 30 | தமிழ்ப் பேரகராதி | சென்னைப் பல்கலைக்கழகம் | சென்னை சென்னைப் பலகலைக்கழகம், 1982 |
| 31. | தமிழ் விடுதூது | பதிப்பாசிரியர் உ வே சா. | சென்னை உ வே சாமிநாதைய்யர் நூல்நிலையம், 1932 |
| 32 | தனிப்பாடல் திரட்டு<br>(இரண்டாம் பாகம்) | கா இராமசாமி நாயுடு உரை | சென்னை வித்யாரத்நாகர அச்சுக்கூடம், 1933 |
| 33 | தனிப்பாடல் திரட்டு | புலவர் அ மாணிக்கம்<br>(உரையாசிரியர்) | சென்னை பூம்புகார் பதிப்பகம், 1998 |
| 34 | தனிப்பாடல் திரட்டு<br>(நான்கு தொகுதிகள்) | சு அ இராமசாமிப் புலவர் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1974 |
| 35. | தி க சண்முகம் சித்திர கவி மாலை | பி வி அப்துல்கபூர் சாஹிப் புலவர் | சென்னை ஔவையகம், 1956 |
| 36 | தி நா ராமச்சந்திரன் சித்திர கவி மாலை | பி வி அப்துல்கபூர் சாஹிப் புலவர் | நூலாசிரியர் |
| 37 | திருஎழுகூற்றிருக்கை | சி ஜகந்நாதாசாரியர்<br>(உரையாசிரியர்) | திருவண்ணாமலை'<br>அருணாசலேச்வரர் திருக்கோயில், 1982 |
| 38 | திருஅம்பர்ப்புராணம் | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை | சென்னை உ வே சாமிநாதையர் நூல்நிலையம், 1965 |
| 39 | திருஞானசம்பந்தர் தேவாரம் | மயிலை இளமுருகனார்<br>(பதிப்பாசிரியர்) | சமாஜப் பதிப்பு 1953 |
| 40 | திருநாகைக் காரோணப் புராணம் | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை | திருவாடுதுறை ஆதீனம் |
| 41 | திருவலங்கற்றிரட்டு | ப. இராமன் (பதிப்பாசிரியர்) | சென்னை' பதிப்பாசிரியர், 2004 |
| 42. | திருவிளக்காயிரம் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | திருவாமாத்தூர் கௌமார மடாலயம், 1931 |
| 43. | தொன்னூல் விளக்கம் | வீரமாமுனிவர்<br>ச வே சுப்பிரமணியன்<br>(பதிப்பாசிரியர்) | அடையாறு தமிழ்ப் பதிப்பகம், 1978 |

| எண் | நூல் பெயர் | ஆசிரியர் பதிப்பாசிரியர் தொகுப்பாசிரியர் | பதிப்பு |
|---|---|---|---|
| 44 | தோத்திர மஞ்சரி | சிரவை கோபு, புலவர் ப வெ நாகராஜன் | சிரவை ஆதீனம், 2003 |
| 45 | நவநீதப் பாட்டியல் | நவநீத நாடனார் | சென்னை உ வே சாமிநாதையர் நூல்நிலையம், 1961 |
| 46 | நாலாயிரத் திவ்ய பிரபந்தம் | ஆழ்வார்கள் | சென்னை பி. இரத்தின நாயக்கர் சன்ஸ், 1968 |
| 47 | பத்துப் பிரபந்தம் | குமரகுருதாச சுவாமிகள் | |
| 48 | பிங்கல நிகண்டு | பிங்கல முனிவர் | சென்னை சாந்தி சாதனா, 2004 |
| 49 | பிரபந்தத் திரட்டு (மாம்பழக் கவிச்சிங்க நாவலர்) | எம் பி பழநிச்சாமி (பதிப்பாசிரியர்) | மதுரை விவேகபாநு அச்சுயந்தி சாலை, 1908 |
| 50. | பிரபந்த தீபம் | ச வே. சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்) | சென்னை தமிழ்ப் பதிப்பகம், 1980 |
| 51 | பிரபந்த மரபியல் | மு அருணாசலம் (பதிப்பாசிரியர்) | சென்னை தமிழ்நாடு அரசு, 1976 |
| 52 | புதுக்கவிதை இலக்கணம் | இரா இராசேந்திரன் | சென்னை இதயரோஜா பதிப்பகம், 2004 |
| 53 | பொருட்டொகை நிகண்டு | குடுமிமாமலை சுப்பிரமணிய பாரதியார் | மதுரை மதுரைத் தமிழ்ச் சங்கம் |
| 54 | மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளின் நவீன சிந்தனைகள் | கோ புண்ணியவான் | கோலாலம்பூர் மலாயாப் பல்கலைக் கழகம், 2005 |
| 55 | மறைந்துபோன தமிழ் நூல்கள் | மயிலை சீனி வேங்கடசாமி | சென்னை பாரி நிலையம், 1959 |
| 56 | மாறனலங்காரம் | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் | மதுரை தமிழ்ச்சங்கமுத்திராசாலை, 1915 |
| 57 | முத்துவீரியம் | முத்துவீர உபாத்தியாயர் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1972 |
| 58 | யாப்பருங்கலம் | திவான் பஹதூர் ச பவானந்தம் பிள்ளை | செந்தமிழ்க் கழகம், 1929 |
| 59. | யாப்பருங்கல விருத்தி | மே வீ வேணுகோபாலப் பிள்ளை (பதிப்பாசிரியர்) | சென்னை அரசினர் கீழ்திசை சுவடியில் நூலகம், 1960 |
| 60. | யாப்பருங்கல விருத்தி | மே வீ வேணுகோபாலப் பிள்ளை (பதிப்பாசிரியர்) | சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998 |
| 61. | வீரசோழியம் | புத்தமித்திரனார் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1970 |
| 62 | வெண்பாப் பாட்டியல் | வச்சணந்தி முனிவர் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1976 |
| 63 | ஸ்ரீமத் இராமாயணம் | ப வெ பழனிமலை நாயனார் | கோயமுத்தூர் வித்யாபாநு அச்சுக்கூடம், 1927 |
| 64 | A Dictionary of Tamil Literary And Critical Terms | Dr V Murugan (Editor) | Chennai Institute of asian studies, 1999 |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அம்பர்ப்பு. | அம்பர்ப் புராணம் |
| இலக் விள | இலக்கண விளக்கம் |
| இலக் விள பா | இலக்கண விளக்கப் பாட்டியல் |
| ஊ தனிப் தி | ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு |
| க சி பந் மா. | கந்தன் சித்திர பந்தன மாலை |
| கழகம் தனிப் தி | கழகம் தனிப்பாடல் திரட்டு |
| காஞ்சிப்பு | காஞ்சிப் புராணம் |
| குவல | குவலயானந்தம் |
| குறுக்குத்து கலம் | குறுக்குத்துறைக் கலம்பகம் |
| சி க | சித்ர கவிகள் |
| சித் க. | சித்திர கவிகள் |
| சி க வி | சித்திர கவி விளக்கம் |
| சிரவை மு கோ. | சிரவை மும்மணிக் கோவை |
| சுவாமி. | சுவாமிநாதம் |
| சூடா | சூடாமணி நிகண்டு |
| தண்டி.உ. | தண்டியலங்கார உரை |
| தண்டி. | தண்டியலங்காரம் |
| தி க ச.சி க மா | தி க சண்முகம் சித்திர கவி மாலை |
| தி நா ரா | தி நா ராமச்சந்திரன் சித்திர கவி மாலை |
| திருவலங். | திருவலங்கற்றிரட்டு |
| திருவிளக். | திருவிளக்காயிரம் |
| திவா | திவாகரம் |
| தோ.ம. | தோத்திர மஞ்சரி |
| நவ பா. | நவநீதப் பாட்டியல் |
| நாகைக் புரா | நாகைக் காரோணப் புராணம் |
| பிங். | பிங்கல நிகண்டு |
| பிர தி | பிரபந்தத் திரட்டு |
| பிர மர | பிரபந்த மரபியல் |
| மாணி தனிப்.தி. | மாணிக்கம் தனிப்பாடல் திரட்டு |
| மாறனலங் உ. | மாறனலங்கார உரை |
| மாறனலங். | மாறனலங்காரம் |
| மு வீ. | முத்து வீரியம் |
| யா கலம் | யாப்பருங்கலம் |
| யா கல.விரு. | யாப்பருங்கல விருத்தி |
| வீரசோ உ. | வீரசோழிய உரை |
| வீரசோ. | வீரசோழியம் |
| வெண் பா | வெண்பாப் பாட்டியல் |
| ஸ்ரீமத் இரா. | ஸ்ரீமத் இராமாயணம் |

# சித்திரக்கவிக் களஞ்சியம்

## அக்கரச் சுதகம் (அட்சரச் சுதகம், அக்ஷரச் சுதகம்)

அக்கரம் - எழுத்து, சுதகம் - குறைப்பு அக்கரச் சுதகமென்பது எழுத்துகளைக் குறைத்தலால் அமையும் சித்திரக்கவி அதாவது பொருள் தரக்கூடிய சொல்லொன்றைக் கூறி அதில் ஒவ்வொரு எழுத்தாக நீக்க, வேறுவேறு பொருள் தருமாறு அமைந்திருக்கும் செய்யுள் இதனை முத்துவீரியம் *எழுத்தழிவு* என்றும், சுவாமிநாதம் *எழுத்துச் சுதம்* என்றும் கூறுகின்றன

(எ டு) கநகாரி - திருமால்
நகாரி - முருகவேள்
காரி - மாசாத்தன்

இது நகம், கநகம், கோகநகம் என்பது போல வரும் எழுத்து வருத்தனைக்கு மாறானது பெரும்பாலும் நிரனிறையணியோடு (பொருள்) சேர்ந்து வரும்

*ஒருபொருள் பயந்தஒரு தொடர் மொழியாய்*
*வருவதைஓர் எழுத்தாய்க் குறை வகுப்பில்*
*சுருங்குபு பலபொருள்தோன் றுவதுஆய*
*அருங்கவி அக்கரச்சுதகம் ஆகும்* (*மாறனலங்காரம்*, 277)

*ஒரு பொருள் பயப்பது ஒருமொழி யிருந்ததில்*
*ஒவ்வோர் அக்கரம் ஒழிக்கவெவ் வேறு*
*சொல்லும் பொருளும் தோன்றுவது எழுத்தழிவு*
*ஆகும் என்மனார் அறிந்திசி னோரே* (*முத்துவீரியம்*, 1145)

*.. ஒருசொல்*
*எழுத்து ஓரொன்று அறப் பொருள்வே றாம்எழுத்துச் சுதமே* (*சுவாமிநாதம்*, 196)

[யாப்பருங்கல விருத்தி, 96, தண்டியலங்காரம், 98, இலக்கண விளக்கம், 690 ]

***சான்றுப் பாடல்***

1. *ஒளிகொண்டபுத் தூர்உறை கோதை தீந்தேன்*
*துளிகொண்டபூந் துளபத் தோன்ற லாற்கீந்த*
*தளிகொண்டதை அணிந்த தன்றதனைப்பற்றல்*
*களிவண்டிமிர் தேங்கமழ் வாசிகை சிகை கை*
(*மாறனலங்காரம்*. *மேற்கோள் பாடல்*, 777)

இப்பாடலில்,

வாசிகை - மாலை
சிகை - திருக்குழல்
கை - திருக்கை

என எழுத்துகள் குறைந்து வெவ்வேறு பொருள் உணர்த்துவதை அறியலாம்

2. *சாதம் அந்தவ னம்தழை வித்தலும்*
*மேதம் ஏதும்இன் றாக இரித்தலும்*
*காதல் பூப்ப இடந்தொறும் காட்டலும்*
*போத கம்தகம் கம்எனப் போற்றுமே* (*திருஅம்பர்ப்புராணம்*, 280)

*உரை* சாதம் அந்து அ வனம் தழைவித்தலும் - உயிர்களுக்குப் பிறவியை முடிவுக்குக் கொண்டு வருவதாகிய அந்த அழகை (உயர்வை) உண்டாக்குவதும்(பிறவியை ஒழித்தலும் என்பது கருத்து); மேதம் ஏதும் இன்று ஆக இரித்தலும் - உடலில் கொழுப்புப் பொருள் சிறிதும் மீதம் இல்லாமல் முற்றிலுமாக வற்றச் செய்வதும், காதல் பூப்ப இடம்தொறும் காட்டலும் - காண்பவர்கள் மகிழும்படி எல்லா இடங்களிலும் காட்சி தருவதும்; போதகம், தகம், கம் எனப் போற்றும் ஏ - முறையே மெய்ஞ்ஞானம், வெப்பம், நீர் என எண்ணி மகிழ்வர்

*குறிப்பு* பிறப்பிறப்பை ஒழிப்பது மெய்யறிவாகிய போதகம், உடலின் கொழுப்பை முற்றிலும் வற்றச்செய்வது வெப்பமாகிய தகம்; எல்லா இடங்களிலும் அழகாக நிறைந்திருப்பது தண்ணீராகிய கம் எனப் பொருள்கொள்க இது நேர்நிரனிறை

போதகம் என ஒரு சொல்லை நிறுத்தி அதிலிருந்து ஒவ்வோர் எழுத்தாகக் குறைத்துத் தகம், கம் என வேறு இரு சொற்களை உருவாக்கிக் கொண்டதால் அக்கரச்சுதகம் ஆயிற்று *

### அக்கர தாரணை

▶ தாரணை

### அக்கர வர்த்தனம்

▶ அக்கர வருத்தனம்

### அக்கர வர்த்தனை

▶ அக்கர வருத்தனம்

### அக்கர வர்த்தி

▶ அக்கர வருத்தனம்

### அக்கர வருத்தனம்

ஓரெழுத்து ஒரு மொழியாகப் பொருள் கொடுத்துப் பின் அதனுடன் ஓரெழுத்து கூடப் பிறிதொரு பொருள் கொடுத்து, இவ்வாறே ஒவ்வோர் எழுத்தாகக் கூடக்கூட வெவ்வேறு மொழியாகப் பொருள் தருவது அக்கர வருத்தனமாகும் தமிழ்விடு தூது இதனை *அக்கர வர்த்தி* என்று குறிப்பிடுகிறது

(எ-டு) கை - படையுறுப்பு
வகை - வாகையென்னும் வெற்றி
உவகை - களிப்பு

இது அக்கரச் சுதகத்துக்கு மாறானது

*ஒருதொடர் மொழிற்று ஓர்எழுத் தினைப்பிரித்து*
*ஒருபொருள்தர வைத்துஓர் ஒன்றாக*
*மிக்கபல் பொருள்தர மேல்வைப் பனவே*
*அக்கர வருத்தனை ஆகும் என்ப* (மாறனலங்காரம், 278)

*பதங்களின் அக்கரங் களைப்பகுத்து ஒன்றற்கு*
*உரியஅக் கரங்களை மற்றொரு பதத்தொடு*
*புணர்த்திநூ தனப்பொருள் புதுக்குவது எழுத்து*
*வருத்தனம் ஆகும்என வழுத்தப் படுமே* (முத்துவீரியம், 1144)

[யாப்பருங்கலம், 96; தண்டியலங்காரம், 98, இலக்கணவிளக்கம், 690; சுவாமிநாதம், 195 ]

***சான்றுப் பாடல்***

1. *ஏந்திய வெண்படையும் முன்னாள் எடுத்ததுவும்*
*பூந்துகிலும் மால்உந்தி பூத்ததுவும் - வாய்ந்த*
*உலைவில் எழுத்துஅடைவே ஓர்ஒன்றாச் சேர்க்கத்*
*தலைமலைபொன் தாமரைஎன்று ஆம்*

(தண்டியலங்காரம்: மேற்கோள் பாடல், ப 227)

திருமால் கையில் இருப்பது சங்கு இது கம்பு எனப்படும். இதில் 'பு' - வை நீக்கக் கம் என்று ஆகும் இதன் முன்னால் 'ந' என்பதைச் சேர்க்க நகம் என்னும் சொல் கிடைக்கிறது இதன்முன் 'க' என்னும் எழுத்தைச் சேர்க்க கநகம் என்னும் சொல் கிடைக்கும் இதனுடன் 'கோ' என்பதைச் சேர்க்கக் கோகநகம் ஆகும்

கம் - தலை
ந+கம் - நகம் - மலை
க+நகம் - கநகம் - பொன்
கோ+கநகம் - கோகநகம் - தாமரை

2. *சோலையை ஓர்எழுத்தால் என்சொல்லும்? தொக்கதன்மேல்*
*நீலப்பேர் எவ்வெழுத்தி னால்நேரும்? - மாலைக்*
*குடைவேந்தன் சென்னிக் குலநதியின் பேரைக்*
*கடைசேர்ந்த ஓர்எழுத்தால் காண்* (தனிப்பாடல்)

கா - சோலை
காவி - நீலப்பூ, குவளை
காவிரி - ஆறு

3. *ஓரும் ஓர்உயி ரால்பசு ஓதலுற்று*
*ஆரும் மற்றொன்ற னால்உயிர் ஆக்குபு*
*சேரும் மற்றொன்றின் எத்தருச் செப்பலாம்*
*வாரும் மற்றுஅஃது எங்கும் மலருமே* (*திருஅம்பர்ப்புராணம்*, 279)

*உரை* ஓரும் ஓர் உயிரால் - அனைவரும் அறிந்ததாகிய உயிரெழுத்து ஒன்றைக்கொண்டு, பசு ஓதலுற்று - பசுமாடு எனப்பொருள் சொல்லி (அவ்வெழுத்து ஆ), ஆரும் மற்றொன்றனால் - (அந்த ஆ என்னும் எழுத்தோடு) சேரும் வேறொரு எழுத்தைக் கொண்டு; உயிர் ஆக்குபு - உயிர் எனப் பொருள் தரும் சொல்லாக ஆக்கி (சேரும் எழுத்து வி, சொல் - ஆவி), சேரும் மற்றொன்றின் - (அந்த ஆவி என்னும் சொல்லோடு) கூடுகின்ற வேறு எழுத்தால்; எ தரு செப்பலாம் - எந்தத் தாவரத்தைக் குறிக்கலாமோ (சேரும் எழுத்து 'ரை'; சொல் - ஆவிரை), வாரும் அஃது - அனைவருக்கும் தெரிந்த அந்தச் செடி (ஆவிரைச் செடி), எங்கும் மலரும் ஏ - எல்லா இடங்களிலும் பூத்திருக்கும்

*குறிப்பு* தரு என்னும் சொல் மரத்தைக் குறிக்காமல் தாவரப் பொதுவாக நின்றது எ, து செப்பலாம் அது எங்கும் மலரும் என்பது பொருள் முடிபு

இச்செய்யுளில் ஓரெழுத்தொருமொழியாகிய ஆ என்பதனை நிறுத்தி, அதனோடு வி என்னும் உயிர்மெய்யைப் பொருத்தி ஆவி என்றும், அதனோடு ரை என்னும் உயிர்மெய்யைக் கூட்டி ஆவிரை என்றும் வேறுவேறு சொற்களை உருவாக்கிக் கொண்டதால் இது அக்கர வருத்தனம் ஆயிற்று *

## அக்கர வருத்தனை

▶ அக்கர வருத்தனம்

## அட்சரச் சுதகம்

▶ அக்கரச்சுதகம்

## அடிமயக்கு

▶ பாத மயக்கு

## அரவுச் சக்கரம்

▶ சக்கரம் ▼ அரவுச் சக்கரம் என்பதற்கு யாப்பருங்கல விருத்தி பொருட்குறிப்பகராதியில் நாகபந்தம் என்று பொருள் தரப்பட்டுள்ளது

## அலகிருக்கை வெண்பா

'விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டு' என்னும் யாப்பருங்கல விருத்தி (96 14) அடிக்குப் பழைய விருத்தியுரையினின்றும் இவ்வகைச் சித்திர(க்)கவியினை அறிய முடிகிறது எனினும் இக்கவி பற்றிய விளக்கம் எதுவும் தெளிவுபடவில்லை

## அளவுச் சுதகம்

▶ மாத்திரைச் சுருக்கம்

## அறுமீன் பந்தனம்

ஆறு மீன்கள் ஒன்றையொன்று சந்திக்கும் வகையில் அமைந்த சித்திரத்தில் பொருந்தும் வகையில் எழுத்துகள் அமையப் பாடப்படும் செய்யுள்.



***சான்றுப் பாடல்***

1. *சங்கரன் தனையா சாரங்க மருகா*
*ஐங்கரன் றம்பீ காரணி புதல்வா*
*மணிமுடி யவனே மலரணி நவீரா*
*திணியுறு பகனே சேணவிர் மார்ப*
*கவினுறு பாதா காத்திடும் பரனே*
*தவித்திடா தாளே சாமீ கோனே*
*தொழுதிவ ணுனையே நானே*
*பாடினேனே பாப்புனைந் தேனே*
(***கந்தன் சித்திரபந்தன மாலை***, ப. 29)

2. *சுரிகுழல் சததி சுடர்தீ ஆடி அரியும்*
*திருவுமோடு இபன்குரு சேயும்*
*அருளிட இதமாய் அனைவரும் ஏவத்*
*திருவார் தவச்சிர வாபுரி நாதன்*
*அலகில் தளியை வடித்தே சாநதி*
*நிலவச் செய்தே ஆசான் கந்த*
*சாமி குருவே ளாகச்*
*சிந்தை மேவ வசமா னானே* (*தோத்திர மஞ்சரி, பக்.* 70-71)

**வாசிக்கும் முறை**

ஆறு மீன்களுக்கும் நடுவில் அமைந்துள்ள அறுகோணத்தின் உச்சியில் தொடங்கி, இடப்புறம் உள்ள எழுத்தொன்றை வாசித்து அதற்கு மேல் உள்ள நடுமீனின் உடலில் மேலேறி இறங்கி, இப்படியே ஆறு மீன்களிலும் வரிசையாகப் படித்தால் செய்யுள் நிறைவடையும் நடுவிலுள்ள அறுகோணத்தில் உச்சியிலிருந்து வலமாகப் படித்தால் முதல் பாடலில் சரவணபவ என்பதும், இரண்டாம் பாடலில் பாட்டுடைத் தலைவர் பெயராகிய சுந்தரசாமி என்பதும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்

| | முதல் பாடல் | இரண்டாம் பாடல் |
|---|---|---|
| 1 - ஆம் எழுத்து | ச | சு |
| 18 - ஆம் எழுத்து | ர | ந் |
| 35 - ஆம் எழுத்து | வ | த |
| 52 - ஆம் எழுத்து | ண | ர |
| 69 - ஆம் எழுத்து | ப | சா |
| 86 - ஆம் எழுத்து | வ | மி |

**துருவம்**

முதல் பாடல். 6/99 - னை, 14/23 - கா, 31/40 - ணி, 48/57 - ப, 65/74 - த், 82/91 - னே
இரண்டாம் பாடல் 6/99 - ச, 14/23 - டி, 31/40 - ரு, 48/57 - த, 65/74 - வ, 82/91 - க
பாடலில் அமையும் எழுத்துகள் 102; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 96.

## அஷ்ட நாகபந்தம்

▶ நாகபந்தம் ▼

## அக்ஷரச் சுதகம்

▶ அக்கரச்சுதகம்

## ஆகாயச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## ஆறாரைச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## இடையினப்பாட்டு

▶ ஓரினப்பாட்டு ▼

## இதழகல்

▶ நிரோட்டகம்.

## இரட்டை நாகபந்தம்

▶ நாகபந்தம் ▼

## இரட்டை வெண்பா (துவி வெண்பா)

ஒரு வெண்பாவை இயற்றிப் பின் அதனையே இரண்டாவது சீரிலிருந்து தொடங்கிப் பிறிதொரு வெண்பாவாக உருவாக்குவது இரட்டை வெண்பா எனப்படும்

முதலடியின் இரண்டாம் சீர் இரண்டாம் வெண்பாவில் முதற் சீராக வரும் முதற் சீர் இறுதிச்சீராக அமையும் இரண்டாம் வெண்பாவின் பொருளும் முதல் வெண்பாவின் பொருளும் ஒத்து வரும்

***சான்றுப் பாடல்***

*நாடுவார் சித்தம் நயந்தே சினம்அகலத்*
*தேடுவார் நித்தம் தெளிவுபெற - நீடுயர்ந்த*
*அத்தன் மகன்அருளுக் கன்றாடம் வந்திப்பார்*
*சக்தி மகன்அருமைத் தாள்*

*சித்தம் நயந்தே சினம்அகலத் தேடுவார்*
*நித்தம் தெளிவுபெற நீடுயர்ந்த - அத்தன்*
*மகன்அருளுக் கன்றாடம் வந்திப்பார் சக்தி*
*மகன்அருமைத் தாள்நாடு வார்*
(*ஏ.ஆர்.ஏ சிவகுமாரன், சிங்கப்பூர் மரபுக் கவிதைகள் - ஒரு திறனாய்வு, ப* 130)

நூலாசிரியர் இவ்வெண்பாவைத் துவி வெண்பா என்று குறிப்பிடுகிறார் (துவி - இரண்டு)

இது மும்மண்டில வெண்பா எனப் பழைய ஆசிரியர்கள் கூறுவதன் வழித்தோன்றலாகப் புதியதாகப் படைத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது

## இரத பந்தம் (தேர்க்கவி, தேர்ப் பிணிப்பு)

தேர் வடிவிலான சித்திரம் ஒன்றை வரைந்து அதன் சக்கரம், அடிக்கட்டை, பக்கக் கம்பம், சிகரம் ஆகியவற்றில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்தி இயற்றப்படும் செய்யுள்

இச் சித்திரக்கவி (வடிவ அடிப்படையில்) பல வகையாக அமைக்கப்படுகிறது

*தேர்என மந்திரிச் செலவுஎனச் செய்யுளை*
*ஏர்தர அடக்குவது இரத பெந்தம்* (*மாறனலங்காரம்*, 286)

*... பன்மூன்றுப தினொன்று*
*வியன்ஒன்பான் தட்டுஉடைத்தாய்க் கீழ்த்தட்டு முதலே*
*ஓவலிடம் வலஞ்சுற்றி மேல்போய்நேர் இழிந்தே*
*ஒத்துக் கீழ்த்தட்டின் இறும் தேர்க்கவியின் அரணே* (*சுவாமிநாதம்*, 200)

***சான்றுப் பாடல்***

1 *இருள்பொருதா வம்பலச்சித் தென்னுமுரு காநீ*
*டிருவிண்ணோர் தேடுமருந் தேமாண் - பொருவாச்சீர்*
*தேசுதருஞ் செந்திறுந் தீர்த்தவிற லோங்குசிதா*
*வாசிறந்த மாவின் பருள்*
(*திருவலங்கற்றிரட்டு, பக்*. 7 - 8)

**வாசிக்கும் முறை**

தேரின் இடப்புறச் சக்கரத்தின் எழுத்தை வாசித்து அடுத்து வலப்புறச் சக்கரத்தின் எழுத்தை வாசித்துப் பின் அடிக்கட்டை எழுத்தை வாசித்து வலம் இடம், இடம் வலம் என மாறிமாறித் தட்டுகளில் வாசித்தவாறே மேலேறிச் சென்று அங்கிருந்து நேரே கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்




**துருவம்**

3/73 - ள், 5/72 - ரு, 9/71 - ப, 15/70 - ன், 23/69 - வி, 33/68 - மா, 43/67 - த, 51/66 - ந், 57/65 - ற, 6/64 - சி

செய்யுளில் அமையும் எழுத்துகள் 73; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 63.



2 *ஒருவரு மாவின் கனிவானத் தாருண வேதமுறா*
*முருகலர் பூங்கொம்பர் தாமுத வேது முதலுணர்த்தார்*
*திருவள வாத வவரென வேவந்து சேருமண்மீ*
*தருணமெயயை யாயநதொழி யாவழியாத வளதததுவே*
(திருஅம்பர்ப்புராணம், ப 293)

**வாசிக்கும் முறை**

தேரின் இடதுபுறச் சக்கரத்தின் மைய எழுத்தை வாசித்து சக்கரத்தை வலஞ்சுற்றிப் படித்து அடிக்கட்டை எழுத்துகளின் வழியே வலதுபுறச் சக்கரத்திற்குச் சென்று அங்கும் அவ்வாறே படித்து அடிக்கட்டை எழுத்துகளை மீண்டும் வாசித்து மேலேறி இடம் வலம், வலம் இடம் என மாறிமாறிப் படித்தவாறே மேலேறிச் சென்று அங்கிருந்து நேர்கோட்டில் கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

2/14 - ரு, 16/34/84 - வே, 17/33 - த, 18/20/32 - மு, 35/83 - து, 37/82 - த, 41/81 - த், 47/80 - ள, 55/79 - வ, 63/78 - த, 69/77 - யா, 73/75 - ழி

இனி இரண்டு செய்யுள்களைக் கொண்டதாகவும் தேர்ப்பிணிப்பு (இரத பந்தம்) அமைக்கப்படுவதுண்டு அதுவருமாறு

3. (அ) *நாராரா ரய நயன யணாவிண்ண்*
*ணாராம ணாயனில மாயவா - சீராய*
*நன்கா நமநம நன்கா நமநம*
*மன்காமன் றாதாய் நம* (மாறனலங்காரம்: மேற்கோள் பாடல், 791)

(ஆ) *மாயவனே வேத மதியே வயநாக*
*பாயவனே தேநளின பாதா பராபரா*
*தூயவனே காரணா பூரணா தோணிலமா*
*ணாயகனே சீராக நாராயணாய நம* (மாறனலங்காரம்: மேற்கோள் பாடல், 792)



**வாசிக்கும் முறை**

முதல் வெண்பா சிகரப்பகுதியில் தொடங்கி வலம் இடம், இடம் வலம் என மாறிமாறிப் படித்துக் கீழ்நோக்கி வருகையில் மேற்பாதியிலேயே நிறைவடையும் இதில் மேற்பாதியின் சிகரத்திலிருந்து கீழ்நோக்குகையிலும், சித்திரத்தின் இரு மருங்கிலும் நாராயணாயநம எனும் திருவெட்டெழுத்து கிடைக்கும்

இரண்டாம் செய்யுளைக் கீழ்ப்பாதியின் இடப்புற மேல் தளத்தில் தொடங்கி வலம் இடம், இடம்வலம் என மாறிமாறிப் படித்துக் கீழ் இறங்குகையில் நிறைவடையும் அடியறையிலிருந்து மேல்நோக்கி ஏழு அறைகளில் படிக்கையில் நாராயணாயநம எனும் திருவெட்டெழுத்து கிடைக்கும்

**துருவம்**

முதல் பாடல் துருவம் இல்லை

இரண்டாம் பாடல் 7/55 - ம, 19/54 - ந, 29/53 - ய, 37/52 - ணா, 43/51 - ய, 47/50 - ரா

4 (அ) *நானே வலவேலை நம்பினேன் சண்டசமன்*
*தானேவு பாசமினிச் சங்கிவிழத் - தானேப*
*மால்தனிமா மாப்பிள்ளையே மால்கால் பழனிமலை*
*வேலவனே கந்தா விளம்பு*

(ஆ) *ஆமாறு வீருதிகழ் ஆரணனே யாற்றுபவம்*
*போமாறு மாபதீ பூரணி - கோமேலன்*
*சேயே குமாரகுல தீப திருவீறு*
*மாயோன் மருகா மதி*

**(கந்தன் சித்திரபந்தன மாலை, பக். 13 - 14)**



**வாசிக்கும் முறை**

தேர்த்தட்டின் இடப்புற முனையில் தொடங்கி வலமாக வாசித்து ஒரு கட்டம் கீழிறங்கி இடம் வலம் வலம்இடம் என மாறிமாறி வாசித்தவாறே வலப்புறச் சக்கரத்திற்கு வந்து எழுத்துகளை வாசித்து இடப்புறச் சக்கரத்தையும் வாசித்துத் தேர்த்தட்டின் நடுக்கோட்டெழுத்துகளை வாசித்து இடம் நோக்கிச் சென்று இடது பக்கக் கம்பத்தை வாசிக்க முதல் செய்யுள் முடிவடையும்

சிகரத்தின் வலப்புற அடிப்பகுதியில் தொடங்கி இடம்வலம், வலம்இடம் என மாறிமாறி வாசித்தவாறே மேலே சென்று அங்கிருந்து நேரே கீழிறங்கி வலம் நோக்கி வாசித்து வலப் பக்கக் கம்பத்தில் இறங்கினால் இரண்டாம் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

முதல் பாடல் 2/57 - னே, 3/56 - வ, 4/55 - ல, 5/54 - வே, 6/53 - லை, 16/52 - ம, 24/51 - னி, 30/50 -ழ, 34/49 - ல், 36/48 - ல்

செய்யுளில் அமையும் எழுத்துகள் 64, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 54

(*குறிப்பு:* பாடலின் மூன்றாம் அடியில் இடம்பெறும் மாப்பிள்ளையே என்பதிலுள்ள பகரமெய் அதாவது, ப் சித்திரத்தில் விடப்பட்டுள்ளது )

இரண்டாம் பாடல் 2/45 - மா, 3/44 - று, 4/43 - வீ, 5/42 - ரு, 6/41- தி, 16/40 - ப, 24/39 - தீ, 30/38 - ல, 34/37 - கு

செய்யுளில் அமையும் எழுத்துகள் 52; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 43.

5. (அ) *காவாணா ளைப்பெண்சேய்க் காகவலைந் துன்றிருவார்*
*மூவாப் புகழ்பெருங்கால் முன்னினைத்து - தேவா*
*துதிசெய்தேன் வைகுந்தத் தொணபதமாம் நீதிக்*
*கதிதந்து கார்வண்ணா கா*

(ஆ) *காவாதே போவீரேல் கண்ணாயிப் பூமிமீதே*
*யாவாரே ராகோபி கானேயா - தேவாகா*
*கார்பார்கோ காரீக் கலந்திருப் பாயாதன்*
*கார்தாதா மாயாபார் கா*

*(ப வெ. பழனிமலை நாயனார்*
**ஸ்ரீமத் இராமாயணம்**, ப 20)



**வாசிக்கும் முறை**

சித்திரத்தில் 1-ஆம் எண் இருக்கும் இடத்தில் தொடங்கிச் செய்யுளை இடம்வலம், வலம்இடம் என மாறிமாறிப் படித்துக் கொண்டே சிகரம்வரை சென்று அங்கிருந்து நேரே கீழிறங்க முதல் வெண்பா நிறைவடையும்

நிறைவடையும் எழுத்தில் தொடங்கி வலப்புறச் சக்கரத்திற்குச் சென்று வலம்சுற்றிப் படித்து உள்வட்டத்தையும் அவ்வாறே வாசித்து அதனுள் நிற்கும் எழுத்தைப் படித்து அதன்வழியே இடப்புறச் சக்கரத்திற்குப் போய் அதையும் இவ்வாறே படிக்க இரண்டாவது செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

முதல் பாடல் 1/71 - கா, 3/70 - ணா, 7/69 - ண், 13/68 - வ, 21/67 - ர், 31/66 - கா, 41/65 - து, 49/64 - ந், 55/63 - த, 59/62 - தி

செய்யுளில் அமையும் எழுத்துகள் 71; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 61.

இரண்டாம் பாடல் 1/27/28/54 - க, 2/26 - வா, 3/15/25 - தே, 16/24 - யா, 29/53 - ர், 30/42/52 - பா, 43/51 - ய

செய்யுளில் அமையும் எழுத்துகள் 53, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 42.

இரண்டு செய்யுளுக்கும் தொடங்கும் எழுத்து கா

## ஈரெழுத்துப்பாட்டு

▶ எழுத்துப்பாட்டு ▼

## உருத்திராக்க கண்டிகா பந்தனம்

உருத்திராக்க கண்டிகா - உருத்திராக்கசமாலை; இம் மாலையின் வடிவம் கொண்ட சித்திரத்தில் ஒவ்வோர் மணியிலும் ஒவ்வொரு எழுத்து அமையுமாறு பாடப்படும் செய்யுள்.

***சான்றுப் பாடல்***

1. *முத்திதரு கந்தனின்*
   *சித்திரசு பந்தனைக்*
   *கத்திமுக முந்தனைத்*
   *துத்தியது தந்தனே* (*கந்தன் சித்திரபந்தன மாலை, கணபதி காப்பு*, ப. 5)

**வாசிக்கும் முறை**

மாலையின் வலப்புற மேல்பக்க உருத்திராக்க மணியில் தொடங்கி இடவலமாகச் சுற்றி இடப்புற மேல்பக்கம் செல்லச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

4/36 - த

செய்யுளில் அமையும் எழுத்துகள் 39; சித்திரத்தில் அமையும் எழுத்துகள். 38.

2. *சந்ததம் கந்தனையே*
   *வந்தனம் செய்யுமோர்*
   *சுந்தரனைப் போற்றவே*
   *வந்தருணீ தந்தியே!*
   (*தோத்திர மஞ்சரி*, பக். 52 - 53)

**வாசிக்கும் முறை**

உருத்திராக்க மாலையின் வலது நுனியிலிருந்து வரிசையாகக் கீழ்நோக்கிப் படித்து வந்து, பதக்கத்தில் வலப்புறமாகச் சுற்றிவந்து, மேலே ஏறி இடது நுனியில் முடிக்க வேண்டும்.

**துருவம்**

4/36 - த

செய்யுளில் அமையும் எழுத்துகள் 39; சித்திரத்தில் அமையும் எழுத்துகள்: 38.



## எட்டாரைச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## எண்கூற்றிருக்கை

▶ எழுகூற்றிருக்கை ▼

## எண்பொருட் தாரணை

▶ தாரணை

## எழுகூற்றிருக்கை

இவ்வகைச் செய்யுளில் ஏழு கூறு அமைந்திருத்தலின் எழுகூற்றிருக்கை எனப்படுகிறது இவ்வாறு எண் முறையை அமைப்பதில் இருவகைகள் காணப்படுகின்றன

அ தேருக்குச் சிகரப்பகுதி, அடிப்பகுதி என இருப்பதைப்போன்றே இதனையும் இரு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும் ஒவ்வொரு பகுதிக்கும் ஏழுகூறுகள் அமைக்கவேண்டும் இதன் முதல் ஐந்து கூறுகள் முறையே மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினோர் அறைகளை உடையதாகவும் ஆறு, ஏழாம் கூறுகள் இரண்டும் பதின்மூன்று அறைகளை உடையதாகவும் பிரித்துக்கொள்ளவேண்டும் இது சிகரப்பகுதி போன்ற மேல் பகுதி ஆகும் அடிப்பகுதி ஆகிய கீழ்ப்பகுதி இதன் தலைகீழ் வடிவமாக இருக்கும்

1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 2 1
1 2 1

இவ்வாறு அமைக்கப்பெற்ற அறைகளில் செய்யுளை எழுதுவர் சொற்கள் தம் ஒலி ஆற்றலாலோ பொருளாற்றலாலோ எண்களைக் குறிப்பனவாக அமையும் (*குறிப்பு* எண்களைத்தான் சுட்டவேண்டும் என்னும் இன்றியமையாமை இல்லை ஒன்று எனப் பாடலில் பயின்றால் ஒன்று ஆகிய எண், ஒன்றுதல் ஆகிய வினை, ஒப்பற்றது என எந்தப் பொருளிலும் வரலாம் சொல்லளவில் எண் பெயர் இருக்கும்; பொருள் மாறுபடும் )

திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், (நாலாயிரத் திவ்யபிரபந்தம், இயற்பா, 8, 1) நக்கீரர் (தனிப்பாடல்) ஆகியோரின் பழைய எழு கூற்றிருக்கைகள் இவ்வகையில் அமைந்துள்ளன

*ஒன்று முதலா ஓர்ஏழ் ஈறாச்*
*சென்ற எண் ஈர்ஏழ் நிலந்தொறும் திரிதர*
*எண்ணுவது ஒன்று ஆம் எழுகூற்றிருக்கை.*

*அவைதாம்*
*இரதபந்தத்தினில் இடைஅறை இரண்டாய்ச்*
*சரதமதுற நடைசார்தரு பான்மையின்*
*ஒன்று பன்னான்காய் ஒரு பன்னிரண்டாய்*
*நின்றயல் ஏனவும் நிலந்தொறும் உபயம்*
*குன்றுவதாய்த் தொகைகூடி ஒன்றில் இறும்*

*இரட்டுற மொழிதலோடு ஈறுதிரிந்து எண்*
*திரட்டவும் பெறூஉம் தெரியுங்காலை* (**மாறனலங்காரம்**, 297 - 299)

*கோதில் ஏழறை ஆக்கிக் குறுமக்கண்*
*முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்*
*பெற்றி யால்வழு வாமை ஒன்று*
*முதலாக வேழீ றாய்முறை யானே*
*இயம்புவது எழுகூற் றிருக்கை யாகும்* (**முத்துவீரியம்**, 1123)

[யாப்பருங்கலம், 96; குவலயானந்தம், 281 ]

*குறிப்பு* மாறனலங்கார நூற்பாவில் 'இரதபந்தத்தினில்' என இருப்பினும் அறைக்கு ஓர் எழுத்தாகத் துருவக் கட்டுப்பாட்டுடன் இயற்றப்படும் சித்திர(க்)கவி ஆகிய இரதபந்தம் வேறு, எழுகூற்றிருக்கை வேறு என் வரிசைமுறையை எளிதில் புலப்படுத்துவதற்காக எழுகூற்றிருக்கையில் தேர்ப்படம் அமைக்கப்படுகிறதேயன்றி அது இன்றியமையாதது அன்று எழுகூற்றிருக்கைத் தேர் அறையில் அமையும் எழுத்துகளுக்கு எண்ணிக்கை வரைமுறை இல்லை; ஆனால் இரதபந்தத்தில் அறைக்கு ஓர் எழுத்து மட்டுமே அமையும்

***சான்றுப் பாடல்***

இணைக்குறளாசிரியப்பா

*ஓர்உரு ஆயினை மான்ஆங் காரத்(து)*
*ஈர்இயல் பாய்ஒரு விண்முதல் பூதலம்*
*ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்*
*படைத்துஅளித்து அழிப்ப மும்மூர்த்தி கள்ஆயினை*
*இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை;*
*ஓர்ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்*
*முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி*
*காட்டினை; நாட்டம் மூன்றுஆகக் கோட்டினை,*
*இருநதி அரவமோடு ஒருமதி சூடினை,*
*ஒருதாள் ஈர்அயில் மூஇலைச் சூலம்*
*நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்*
*ஏந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்து*
*இருகோட்டு ஒருகரி ஈடுஅழித்து உரித்தனை;*
*ஒருதனு இருகால் வளைய வாங்கி*
*முப்புரத் தோடு நால்நிலம் அஞ்சக்*
*கொன்று தலத்துஉற அவுணரை அறுத்தனை;*
*ஐம்புலன் நால்ஆம் அந்தக் கரணம்*
*முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்*
*ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோ(டு)*
*இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து*
*நால்மறை ஓதி ஐவகை வேள்வி*
*அமைத்துஆறு அங்கம் முதலெழுத்து ஓதி*
*வரன்முறை பயின்றுஎழு வான்தனை வளர்க்கும்*
*பிரமபுரம் பேணினை;*
*அறுபதம் உரலும் வேணுபுரம் விரும்பினை,*
*இகலிஅ மைந்துஉணர் புகலி அமர்ந்தனை;*
*பொங்குநால் கடல்சூழ் வெங்குரு விளங்கினை;*
*பாணிமூ உலகும் புதைய மேல்மிதந்த*
*தோணிபுரத்து உறைந்தனை; தொலையா இருநிதி*
*வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை;*
*வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை;*
*ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்*
*விறல்கெடுத்து அருளினை; புறவம் புரிந்தனை;*
*முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்*
*பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;*
*ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்*
*ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை;*
*எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை;*
*ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்*
*மறைமுதல் நான்கும்*
*மூன்று காலமும் தோன்ற நின்றனை;*
*இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்*
*மறுவிலா மறையோர்*
*கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை*
*கழுமல முதுபதிக் கவுணியின் அறியும்*
*அனைய தன்மையை ஆதலின் நின்னை*
*நின்னைய வல்லவர்இல்லை நீள்நிலத்தே* (தேவாரம், 1:128:1)

***சீ**காழியின் பன்னிரு பெயர்களும் இதில் கூறப்பட்டுள்ளன.*

ஆ இரண்டாவது வகையில் முதல்கூறு மூன்று அறைகளாக இருப்பதற்கு மேல் ஓர் அறையை உடையதொரு கூறு மிகுந்து காணப்படும் 13 அறைகளை உடைய கூறு ஒன்றுதான் இருக்கும் அந்த அமைப்பின் எண் முறை அருகில் (வலப்பக்கம்) கொடுக்கப்பட்டுள்ளது

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 2 1
1 2 1
1

முதன்முதலாக அருணகிரிநாதரும் பிறகு அவரைப் பின்பற்றி வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் இம்முறையில் எழுகூற்றிருக்கைகளைப் படைத்துள்ளனர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இவ்விரு வகைகளிலும் எழுகூற்றிருக்கையைப் படைத்தளித்துள்ளார்

நேரிசையாசிரியப்பா

*ஓர்உரு ஆகிய தாரகப் பிரமத்(து)*
*ஒருவகைத் தோற்றத்(து) இருமரபு எய்தி*
*ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி*
*மூவாது ஆயினை, இருபிறப் பாளரின்*
*ஒருவன் ஆயினை; ஓராச் செய்கையின்*
*இருமையின் முன்னாள் நான்முகன் குடுமி*
*இமைப்பினிற் பெயர்த்து மூவரும் போந்து*
*இருதாள் வேண்ட ஒருசிறை விடுத்தனை,*
*ஒருநொடி அதனில் இருசிறை மயிலின்*
*முந்நீர் உடுத்த நால்நிலம் அஞ்ச*
*நீ வலம் செய்தனை; நால்வகை மருப்பின்*
*மும்மதத்து இருசெவி ஒருகைப் பொருப்பன்*
*மகளை வேட்டனை; ஒருவகை வடிவினில்*
*இருவகைத்து ஆகிய மும்மதன். தனக்கு*
*மூத்தோன் ஆகி நால்வாய் முகத்தோன்*
*ஐந்துகைக் கடவுள் அறுகு சூடிக்கு*
*இளையோன் ஆயினை; ஐந்துஎழுத்து அதனில்*
*நான்மறை உணர்த்தும் முக்கட் சுடரின்*
*இருவினை மருந்துக்(கு) ஒருகுரு வாயினை;*
*ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி*
*முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்*
*ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன்என*
*எழில்தரும் அழகுடன கழுமலத்து உதித்தனை;*
*அறுமீன் பயந்தனை; ஐந்தரு வேந்தன்*
*நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்டு*
*அன்றில் அம்கிரி இருபிளவு ஆக*
*ஒருவேல் விடுத்தனை; காவிரி வடகரை*
*மேவிய குருகிரி இருந்த ஆறுஎழுத்து*
*அந்தணர் அடிஇணை போற்ற*
*ஏரகத்து இறைவன் எனஇருந் தனையே (அருணகிரிநாதர்)*

எழுகூற்றிருக்கை மட்டுமல்லாது எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, தசாங்கக் கூற்றிருக்கை என்பனவற்றையும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ளார்

இதனை இலக்கியப் படிநிலை வளர்ச்சியெனக் கருதலாம்

நாற்கூற்றிருக்கை எனும் வகையொன்றும் பிற்காலத்தே தோன்றியிருக்கிறது

***எண்கூற்றிருக்கை***

எண்முறை அமைப்பு

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1

*ஒருபேர் ஆணவம் ஒழுங்குஅறக் களைந்தார்க்கு*
*இருவினைப் பயன் இன்று என்னநன்கு ஓர்ந்தேன்*
*ஓரைநூ லினர்பால் உண்மைநன்கு உணர்சுர்*
*மூன்று காலத்து சுர்முதல்வன் ஒருவன் என்று*
*ஒருமையொடு உரைத்திட்டு உளபொழுது இரண்டும்*
*மூவா நால்மறை முந்நிலை யினர்தம்*
*இருபதம் போற்றி யாரும் இகழா*
*ஒருபிர ணவத்தால் ஒன்றிரண்டு அற்று*
*முன்னிலை இன்றி மொழியும் நால்கதியில்*
*ஐயம் தீரும்மெய் அவிர்தரும் நாலாம்*
*முத்தியொடு எல்லாம் முடிக்கத் தக்க*
*சித்தி என்னத் திகழ் பயன் இரண்டும்*
*ஒன்றவேட்டு உள்ளேன் உதவுவது உணரின்*
*ஒருதனிச் சுடரோ? ஊன்றி ஊன்றா*
*இருபதந் தானோ? ஏந்திழை வடிவம்*
*மூன்று கொள் அருளோ? முரண்மலி நால்தோள்*
*முகத்தைஐம் படைஅணி முதுநெடு மாலோ?*
*ஆறுஅணி சடிலம் ஐந்துகை நால்வாய்*
*மும்மதம் இருதாள் மூகுறு பனைக்கை*
*ஒன்றால் ஒருத்தியை உன்னா இருவர்*
*முக்கணான் மாட்டு முன்விடும் பெருஞ்சீர்*
*தொக்கவான் களிறோ? தொடுகடல் முழவோர்க்கு*
*அஞ்சா உரனும் அறுமுக மலரும்*
*எழுதா ஆறே இலங்குபேர் அழகும்*
*ஐவணம் பவளம் அழல்வணம் செக்கர்*
*என்னும் நான்கு ஆதிய ஏங்கும் நிறமும்*
*மூஇரு குமுதம் முகிழ்மலர் வாயும்*
*ஒருபர ணஅருகில் ஒருநாள் இருகை*
*முக்காற் கூப்பி மொய்யினால் எய்யும்*
*ஐங்கணைக் கொடுந்தீ ஆறிய புகழும்*
*எழுவகை நிலைமையும் எண்வகை வண்ணமும்*
*ஏழை உயிர்கட்கு இரங்கும் உணர்வுடன்*
*முன்னுநர்க்கு அருளும் மொய்ம்பும் உள்ளானோ?*
*ஆறுஅலைத்து ஒழுகும் அஞ்சன வேடரொடு*
*நான்முந் நெறியுடை நரரும் நால்நிலத்தில்*
*கொலைபுலை எனும்இரு கொள்கையும் நீங்கல்*
*குறித்துஇவண் இயற்றுஒரு குருபரன் தான்என*
*நண்ணுகின் றேன்அவன் நவில்வன பிறவும்*
*யானே யாம் என்று இசைத்துளன், இனிஅவன்*
*செயநினைத் துள்ளன தெரிந்திலன் அன்றே!*

(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சித்ரகவிகள், பக் 15 - 16)

***ஒன்பது கூற்றிருக்கை***

எண்முறை அமைப்பு

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1

*ஒருமகள் ஒருபால் இருக்க வைத்தனை.*
*ஒருமகம் தரும்ஓர் இருகோட்டு யானை*
*மும்மதம் சிதைய ஈர்ந்(து) அதட்போர்வை ஒன்று*
*ஒன்ற நின்றனை. இருவர்முக் குணத்தால்*
*நான்மேல் மேல்என நவின்றமுப் பொழுதினும்*
*அடிமுடிஎனும் இரண்(டு) அறியத் தேடியும்*
*காணா ஒருவரை ஆகிக் கவின்றனை.*
*ஓரோட்டு இரவலன் ஆயும் முத்தலைவேல்*
*மழுமுதல் ஆவன நால்தோட்கு அணிந்தனை*
*ஐம்முகத்(து) அயனை நான்முகன் ஆக்கினை.*
*முந்நீர் விடம் அயின்று இருநிலத்து உள்ளோர்*
*வானோர் எனும் இரு வகையினர்ப் புரந்தனை*
*மூவகை முரசமும் நால்பெரு வாயிலொடு*
*ஐங்கணை வேள்கொடி அமைதரும் வழுதி*
*ஆறுஅருகு அடிப்ப அஞ்சினர் போன்று*
*மறைந்தும் அவ்வடி நால்வகை உயிர்க்கு ஊட்டினை*
*முத்தமிழ் விரகற்கு இருபொன் தாளமும்*
*ஒருமணிப் பந்தரும் ஒருதிருச் சின்னமும்*
*உதவி ஆண்டனை; இருமூன்று கண்ணால்*
*அஞ்சனமயில்ஊர் அறுமுகற் பயந்தனை.*
*ஏழ்பவம் கடக்கும் ஆறுஎன மறைசொல்*
*ஐம்பொறி களினால் முப்பயன் வழங்கி*
*இரண்டற ஒன்றாக் கலக்கும் மாண்பினை.*
*ஓரார் இருவினை மூவாது ஓம்பியும்*
*நால்வருக்கு ஐவினை அறஎழுந் தருளினை.*
*எண்ஏழ் தேயமும் மாறுஇன்றி அடக்கும்*
*ஐவேல் ஏந்தி அணி நான்மாடக்*
*கூடல் ஆள்வாள் மும்முலைக் கூட்டத்து*
*இரண்டுற மற்றொன்று இரியப் பார்த்தனை.*
*ஒருபா வெளியாய் இருதிரு உருவாய்*
*மூவித உயிர்க்கும் நாற்கதி அளிப்பான்*
*ஐந்தொழில் நடவினை. ஆறுஆதாரம் என்று*
*ஏழையர்க் கவிர்ந்திட்டு எட்டொரு மூர்த்தியும்*
*ஒன்பது பேதமும் ஆய்ச் சிலர்க்கு ஒளிர்ந்தனை.*
*எண் தோளினன் முன் எழத்தாள் தூக்கினை.*
*ஆறுஅமர் சடையுடன் ஐவாய் அரவும்*
*நாலக் காட்டினை. நாட்டம் மூன்றும்*
*முகந்தொறும் கொண்டனை. முரண்இருள் நிலையோர்*
*இகழ்வு ஒருங்கு அயிலும் எளிய னேற்கும்*
*சித்தி யாவும் தெரிதர அமைத்து*
*முத்தியிற் சேர்க்க முன்னுதி இன்னே!*

(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், *சித்ரகவிகள்*, பக். 20 - 22)

*திருமால் ஒருபது கூற்றிருக்கை*

எண்முறை அமைப்பு

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 10 9 8 7 6 5 4 3 2 1

ஒன்றே பொருளென்(று) உரைக்கின் றோர்க்கும்
இரண்டே உளவென்(று) இசைக்கின் றோர்க்கும்
ஒன்றுடன் இரண்டாய் மூவாது ஒளிரும்
இருந்தகை யினதுஎன்(று) இயம்பு வோர்க்கும்
ஒருபொது முதலாய் இருமுந் நெறிசார்
நான்மறைப் பயனாய் மூன்று குணமாய்
இருவகை வடிவாய் அவைஒன்றி ஒன்றாய்
அரியுமாகி அயன் அரன் என்னும்
இருவரும் முன்ன நான்கு தோளிடை
ஐம்படை ஏந்தி அவர்நடு நிலவி
நாராயணன் எனும் நற்பெயர் புனைந்து
நால்வாய் மும்மதத்(து) இரு கோட்(டு) ஒரு கைக்
களி(று) ஒன்று இரங்கி மூலம் என்றதனால்
அஞ்சல் நல்கி அறற் புரந்திட்டு
அஞ்சாது அருளி நாலொடு மூன்றும்
இரணடும் ஒன்று மால் புணரிய வடிவாய்ப்
புவிமுழுது அளித்துத் தக்கோர் பலர்க்கும்
இருமைச் சார்பாய் மூன்று தமிழ்க்கும்
நால்வகைக் கவிக்கும் ஐந்திலக்கணம் தெரி
ஆறாம் புலமையன் எழுந்துஅருள் எனலும்
அவன் போமாறே ஐயம் நாற்குண
முத்துறழ் நகைய இருவர் தம்மொடும்
ஒருக்காற் சென்றனை ஓரத்தினன் போன்(று)
இருந்து மூன்றுஉலகும் அன்பினால் இறைஞ்ச
ஆறு ஏழு நாக்கனல்உறழ் சினத்தோ(டு)
எண ஏழ் தேயமும் அறுகுறு கொடுங்கோல்
ஐவாய் அரவப் பதாகை நால
மும் முரசாற்ற இராப்பகல் ஓச்சும்
ஒருவன் தன்குலம் ஒருங்குஅறக் கறுவி
இருபத மலர்க்கே மூன்று பொழுதினும்
நாலு கரணமும் நல்கிய ஐவர்
அறா மகிழ்வு எய்த அளித்துஇனிது ஆண்டனை!
எழுத்து எட்டுஆகினை ஒருபதிற்று எண்பால்
பகுதியாம் இசைப் பாதம் மிக்கு உவந்தனை!
ஏழ்மரம் எய்தினை ஆறு கடத்தும்
அஞ்சனக் குகனொடு நாற்றுணை மேயினை!
மூக்குடன் இருமுலை இழந்த ஒருத்தி
மொழிவழி விளைந்த முரண்உறு போரில்
ஒருவில் ஏந்தி இருதோள் கொண்டு
மூன்று தானவரை முருக்கி நின்றனை!
நாலைந்து திண்தோள் நரலை வேந்தன்
அறுவது செயுமுன் ஏழ்கடல் கலக்கினை!
எண்திரு மகளிர்க்கு இன்பம் ஈந்தனை!

*ஒன்பது நாதத்து உச்சியில் அமர்ந்தனை!*
*பத்து பாவலர் பாடலும் அணிந்தனை!*
*ஒன்பது கோளும் எட்டுத்திசையும்*
*ஏழுவாரமும் ஆறு ஆதாரமும்*
*ஐந்து பூதமும் நான்கு கதியும்*
*மூன்று சுடர்களும் பிறவும் ஆயினை*
*இருஞ்சிறை ஒருபுள் ஏறி என்பால்*
*வந்துஇனிது ஆளும் மனம்உனக்கு உண்டேல்*
*இன்னே அருள் கூர்ந்து ஏடணைக்கு அயரார்*
*நல்நேயத்தினர் நடுஇருத்து உழியே*

(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சித்ரகவிகள், பக். 45 - 47)

***தசாங்கக் கூற்றிருக்கை***

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எட்டு, ஒன்பது, ஒருபது எனும் புதிய வகைக் கூற்றிருக்கைகளைப் படைத்தது போன்று தசாங்கக்கூற்றிருக்கை எனும் புதிய வகையையும் படைத்துள்ளார். ஒருபது, தசாங்கம் இரண்டும் பத்து எனும் எண்ணைக் குறிப்பதாக இருந்தாலும் தசாங்கத்தில் மற்றொரு புதுமையும் உள்ளது

எல்லாக் கூற்றிருக்கையிலும் மேல் கீழ் இருபகுதி அமைத்துப் பாடலில் பயின்றுவரும் எண்களைப் பொருத்திக்காட்டுவர் இதில் மேல்பகுதியில் அமையும் எண் வரிசைகளை மட்டுமே கூற்றிருக்கைகளில் காணமுடியும் அதனையே தலைமாற்றிக் கீழ்ப்பகுதியிலும் அமைப்பர் ஆனால் தசாங்கக் கூற்றிருக்கையில் மேல், கீழ் இருபகுதிகளுக்கும் உரிய எண் அமைப்புகளுக்கேற்ற எண்ணுப்பெயர்களை அமைத்துப் பாடல் இயற்றப்பெற்றுள்ளது அஃதாவது தசாங்கக் கூற்றிருக்கை என்பதனை இரட்டை ஒருபதுகூற்றிருக்கை எனலாம்

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 10 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 2 1
1 2 1
1

*ஒன்றி ஒன்றா(து) இருமையும் ஓர்வது*
*ஒன்றுஎனும் வேதம், இரண்டுஎனும் ஆகமம்*
*மூன்றுஎனும் சோதிட முதல்இரு நிலத்து*
*நூலெல்லாம்கூடி நுவல்ஒரு நுட்பம்*
*ஒருநல் அறிவும் இருவகை வினையும்*
*மூன்று குணமும் நாலு கரணமும்*
*மலத்தொகை மூன்றும் இருதிறத்து உயிர்க்கும்*
*அமைந்துஒருங்கு ஆள்வது, அருள்ஓர் இருமுச்*
*சக்தி யாகி நால்வயிற் சூழ*
*ஐனக் குலவுவது, அகற்றரும் சரிதை*
*ஆதிய நான்கின் மூன்று காண்டமும்*
*இருள்கெட உணர்ந்தோர் ஒருமையுள் இருப்பது,*
*முந்நான்கு சமயத்து ஐயமும் இன்றி*
*ஆறுஇதே எனநன்கு அஞ்சாது ஒழுகும்*
*நால்நிலத் தினர்தம் மூவல்இல் விரதத்து*
*இரங்குஒரு மெய்ப்பொருள், இளையோர் விரும்பும்*
*இருமுலை முத்துஎன் வாள்நகை நாற்குணம்*
*ஐவணச் செங்கை அறுபதம் முரல்குழல்*
*வடம்ஏழ் கோத்த மாண்கலை பொதியும்*
*ஆறாக் காமத்து ஐவேற் கடிதடம் -*
*நாற்றுஇயல் சுட்டி நகுநுதல் முந்நீர்*
*இரண்டுறழ் கருங்கண் ஏய்ந்தோர் சில்லோர்*
*தாமும் இருதயந் தனிற்கொள விழைவது.*

முததி நான்காய் ஐந்தொழிற் பொலிவாய்
ஆறாம் தானதது எழுபேர் ஒலியாய்
எணணரும் எழுத்தாய ஆறுஆ தாரமுழ
ஐங்கோ ணத்தில் நாலினை அடககும்
முப்பொறி இருந்த பொறிஒன்றும் ஆகி
ஒருகை ஈர்ங்கவுள் மும்மதம நால்வாய்
அஞ்சனக் கரிமுதல் எறும்புஈறாகும்
ஆறேழ் பெருக்கம் இரட்டிய இலக்கம்
என்னும் எணபடும் யோனிப் பகுதியின்
உயிர்முழு தாகி, ஒனபது கோளும்
எட்டுச் சித்தியும் எழுவகை உலகும்
ஆறுபற் பலவும் ஐந்தரு நிழலும்
நாறகோட்டு இபமிசை முககோட்குலிசம்
இருகரத்து ஏந்தி வருமன் முதலோர்
ஒருவா தாகி ஒளிர்வது, நாளும்
இருபொழுது ஆகி மூன்று சுடராய்
நாலாம்விதத்து ஐஞ்ஞீறம்பெருக் கினவாய்
அறுக்கரும் ஏழ்பவத்து அருவருப்பு உற்றார்க்கு
எட்டு மூர்த்தியும் ஒன்பது பேதமும்
ஆகிப் பத்துத் திசையினும் அவிர்பரம்.
ஒன்பது எட்டு ஏழ் வயதுறும் இளமைப்
பருவமும் இன்றிப் பசுமுலைக(கு) அறுவை
போர்த்தாள் அஞ்சலி யினால்மகிழ்வு எய்தி
முருக்கலர் பொரும்வாய் இதழ்இரண டூடுஒன்று
ஓரீஇப் பருகி ஈரமொடு முத்தி
நாற்றிசை உணர ஐங்கணைத் துயரம்
ஆறப் புணர்ந்துடன் ஏழையர் வேண்டற்(கு)
எண்மடங்கு உதவும் மகற்பயந்(து) ஒன்பான்
தொகையார் தம்மில் எண்மரும் நாண
எழுபரித் தேரில் அறுநெறி யோரும்
அஞ்சநால் நலனும் மூன்று பொழுதும்
இரப்பத் தினம்வரும் எரிகதிர் ஒன்றும்.
ஓர்மை மிக்குறும் இருபிறப் பாண்மை
முத்தமிழ் அமைச்சன் ஆலவாயின்*
ஐவேற் செழியன் அனுப்பு மாறு
கழிவுறச் செல்கால் எழுகுருந் தைக்கீழ்
எண்ணெழுத் திண்தோள் ஆறுஅமர் சடைக்காடு
ஐவாய் அரவணி நாற்கரன் மான்மழு
மூவிலைச் சூலம் இருந்தைநேர் களம்ஒன்று
ஓர்உரு மறைத்திட்டு இருதோள் ஆதி
காட்டிய சிவனும், கதிர்மதி கனலாம்
முக்கண் நால்தோள் அஞ்சு வன்ன
மயில்நிகர் சாயல் ஆறாத் தழல்உறழ்
கட்புலி வாகனம் எழில்மிகை அறாக்கயிறு
அஞ்ச மென்நடை அமைதரு பரையும்,
நால்மூன்று அன்பர் ஈர்ங்கவி ஓர்வார்க்கு
ஒருவை குந்தத்து இருக்கை நல்கி
மூவர்இடையில் நான்முகற் பயந்தாண்டு
ஐம்படை தாங்கி நின்றநா ரணனும்
ஆறில்ஐங் கரத்தில் நால்பெரும் பனைநேர்
கையால் மூப்புறு காரிகை தன்னை
இருவர்கண்டு ஓல்க ஒருவரை ஏற்றிய
ஒற்றைக் கொம்பனும், இரைபெருங் கடலில்
மூன்று தானவர் நால்விதப் படையொடு
அஞ்சி மாய்வுற அயிலால் அழித்து
நாலாங் கரணம் நசித்த முத்தரும்
இருங்கக னத்தினர் எல்லோர்களும் அங்கு

*(அமைச்சனாலவாயின் என்பதில் நாலு என ஒலிக்கும்)

*ஒருகணத்து உய்யச் செய்வது உன்னி*
*இரதம் ஒச்சிய முத்தொடைக் குகனும்*
*நான்மறை வியாசன் நலந்திகழ் சஙகர*
*முனியெனும் இருவர் முதலோர் உளத்தில்*
*ஒன்றா விளங்கிய உண்மையை உணர்த்தித்*
*தானே ஆகி ஆகா இருநிலை*
*முந்நிலை ஆய முறைமையும் காட்டி*
*இரண்டு என்பவர்க்கும் ஏகம்என் போர்க்கும்*
*ஒருபொதுஆகி இருகக வைத்தும்*
*சித்தி ஒன்றும் திரும்பிப் பிறவா*
*முதல்வீடு ஒன்றும் முறையின் எய்தக்*
*கருணை ஆதிய கவின்பல வாயந்த*
*பெரியார் தாள்மலர்ப் பிரசம் சூடி*
*ஏன்றமட்டு ஆசான் இணைப்பதம் நாடித்*
*தவித்துஉளேன் அந்தச் சகளம்ஆகிப்*
*புவித்தலை வரில்என் புழுக்கம் போமே*
(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சித்ரகவிகள், பக் 56 - 60)

***நாற்கூற்றிருக்கை***

நாற்கூற்றிருக்கைபற்றி முன்னர்ச்சுட்டப்பெற்றது அவ்வகையில் பாம்பன் சுவாமிகள் இயற்றிய நாற்கூற்றிருக்கையின் எண்முறை அமைப்பு வருமாறு .

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1

எண்சீர்ச்சந்த விருத்தம்

*ஒருபூரண சிவனார்செவி ஒருநுண்பொருள் சொன்னாய்*
*உரமார்அருள் இருதேவியர் ஒருசேர விழைந்தாய்*
*ஒருசூர்உடல் இருகூறுஉற ஒளிவேல்எறி தந்தாய்*
*உணர்வுஏறிடும் முத்தேவரும் இருதாள்தொழ நின்றாய்*
*ஒருமாமுனி அறிவேஉற ஒருபோதனை செய்தாய்*
*உரைமாமறை இருசம்பவர் முத்தீமுதல் ஆனாய்*
*திருநான்முகன் முக்கண்ணுளன் இருமால்உரு ஒன்றாத்*
*திகழும்திரு உருவாயினை எனையும்படர் குகனே* (*திருவலங்கற்றிரட்டு*, ப 499)

## எழுத்தழிவு

▶ அக்கரச் சுதகம்

## எழுத்துச் சுதம்

▶ அக்கரச் சுதகம்

## எழுத்துச் சுருக்கம்

▶ அக்கரச் சுதகம்.

## எழுத்துப் பாட்டு

சில எழுத்துகளையே திரும்பத்திரும்பப் பயன்படுத்தி இயற்றப்படும் செய்யுள். இது 1 ஓரெழுத்துப்பாட்டு, 2. ஈரெழுத்துப்பாட்டு, 3 மூவெழுத்துப்பாட்டு, 4 நான்கெழுத்துப்பாட்டு என நான்கு வகைப்படும்

***1. ஓரெழுத்துப்பாட்டு***

ஓரே உயிர்மெய் வருக்க எழுத்துகளால் அமையப்பெறும் செய்யுள்

[வீரசோழியம், 179]

*சான்றுப் பாடல்*

*தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது*
*தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த*
*துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது*
*தித்தித்த தோதித் திதி (காளமேகப்புலவர், தனிப்பாடல்)*

*உரை* தாதி தூது தீது - பாங்கியைத் தலைவனிடத்தில் தூதாக அனுப்பினால் தீய பயன் விளையும்; தத்தை தூது ஓதாது - கிளிப்பிள்ளை தூதுச்செய்தியைச் சரியாகச் சென்று கூறாது; தூது தூது ஒத்தித்த தூது அதே - காதலர்களிடம் தூது உரைப்பதையே தொழிலாகக் கொண்ட பெண்ணைத் தூது அனுப்புதல் விலக்கத் தக்கது ஆகும், தாது ஒத்த துத்தி தத்தாதே - மலரின் மகரந்தத்தைப்போல மேனியில் பசலை படராமல் இருக்க; துதித்த தே - தலைவனைத் தோத்திரம் செய்து, தொத்து - அவன்பாற்செல்; ஈது தித்தித்தது ஓதி - அவனுக்கு இனிய சொற்களைக் கூறி (அவன் மாலையைப் பெற்று வந்து); திதி - என்னைக் காப்பாற்று

*2. ஈரெழுத்துப்பாட்டு*

ஓர் எழுத்துப்பாட்டில் ஓர் உயிர்மெய் வருக்க எழுத்துகள் மட்டுமே பயின்று வருவதைப் போன்று இரண்டு உயிர்மெய் வருக்க எழுத்துகளை மட்டுமே கொண்டு இயற்றப்பெற்ற செய்யுள் அணி இலக்கணங்களுள் கூறப்பெறாமல் பிற்காலக் கவிஞர்கள் தம் மொழியாற்றலைப் புலப்படுத்தப் புதியனவாகப் படைத்துக்கொண்ட சித்திர(க்)கவி வகைகளுள் இதுவும் ஒன்று

கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள நேரிசை வெண்பாவில் மகர னகர வருக்கங்கள் மட்டுமே பயிலப்பட்டுள்ளதால் இது ஈரெழுத்துப்பாட்டு ஆகிறது.

*சான்றுப் பாடல்*

*மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா*
*மின்னமா னேமுன்னு மானினி - மென்மென*
*மின்னுமா மென்னினா மன்னமுமா மென்மனனே*
*மன்னுமா மானுமா மா (தனிப்பாடல்)*

*உரை* மன்னும் மால் மால் முன்னம் - (இப்பொழுது என்னை வந்து) அடுத்துள்ள பெரிய காதலுக்கு எதிரே, மானமும் ஈனம் ஆம் - (என்னுடைய) தன்மதிப்பும் குறைந்து விடுகிறது; இன்ன மானே - (என்னால் காணப்படுகின்றவளாகிய) மானைப் போன்ற இவளே, முன்னும் மானினி - (எனக்குப்) பொருந்தும் இளமைச் செருக்குடைய பெண் ஆவாள்; மென்மென - கொஞ்சம் கொஞ்சமாக; மின்னும் ஆம் என்னின் ஆம் - (உள்ளத்தே அவ்வப்பொழுது) ஒளி வீசும் மின்னலை நிகர்வாளோ என நினைக்கின் ஆமாம் என்றே தோன்றுகிறது (உள்ளத்தே ஒளிர்வாள் என்றபடி); அன்னமும் ஆம் - (அடுத்தபடி வாழ்விற்கு இன்றியமையாத) உணவைப் போன்றவளும் ஆகிவிடுவாள்; என் மனன் (ஏ) மன்னும் - என்னுடைய உள்ளத்தில் தங்கி இருப்பவளும்; மா மானும் - திருமகளைப் போன்றவளும், மா மா - அழகிய செல்வமும் ஆகிய தலைவி

*குறிப்பு* கைக்கிளையில் தலைவியைக் கண்டு அவள் மாநில மடந்தையே எனத் துணிவு கொண்டு, தன்னை அவள் விரும்புவாளா எனக் குறிப்பறிய முயலும் தலைவன் தனக்குள் கூறிக்கொண்டது இது இரந்து பின்னிற்க எண்ணலுக்கு இனமாகிய துறை

தொடக்கத்தில் அழகுப் பொருளாக மட்டும் உள்ளத்தில் அவ்வப்பொழுது ஒளிர்பவள் நாளடைவில் உணவைப்போல வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதவள் ஆகிவிடுவாள் போலும் அன்னம் - உணவைப் போன்றவள் என உவம ஆகுபெயராகத் தலைவியை உணர்த்திற்று

*3. மூவெழுத்துப்பாட்டு*

ஈரெழுத்துப்பாட்டினைப் போன்றே மூன்று வருக்க உயிர்மெய் எழுத்துகளை மட்டும் பயன்படுத்தி யாக்கப்பெற்ற செய்யுள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ள நேரிசை வெண்பாவில் மகர, வகர, னகர வருக்க உயிர்மெய் எழுத்துகள் மட்டுமே பயிலப்பட்டுள்ளதால் இது மூவெழுத்துப்பாட்டு ஆகிறது.

***சான்றுப் பாடல்***

*மின்னாவான் முன்னு மெனினு மினிவேனின்*
*மன்னா வினைவே னெனைவினவ - முன்னான*
*வானவனை மீனவனை மானவினை வெல்வேல*
*மானவனை மானுமோ வான்* (***தனிப்பாடல்***)

***உரை*** வான் (ஈற்றடி) - மழையானது; மின்னா இனி வான் முன்னும் எனினும் - மின்னிக்கொண்டு இனிமேல் ஆகாயத்தின்கண் பொருந்துமென்றாலும்; வேனில் மன்னா இனைவேன் எனை வினவ - கோடைக்காலம் அடுத்ததால் வருந்துபவளாகிய என்னை நலம் உசாவ (கவனித்துக்கொள்ள என்றபடி), முன் ஆன வானவனை - மூவேந்தர்களுள் முதலாவதாக எண்ணப்படும் சேர வேந்தனையும், மீனவனை - கயற்கொடியை உடைய பாண்டியனையும், மான வினை வெல் வேல மானவனை மானுமோ - பெரும் போரில் வெல்லுகின்ற வேற்படையை உடையவனும் மனுகுலத்தில் வந்தவனுமான சோழ மன்னனை நிகர்க்குமோ (நிகர்க்காது என்றபடி).

*குறிப்பு* வான் (மழை) வான் (ஆகாயத்தில்) முன்னும், எனினும் எனை வினவ மானவனை மானுமோ என்பது முடிபு; மானாது என்பது கருத்து

இது சோழ மன்னன் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தியின் கூற்று மழையினால் நாட்டிற்கு ஏற்படும் நலத்தினும் சோழனால் தனக்கு விளையும் நலம் மிகுதியானது என்கிறாள்

மின்னா, மன்னா - இரண்டும் செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள்

***4. நான்கெழுத்துப்பாட்டு***

மூவெழுத்துப்பாட்டினைப் போன்றே நான்கு வருக்க உயிர்மெய் எழுத்துகளை மட்டும் கொண்டு புனையப்பெற்ற செய்யுள் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள நேரிசை வெண்பா ககர, லகர, வகர, னகர வருக்க உயிர்மெய் எழுத்துகள் மட்டுமே கொண்டதாக யாக்கப்பட்டுள்ளதால் இது நான்கெழுத்துப்பாட்டு ஆகிறது

***சான்றுப் பாடல்***

*யானக வென்னே யினையனா வாக்கின*
*கானக யானை யனையானைக் - கோனவனைக்*
*கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னிக்*
*கன்னிக் கனியனைய வாய்* (***தனிப்பாடல்***)

***உரை*** கன்னி (மூன்றாம் அடி) - ஓர் இளம் பெண்ணினுடைய; கொல் நயன வேல் - கொல்லும் தன்மையை உடைய கண்களாகிய வேற்படையும், நக்க கோகனக கை - அலர்ந்த தாமரை மலரைப் போன்ற கைகளும், கன்னிக் கனி அனைய வாய் - புதிய கொவ்வைப் பழத்தைப்போன்ற உதடுகளும்; கானக யானை அனையானை - காட்டில் இயல்பாகத் திரிந்து கொண்டிருக்கும் யானையைப் போன்ற வலிமை உடையவனாகிய; கோனவனை - என் தலைவனை; யான் நக - (அவனுடைய பாங்கனாகிய) நானே பார்த்து ஏளனம் செய்யும்படி; இனையனா ஆக்கின - (காதல் நோயால் வருந்திச் சோர்வுற்றுச் செய்வதறியாமல் திகைக்கின்ற) இத்தகையவனாகச் செய்துவிட்டன, என்னே - இந்த வியப்பை என்னவென்று சொல்ல

*குறிப்பு:* பாங்கற் கூட்டத்தில் இடம்பெறும் பாங்கன் கூற்று இது தலைவனின் காதல் வருத்தத்தைப் பார்த்து அவன் தலைமைக்கு இது அழகன்று என இடித்துக் கூறியும் தன் நிலையை மாற்றிக் கொள்ள இயலாத தலைவனை எண்ணி வருந்தும் இத்துறை பாங்கன் தன் மனத்து அழுங்கல் எனப் பெயர்பெறும் *

**எழுத்து வர்த்தனம்**

- எழுத்து வருத்தனம்

**எழுத்து வருக்கம்**

- அக்கர வருத்தனம்

**எழுத்து வருத்தனம்**

- அக்கர வருத்தனம்

## ஏகத்தாள்

▶ ஏகபாதம்

## ஏகபாதம்

ஏகபாதம் - ஓரே மாதிரியான அடி; ஒரு செய்யுளின் நான்கு அடிகளும் ஒரே மாதிரி அமைந்து மடக்கு வகையில் வெவ்வேறு பொருள் தருவதாக அமைவது ஏகபாதம் ஓர் அடியே நான்கு அடிகளாகவும் அமைந்த செய்யுள்.

*வினாஉத்தரம் ஏகபாதம் அன்றி* (*வீரசோழியம்*, 179)

*ஏகபாதம் நாற்கால் உச்சரிக்கப் பொருள் வேறாவது* (*வீரசோழியம்*, 179 உரை)

*பாதம் அனைத்தினும் மடக்குதல் பழிதீர்த்து*

*ஓதிய அனைத்திலும் உறும் அழகுஉடைத்தே* (*மாறனலங்காரம்*, 263)

*அடிமுழுதும் மடக்கலும் ஆங்கதன் சிறப்பே* (*தண்டியலங்காரம்*, 97)

[யாப்பருங்கலம், 96; குவலயானந்தம், 281 ]

***சான்றுப் பாடல்***

1. *பிரம புரத்துறை பெம்மான் எம்மான*
*பிரம புரத்துறை பெம்மான் எம்மான்*
*பிரம புரத்துறை பெம்மான் எம்மான்*
*பிரம புரத்துறை பெம்மான் எம்மான்*

ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாக வியந்து அந்தப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய் முதல் நடு இறுதி காணப்படாத வஸ்து எந்தப் பெரியோன் மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே ஓடாநின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமது உயிர், பிரமரூபத்திலே எண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத விருப்பம் உள்ளவனாய் என்னை ஒக்கவந்தவன் பிரமபுரம் என்கின்ற சீகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி பெரியோனும் எனக்கு உயிரானவனும் என்னை ஒக்கவந்தவனும் சீகாழிப்பதியில் வீற்றிருக்கும் கடவுள் எனக் கூட்டிப் பொருள் கொள்க. (*தேவாரம்*, 1:127:1)

2. *திருவரங் கத்துறை வான்செய லேயென்று தேறுமினே*
*திருவரங் கத்துறை வான்செய லேயென்று தேறுமினே*
*திருவரங் கத்துறை வான்செய லேயென்று தேறுமினே*
*திரவரங் கத்துறை வான்செய லேயென்று தேறுமினே*

திரு - செல்வத்தால்; வரு - வருகின்ற, உண்டாகின்ற; அங்க - அரசச் சின்னங்களின், நால்வகைப் படைகளின் (சதுரங்கம்) எனினும் ஆம்; துறு - நெருக்கத்தை உடைய, மிகுந்த என்பது கருத்து; ஐ - மன்னனே; வான் - துறக்க நாட்டை (சுவர்க்கம், வானுலகு); செய் - அழகுபடுத்துகின்ற; அலே - மதிற்சுவரையே (ஏகாரம் இசைநிறை); என்று - போல; தேறு - தேர்ச்சியடைகின்ற (பக்குவப்படுகின்ற); மினே - ஒளி மிக்க தவசியே (ஏகாரம் விளிப்பொருளில் வந்தது).

திரு - இலக்குமியும்; வரம் - மேன்மையும், கம் - பிரமனுக்கு உரிய; துறை - நூல்நெறியாகிய வேத வழக்கும் (வைதிகம்); வான் - ஆகாயமும்; செய் - நிலமும்; அலே - இருளும்; (ஏகாரம் எண்ணாற்பொருளில் வந்தது); என்று - சூரியனும்; தேறும் - (பட்டினியின் மெலிவு நீங்கி) உடல் நலம் பெறுவதும்; இன் ஏது - இனிமை மிக்க அமுதம் உண்டாகக் காரணமாகிய சந்திரனும்.

இரு உவர் அம் - அளவால் பெருமையும் உப்புச் சுவையும் பெற்ற நீர்நிலையாகிய கடலும்; கத்து உறை வான் - ஒலிக்கின்றதும் நீர்த்துளிகளை உடையதுமாகிய மேகமும்; செயல் ஏய - சேற்றினைப்போன்ற; என் - அடியேனின்; து - (அறியாமையாகிய) அனுபவத்திற்கு; தேறும் - தெளிவிக்கும் தேற்றான்விதை ஆவதும் (தேற்றான் கொட்டை கலங்கிய நீரைத் தெளிவிக்கும்); இன - இத்தகைய (இன்ன என்பதன் இடைக்குறை); ஏ - பெருமிதம் முதலிய யாவுமே

திரு அரங்கத்தான் - சீரங்கத்தில் திருக்கோயில் கொண்டுள்ள திருமாலின்; செயலே என்று - காரியங்களே ஆகும் என்று; (ஏகாரம் பிரிநிலை; வேறு எவருடையனவும் அல்ல என்பது பொருள்) தேறுமின் - உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்; (தேறுதல் - துணிதல்) ஏ - ஈற்றசை. உலக இயக்கங்கள் யாவும் திருமாலின் செயல்களே என்பது கருத்து

(திருவரங்கத் திருவாயிரம், 873)

3. *முருக வேடன் முதற்குரு நாதனே*
*முருக வேடன் முதற்குரு நாதனே*
*முருக வேடன் முதற்குரு நாதனே*
*முருக வேடன் முதற்குரு நாதனே*
(*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சித்ரகவிகள், ப.* 69)

முருக - (சமணரை வாதிற் செயித்த) அழகிய, ஏடன் - பனையேட்டினை உடையவர், முதற்கு - இறைவனான பரமசிவனைக் குறித்து; உரு - யாவரும் உருச் செபிக்கத்தக்க, நாதன் - பண்ணோடு கூடிய பதிகங்களைப் பாடியவர், ஏ - பூவாகிய கணைகளைக் கொண்டு;

முருகு - பெருவிழா நடத்துகின்ற; அவ்வேள்தன் - அந்த மன்மதனால் உண்டாகும், முது - முதிர்ந்த; அற்கு - அல்லுக்கு (மோக இருளை) நீக்குதற்கேற்ற; உரு - ஒப்பற்ற ஒளி வடிவினை உடையவர்; நாதன் - எல்லா உலகங்கட்கும் முதல்வர், ஏம் - கண்டாரது இறுமாப்பு;

உருகு - கரையும்படியான, அ - அழகுமிக்க, வேடன் - திருவுடையவர், முதல் - ஊதியந்தரும் முதற்பொருள் போன்ற; குரு - வியாழனது சம்பந்தமுடைய, நா தனேம் - நாவின் தன்மையையுடைய எங்களது

முருகவேடன் - முருகக் கடவுளான வேடகுமாரர்; முதல் - முதன்மை பெற்ற; குருநாதன் - குருநாதராவர் என்பது ஏ - அசை

## ஒருபொருட்பாட்டு

ஒரு பொருளை வருணித்துப் பாடும் பாடல் இப்போது கிடைக்கும் யாப்பருங்கல பதிப்பில் ஒருபொருட் பாட்டு என்பது சித்திரக் கவிகளில் ஒன்றாக கூறப்பட்டிருப்பினும் ஒரு பொருளைப் பற்றிப் பாடுவதை எப்படி சித்திரக்கவி எனக் கூறுவது என விளங்கவில்லை பெரும்பாலும் இதற்கு வேறு பாடபேதம் இருக்கலாம் என தோன்றுகிறது

இதற்கு மேற்கோளாக ஒரு பெண்ணின் தோளை வருணிக்கும் அகவல் அளிக்கப்பட்டுள்ளது அப்பாடலிலும் சித்திரக் கவித் தன்மை இருப்பதாகத் தெரியவில்லை. பாடல் வருமாறு

நிலைமண்டில ஆசிரியப்பா

*'மனங்கனிந் தன்ன மண்மிசைத் தோன்றிப்*
*பனங்கனி நிறத்த பருஉத்தாள் முழுமுதல்*
*நார்பொதி வயிற்றி னீர்பொதி மென்முளை*
*தந்துநிறுத் தன்ன தோற்றமொடு கவின்பெறத்*
*திரிந்துவிட் டன்ன திண்கெழு நுண்சுருள்*
*ஊழி நூழிலை யுயரிய வரைபுரை*
*கலிங்க மேய்ப்ப வாகிய நெகிழ்ந்து*
*வாளினங் கருக்கின் அவ்வயி றழுங்கச்*
*சூல்சுமந் தெழுந்த செம்முக் கணிகுலை*

*மூங்கா மூக்கெனத் தோன்றியாங் கெய்தி*
*அதிரலங்கன் கோதை யாயிழை மகளிர்*
*பரிசர மேய்ப்பப் பலபோது பொதுளி*
*நாய்சிரித் தன்ன தோற்றமோ டுடும்பின்*
*தோலுரித் தன்ன பூழ்படு பட்டைக்*

*கிளிச்சிற கேய்க்கும் பாவையம் பசுங்காய்*
*இழுதி னன்ன இன்கனி ஏந்தி*
*முரண்கொள் யானை முத்துப்படை அழுங்க*
*அரண்கொள் மாக்களிற் றோன்றும் நாடன்*

*அன்புதர வந்த என்புருகு பசலை*
*தனிமருந் தறியாள் அன்னை உருவுகிளர்*
*அந்தளி, ரென்னுமென் றடமென் றோளே'*

## ஒற்றுப்பெயர்த்தல்

ஒரு செய்யுளின் சொல்லொன்றில் உயிர்மெய்யெழுத்து ஒன்றை நீக்க அச்சொல் வேறொரு பொருளைத் தரும் வகையில் அமையும் கவி இதனை யாப்பருங்கல விருத்தி 'ஒரு மொழியைப் பாட்டின் இறுதிக்கண் வைத்துப் பிறிதொரு பொருள் பயக்கப் பாடுவது' என்று கூறுகிறது இந்த ஒற்றுப்பெயர்த்தல் *பிந்துசி யுதகம்* என்றும் அழைக்கப்பெறுகிறது

*தேருடைத்தாய்க் கற்பாய்த் திணைமருதாய்த் திண்மரம்*
*ஓரடியுட் பத்துடன் ஒற்றுப்பேர்த் - தேருடைய*
*பணபாவு தொல்சீர் மறமன்னர் தமமுன்னால*
*வெண்பா உரைப்பான் கவி* (**யாப்பருங்கல விருத்தி**)

இந்த மேற்கோள் வெண்பாவில் ஒற்றுப்பேர்த்து என்று இடம்பெற்றுள்ளது இதனால் ஓரடியுள் பத்துமரம் வருமாறு கூறியது ஒற்றுப்பெயர்த்தல் என்பது பெறப்படுகிறது ஒற்றுப்பெயர்த்தல் என்னும் சொற்றொடர் மெய்யெழுத்தைப் பிரித்து எடுத்தல் என்று மட்டுமே பொருள்தரும் இதனைக் கொண்டு செய்யுளில் பத்து மரங்களின் பெயர்கள் தொனிக்குமாறு இயற்றுதல் எனப் பொருள் கொள்ள இயலவில்லை ஆனால் எடுத்துக்காட்டு வெண்பாவில், "திண்மரம் ஓர் அடியுள் பத்துடன் ஒற்றுப் பேர்த்து ஏர் உடைய" என வருகிறது இதை வைத்துக் கொண்டுதான் அணி இலக்கணிகள் பத்துமரப் பெயரைப் பற்றிப் பேசுகின்றனர் இதனை நேரடியான இலக்கண நூற்பா இல்லாத புலவர் மரபாகத்தான் கொள்ள வேண்டியுள்ளது

தண்டியலங்கார உரை (98) இதனை இரு வகையாகச் சுட்டுகிறது

1 ஒரு மொழியில் மெய்யெழுத்தைப் பெயர்க்க வேறுபொருள் வருவது

2 தொடர்மொழி ஒன்றில் ஒன்றி நிற்கும் வேறு பொருளைப் பெயர்த்தெடுப்பது

*ஒருமொழி தொடர்மொழி யாகவொண் பொருள்படும்*
*அவற்றை அப்பொருள் தவிர மறுபொருள்*
*பெறச்சொலல் ஒற்றுப் பெயர்த்தல் ஆகும்* (**முத்துவீரியம்**, 1152)

*ஓதுயிர்மெய் மொழியின் ஒற்றுப் பெயர்க்குங்கால் பொருள்வேறு*
*உடையது ஒற்றுப் பெயர்த்தல்* (**சுவாமிநாதம்**, 198)

[இலக்கண விளக்கம், 690.]

***சான்றுப் பாடல்***

*என்னைநீ காயல் எரிகதிரோய் யான்பயந்த*
*பொன்னங் கழலான்பின் போகிய - மின்னைக்*
*கருதலரே ஆகிக் கருணனைக்கொன் றிட்ட*
*பருதிவேற் பாண்டவரைக் காய்*
(**யாப்பருங்கல விருத்தி**. மேற்கோள் பாடல், பக். 576 - 577)

பாடலின் இறுதி அடியிலுள்ள காய் என்பது கனியின் முந்தைய நிலையைக் குறிக்கவில்லை. செவிலித் தாய் சூரியனை நோக்கி, தலைவி உடன்போக்கை மேற்கொள்ளக் காரணமாக இருந்த அர்ச்சுனனைக் காய் என்று கூறுவதாக உள்ளது

பாண்டவர் - அர்ச்சுனன்

***தண்டி கூறும் முதல் வகை:***

***சான்றுப் பாடல்***

*வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து*
*மண்குளிரச் சாயல் வளர்க்குமாந் - தண்கவிகைக்*
*கொங்கா ரலங்க லநபாயன் கொய்பொழில்சூழ்*
*கங்கா புரமா ளிகை* (**தண்டியலங்காரம்**: மேற்கோள் பாடல், ப. 247)

இங்கு மாளிகை என்பதில் மகரவொற்றைப் பெயர்க்க 'ஆளிகை' என்பது நிற்கும்; இது ஆள்கின்ற அநபாயனது கை என்னும் பொருளைத் தருகிறது 'மாளிகை' என்பது கங்காபுரத்திலுள்ள அரண்மனையைக் குறிக்கிறது ஆக, மகர ஒற்று இடம்பெற்றால் ஒரு பொருளும், மகரவொற்றைப் பெயர்த்தால் வேறொரு பொருளும் தரும் வகையில் இச்செய்யுள் அமைந்துள்ளது

***தண்டி கூறும் இரண்டாம் வகை.***

*பொற்புடைய மாதர் புலவரோ பொய்ம்மருவாச்*
*சொற்பயிலும் பாண! சுடர்மணித்தேர் - கற்புடைய*
*வஞ்சிநகர் சேரினற மாமருதா ரான்மகிழா*
*நஞ்சனைய நல்வயலூ ரற்கு*
(**தண்டியலங்காரம்** (வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சார்யர்) மேற்கோள் பாடல், ப. 76)

இப்பாடல் தலைவனின் தேர் வருகையையும் அதனோடு தலைவியின் பிணக்கின் தன்மையையும் சேர்த்து மருத நிலத்தின் வாழ்க்கையமைப்பைச் சுட்டுகிறது இப் பாடலின் மூன்றாமடியை ஒற்றுப் பெயர்த்தால் வஞ்சி, நகர், சேர், இல், நறவு, மா, மருது, ஆர், ஆல், மகிழ் என்னும் பத்து மரங்களின் பெயர்கள் கிடைக்கின்றன இங்கு தொடர்மொழியில் ஒன்றி நிற்கும் வேறு பொருளைப் பெயர்த்தெடுப்பதால் இது ஒற்றுப் பெயர்த்தலாகிறது

## ஒற்றெழுத்து இல்லாப் பாடல்

மெய்யெழுத்துகளே இல்லாமல் உயிர் அல்லது உயிர்மெய் எழுத்துகளை மட்டுமே கொண்டு அமையும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள் தண்டியலங்காரம், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டும் ஒற்றெழுத்தின்றி வருவதாகிய இச்சித்திர(க்)கவி வகையைச் சொல்லணிகளில் ஒன்றாகிய மடக்கணியுடன் சேர்த்துக் கூறுகின்றன தண்டியாசிரியர் கூறும் “ஓர் எழுத்து மடக்கலும் உரித்தென மொழிப” என்னும் மடக்கின் புறநடை நூற்பாவின்படி (சொல் 6) இத்தகைய சித்திர(க்) கவிகள் எல்லாவற்றையும் மடக்கின்கீழ் அடக்குதலும் அமையும்

[தண்டியலங்காரம், 97, இலக்கண விளக்கம், 689.]

***சான்றுப் பாடல்***

*நுமது புனலி லளியி வரிவை*
*யமுத விதழி னிகலு - குமுத*
*மருவி நறவு பருக வளரு*
*முருவ முடைய துரை* (***தண்டியலங்காரம்***: மேற்கோள் பாடல், 221)

*சரவண சாதா சசிமக ணாதா வாரிச பாதா*
*சிரவண ரீசா குறமக ணேசா சிவபத தாரக தேவா*
*அரவண வோரா கமுளவி ராசா வருளொரு ஞானவி னோதா*
*கரவண வாமே வருகென வேநீ கருணையி னாலழை யாயே*
(*திருவலங்கற்றிரட்டு*, ப. 47)

## ஒன்பது கூற்றிருக்கை

➤ எழுகூற்றிருக்கை ▾

## ஓட்டியம்

இதழ் இயைந்தும், குவிந்தும் ஒலிக்கும் எழுத்துகளை மட்டும் கொண்டு இயற்றப்பெறும் செய்யுள்

இதழ் குவிந்து இயைந்து இயல்வது ஓட்டியம் (***மாறனலங்காரம்***, 275)

இது மூவகைப்படும்

***1. இதழ் குவிந்த ஓட்டியம்***

இதழ் குவித்து ஒலிக்கப்படும் எழுத்துகளால் அமையும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

குருகு குருகு குருகொடு கூடு
குருகுகுரு கூருளுறு கோ (***மாறனலங்காரம்***: மேற்கோள் பாடல், 771)

***2. இதழியைந்த ஓட்டியம்***

இதழ் இயைவதால் தோன்றும் பகர, மகரங்கள் கொண்டு இயற்றப்பெறும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

*பம்மும்பம் கும்பம்மு மம்மம் மமைமமாமை*
*பம்மும்ம மும்மேமம் பாம்* (***மாறனலங்காரம்***: மேற்கோள் பாடல், 772)

***3. இதழ் குவிந்தியைந்த ஓட்டியம்***

இதழ் குவிவதால் அல்லது இயைவதால் தோன்றும் எழுத்தொலிகளால் ஆன செய்யுள்

*சான்றுப் பாடல்*

*குருகுமடு வூடு குழுமுகுரு கூரு*
*ளொருபெருமா னோவாமை யூறு - முருகொழுகு*
*பூமாது வாழும் புவிமாது மேவுமொரு*
*கோமானு வாவோது கோ* (*மாறனலங்காரம்*, மேற்கோள் பாடல், 773)

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்து உயிர்களும் ப, ம, வ என்னும் மூன்று மெய்களும் உதடுகளின் முயற்சியால் பிறக்கும் தமிழ் முதல் எழுத்துகள் ஆகும் ஏனைய 15 மெய்களின்மேல் முற்கூறிய ஐந்து உயிர்கள் ஏறப்பிறக்கும் 75 உயிர்மெய்களும் உதட்டின் தொடர்பு உடையனவே இவை 75, பகர மகர வருக்க உயிர்மெய்கள் 36, முற்சுட்டப்பெற்ற முதலெழுத்துகள் எட்டு ஆக மொத்தம் 119 எழுத்துகளை உதட்டெழுத்துகள் எனலாம்

இந்த 119 எழுத்துகளை மட்டும் பயன்படுத்தி ஏனையவற்றை முற்றிலுமாக நீக்கி விட்டுப் படைக்கும் சித்திர(க்)கவி வகையை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் *குவிபா* என வழங்கியுள்ளார் பெயரின் மூன்று எழுத்துகளும் உதட்டெழுத்துகளாகவே உள்ளதைக் காணலாம் இது நிரோட்டகம் என்னும் இதழகலுக்கு மாறானது

வண்ணச்சரபர் 'குவிபா ஒருபது' எனப் பதிகவகை ஒன்றை இவ்வகையில் இயற்றியுள்ளார்

*ஒருபது குவிபா வோதுவ கோடு*
*மருவுபே ருவாவு மாவடும் வேலுமே*
(*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*, குவிபாவொருபது: காப்புப்பாடல்)

*உரை* ஒருபது - பத்து என்னும் தொகையை உடைய; குவி - இதழ் குவியப் பாடும்; பா - பாக்களை உடைய இப் பிரபந்தத்தை; ஓதுவ - குற்றம் அறச் சொல்லுவிக்கும் தெய்வங்கள்; கோடு - ஒற்றைக் கோட்டினை; மருவு - பொருந்திய ; பேர் - பெரிய; உவாவும் - விநாயக மூர்த்தியாகிய யானையும்; மா - கசமுகாசுரனை; அடும் - மாய்த்த, வேலும் - அம்மூர்த்தியின் ஆயுதமும் ஆம் ஏ - அசை

*கருத்து*. விநாயகக் கடவுளாகிய யானையுங் கசமுகாசுரனைக் கொன்ற கொம்பாகிய அக்கடவுளாயுதமும் என்று சொல்லப்பட்ட தெய்வங்கள் இக் குவிபா ஒருபதென்னும் பிரபந்தத்தைக் குற்றமறச் செய்விக்கும் என்பதாம்

கோடுமருவு பேருவாவு மாவடு வேலும் என்பதற்கு மலைகளின் உச்சியில் வசிக்கும் பெருமை பொருந்திய இளையவராகிய சுப்பிரமணியக் கடவுளும் மாமரமாகிய சூரனை மாய்த்த வேலாயுதமுமாகிய தெய்வங்களெனவும் பொருளுரைத்துக் கொள்க ஓதுவ என்பது பிறவினைப் பொருளில் வந்தது

*பாவம் படுமிப் படுநோ வறுமா*
*கோவம் பொயோடோ டுறுகோ வுகொடோ*
*மாவம் புறுமா துமைபா லுணுவா*
*வாவம் புகுமெம் முளுமாம் விபுவே*
(*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*, குவிபாவொருபது பா. 4)

*உரை:* பாவம்படும் - பாவ சம்பந்தமாகிய; இப்பருநோவுஅறுமா - இந்தப் பெரிய துன்பமானது நீங்கும்படி; கோவம் - கோபமானது; பொயொடு - அசத்தியத்துடனே; ஓடுறு - நீங்குதற்கேதுவாகிய; கோவு - ஞான நேத்திரத்தை; கொடு - அடியேனுக்குக் கொடுத்தருள்வீராக, ஓமா - பிரணவத்தின் பொருளாயிருக்கின்றவரே; வம்புஉறு - கச்சினையுடைய; மாதுஉமை - உமா தேவியினது; பால் - முலைப்பாலை; உண் - உண்ட; உவாவா - இளமைப் பருவத்தையுடையவரே; அம்பு - கண்ணீரை; உகும் - துயரத்தால் உதிர்க்கின்ற; எம் உளும் - எங்கள் உள்ளத்தினும்; ஆம் - நிறைந்திருக்கின்ற; விபுவே - வியாபகரே.

*கருத்து* உமாதேவியின் முலைப்பாலையுண்ட இளமைப் பருவத்தை உடையவரே! கண்ணீர்விட்டு இரங்கும் எங்கள் உள்ளத்தினும் நிறைந்திருக்கின்றவரே! இப்போது நேரிட்டிருக்கும் பெருந்துன்பம் நீங்கும் பொருட்டு ஞான நேத்திரத்தை அடியேனுக்குத் தந்தருள்வீராக
(*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*)

## ஒட்டிய நிரோட்டியம்

ஒட்டியம், நிரோட்டியம் என்னும் இரண்டு தன்மைகளும் ஒருசேர அமைந்து வரும் செய்யுள்

*இருமையும் ஒன்றின்உள் இருவகைத் தாயுறும்*
*பெருமிதம் ஓட்டிய நிரோட்டியம் எனப்பெறும்* (*மாறனலங்காரம்*, 276)

ஓட்டியமும் நிரோட்டியமும் முறைதடுமாறாது (ஒற்றைப்படை எழுத்துகளெல்லாம் உதட்டின் உதவியால் பிறப்பனவாகவும் இரட்டைப்படை எழுத்துகளெல்லாம் உதட்டின் உதவி இல்லாமல் பிறப்பனவாகவும்) வருவது ஓட்டிய நிரோட்டியம் எனலாம்

***சான்றுப் பாடல்***

*மதிமடவார் வேலைவேய் மாரவேள் சோலை*
*பதிகுயிலோ டேவன் பகைகூர் - விதியுங்*
*குறிதோநா கூராகுறி துளவக் கோதை*
*முறிகூ யருளே முற* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 774)

*மாக மழைவண மாக மரைமாதா*
*வாக மணிமுடிவான் மீனமென வாகவணி*
*மாதவா காவலா வாகவிதை பாடவணி*
*போதமே தாமரி போல்* (*தி.க சண்முகம்*: *சித்திரகவி மாலை*, *ப*. 20)

முன்னிரண்டடி ஓட்டியமும் பின்னிரண்டடி நிரோட்டியமுமாக வரும் ஓட்டிய நிரோட்டியம்

*வதுவை யொருபோது வழுவாது வாழும்*
*புதுவை வருமா துருவம்பூணு - முதுமைபெறு*
*நாதன யரங்கனையே நன்றறிந்தார்க்கே யடியேன்*
*தாதனென நெஞ்சே தரி* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 775)

சூத்திரத்தில் வகைத்தாயுறும் என்று கூறுவதால் நிரோட்டிய ஒட்டியம் என முறைமாற்றியும் கவிஞர்களால் இயற்றப்பெற்றுள்ளன

*கற்றைச் சடையார் கயிலைக்கிரி களைந்தான்*
*செற்றைக் கரங்கள் சிரங்கணிறைந் - தற்றழிய*
*வேவேவு மெவ்வுளுறு மேமமுறு பூமாது*
*கோவே முழுதுமுறு கோ* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 776)

நிரோட்டியம் ஓரடி, ஓட்டியம் ஓரடி என்பதாக மாறிமாறி வரும் வகையிலும் பாடல் இயற்றப்பெற்றுள்ளது

*புதுமுரு குறுமொரு பொதுமுது குழுவொடு*
*நதிசசி யகிசடை யசைதர நனிநடி*
*பொதுமுழு வுருவுளு முறுமொரு குருவுரு*
*நிதியர னிணையடி தலைதனி லணிகநீ* (*தி.க.சண்முகம் சித்திரகவி மாலை*, *ப*. 18)

## ஓரினத்தெழுத்து

- ஓரினப்பாட்டு

## ஓரினப்பாட்டு

ஓர் இன எழுத்துகளால் மட்டுமே இயற்றப்பெறும் செய்யுள் இது 1 வல்லினப்பாட்டு, 2. மெல்லினப்பாட்டு, 3 இடையினப்பாட்டு என மூன்று வகைப்படும்

தண்டியும், மாறனலங்கார ஆசிரியரும் இதனை மூன்று தனித்தனி அலங்காரங்களாகக் கொள்வர்.

[வீரசோழியம், 179; குவலயானந்தம், 281.]

***1. வல்லினப்பாட்டு***

*வல்லினம் முழுதுறல் வல்லினப் பாட்டே* (*மாறனலங்காரம்*, 271)

***சான்றுப் பாடல்***

1. *பொற்றொடிகற் சட்டகத்தைப் போக்கிப் புறத்திறுத்த*
*கற்புறத்தற் காட்சிக் கதிகொடுத்த - சிற்றடிப்போது*
*உச்சிப் பதிக்கத்தா கூற்றச் சுறுத்தாது*
*கச்சிப் பதிக்கத்தா கை* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 767)

2. துடித்துத் தடித்துத் தடுப்பெடுத்த கோடற்
றொடுத்த தொடைகடுகைக பொன்போற் - பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிடத்து காடு (தனிப்பாடல்)

*2. மெல்லினப்பாட்டு*

மெல்லினம் முழுதுறல் மெல்லினப் பாட்டே (மாறனலங்காரம், 272)

*சான்றுப் பாடல்*

1. மனமே நினைஞான மன்னாமை மீன
மனமேன மெங்ஙனெனி ஙங்ஙன் - முனமான
னேமிமான் மாமா னினிநீண் மனமான
நேமிமா னன்னாம நீ (மாறனலங்காரம்: மேற்கோள் பாடல், 768)

2. மானமே நண்ணா மனமென் மனமென்னும்
மானமான் மன்னா நனிநாணும் - மீனமா
மானா மினன்மின்னி முன்முன்னே நண்ணினும்
மானா மணிமேனி மான் (தனிப்பாடல்)

*3. இடையினப்பாட்டு*

இடையினம் முழுதுறல் இடையினப் பாட்டே (மாறனலங்காரம், 273)

*சான்றுப் பாடல்*

1. வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வர் அயலுழுவார்
வாழ்வாருள் வாழா தவர் (யாப்பருங்கல விருத்தி: மேற்கோள் பாடல், ப 575)

2. விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே - வரவொழிவாய்
ஆயர்வா யேயரிவை ஆருயிரை ஈராவோ
ஆயர்வாய் வேயோ அழல் (தனிப்பாடல்)

## ஓரெழுத்துப்பாட்டு

▸ எழுத்துப்பாட்டு ▾

## கடகபந்தம் (பதும பந்தம்)

கடகம் - கைவளை, கைவளை அமைப்பில் சித்திரம் ஒன்றை வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்தி இயற்றப்பெறும் செய்யுள்

பெருவகன்ற அறையிற் பெந்திப்பதுவும்
கருதுகில் கடகபெந்தம் ஆகும் (மாறனலங்காரம்: ப. 500, அடிக்குறிப்பு)

மாவலகில் ஏற்கும்அறை ஒருவரியாய் நான்கு
வரிபிடியாய் ஏற்கும்அறை வலஞ்சுற்றி முனைமேல்
மேவல்கட கபெந்தம் (சுவாமிநாதம், 200)



இது இரு வகையாக அமைகிறது.

*சான்றுப் பாடல்*

முதல்வகை

கோலநில மேலழகு கூடுநெடு வீடுறமா
மூலமெனச் சென்றுதவு முன்னோனே- நீலமணி
வண்ணா வடமலையா மாதவா கஞ்சமலர்க்
கண்ணா சரணா கதி
(மாறனலங்காரம்: மேற்கோள் பாடல், 811)

**வாசிக்கும் முறை**

கடகத்தின் மேல்பகுதியில் உள்ள முகப்பை அடுத்த இடப்புற எழுத்தில் (கோ) தொடங்கி, முகப்பில் நுழைந்து மேல்கீழாக வாசித்து இவ்வாறே முகப்பின் இறுதியிலுள்ள எழுத்தையும் வாசித்துக் கடகத்தை வலம்சுற்றிப் படிக்கையில் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

2/4/6 - ல, 10/12/14 - டு

செய்யுளில் அமையும் எழுத்துகள் 60; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 56

இரண்டாம்வகை

*நாகநக ராகநிதி நாகரிக ராகநிறை*
*யேகநகராசி யிணையில்லா - தார்கணிகழ்*
*தென்னரங்க னாளாய சீராள ராஞான*
*நன்னரங்கர்க் கேயடியே னான்*
(*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 812)



**வாசிக்கும் முறை**

கடகத்தில் மேல்பகுதியில் உள்ள முகப்பிற்கு முன் அமையும் எழுத்தில் (நா) தொடங்கி முகப்பு எழுத்துகளை வாசித்துத் தொடர்ந்து வலஞ்சுற்றிப் படித்து நான்கு மூலைஎழுத்துகளையும் இரண்டு முறை வாசித்துக் கடகத்தின் மேல்பகுதிவரை செல்லச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

2/4/6 - க, 18/20 - க, 23/25 - யி, 44/46- ரா, 49/51 - ன

செய்யுளில் அமையும் எழுத்துகள் 62, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 56

## கடகபெந்தம்

▶ கடகபந்தம்

## கண்டகட்டு

'கண்டகட்டு' என்பது, 'பசுக்கொண்டு போது என்று சொல்லப் போயினான் சென்று கண்டு மீண்டு வந்து, அவையுள்ளாயின, என்னிற் போதாவாயின என்று அவிழ்ப்பது பிறவும் அன்ன' என்று யாப்பருங்கல விருத்தி 96 உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது இதன் விளக்கம் தெளிவாகவில்லை

## கமலபந்தம்

தாமரை வடிவில் அமைந்த சித்திரம் ஒன்றில் உரிய முறையில் எழுத்துகளைப்பொருத்தி இயற்றப்பெறும் செய்யுள்

*எண்ணிரண்டு இதழாய்க் கோண்இரு நான்கின்*
*கண்உற நடுவணப் பொகுட்டுஅது காட்டிப்*
*பண் அமைப்பதுவும் பதுமபெந்தம்* (*மாறனலங்காரம்*, 283)



***சான்றுப் பாடல்***

1. *மாறா மாலாலே மாறாமா*
*மாறா மாவேளே மாறாமா*
*மாறா மாகோவா மாறாமா*
*மாறா மாவாதே மாறாமா*
(*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 787)

**வாசிக்கும் முறை**

சித்திரத்தில் காட்டியுள்ள எண்முறைப்படிப் படிக்கச் செய்யுள் கிடைக்கும் அம் முறையாவது

முதலடி 1, 2, 3, 4, 5, 1, 6, 7
இரண்டாமடி 1, 6, 7, 8, 9, 1, 10, 11
மூன்றாமடி 1, 10, 11, 12, 13, 1, 14, 15
நான்காமடி 1, 14, 15, 16, 17, 1, 2, 3

பாடலில் அமையும் எழுத்துகள் 32, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 17.

2 *பாதிபதி பாதிசதி ஆதிமதி ஆதிநதி*
*ஓதிபுனை சோதிசெவி ஓதிவிதி - நீதிபதி*
*செல்லச் சிறைவிடுத்த செங்கைவடி வேல்முருகா*
*வல்லமயில் மாமுதுகில் வா*

(ப.வெ பழனிமலை நாயனார்' **ஸ்ரீமத் இராமாயணம்**, ப 30)

**வாசிக்கும் முறை**



தாமரை மலரின் பொகுட்டை அடுத்துள்ள முதல் அடுக்கு இதழ்களில் மேலே உள்ள எழுத்தில் (பா) தொடங்கி (உடுக்குறி) பொகுட்டினுள் உள்ள எழுத்தை வாசித்து மீண்டும் முதல் அடுக்கு இதழொன்றை வாசித்துப் பொகுட்டினுள் உள்ள எழுத்தை வாசிக்க வேண்டும் இவ்வாறே ஒவ்வொரு இதழ் எழுத்துடனும் (முதல் அடுக்கு) பொகுட்டு எழுத்தினைச் சேர்த்து வாசிக்க வேண்டும் இரண்டாவது, மூன்றாவது அடுக்குகளை மேலிருந்து வலம் சுற்றிப் படிக்கையில் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

2/4/6/8/10/12/14/16 - தி

பாடலில் அமையும் எழுத்துகள் 64;
சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 57

## கரந்துறை செய்யுள் (கரந்துறை பா)

கரத்தல் - மறைத்தல், உறைதல் - இருத்தல் ஒரு செய்யுளுக்குள்ளேயே மற்றொரு செய்யுள் மறைந்திருப்பது அதாவது இரண்டாவதாக எழுதப்படும் செய்யுள், முதலாவதாக எழுதப்பட்ட செய்யுளின் எழுத்துகளைப் பொறுக்கி எடுத்து அமைக்கப்படின் அது கரந்துறை செய்யுளாகும்

*ஓர் பாவினில் இருந்து ஓர்பாக்கு உரியன*
*அக்கரம் பொறுக்கிக் கொளல் ஆகும்படி*
*பாடல் கரந்துறை பாட்டென மொழிப* (**முத்துவீரியம்**, 1142)

*ஓர் கவிக்குஓர்கவி சொல்லின்*
*அழுந்தாமல் எழுத்தெடுத்தல் கரந்துறையும் செய்யுள்* (**சுவாமிநாதம்**, 197)

குறிப்பு' கரந்துறை செய்யுளுக்கு தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்கள் குறிப்பிடும் இலக்கணத்திலிருந்து யாப்பருங்கலம், மாறனலங்காரம் இரண்டும் வேறுபடுகின்றன

இவையிரண்டும், ஒரு செய்யுளில் ஈற்று மொழியின் முதலெழுத்தில் தொடங்கி ஒவ்வோர் எழுத்தாக இடையிட்டுப் படித்தால் கிடைக்கும் மற்றொரு பாட்டு கரந்துறை பாட்டு என்று கூறுகின்றன.

*முதல்ஒரு செய்யுள் முடித்துஅதன் ஈற்றில்*
*பதன்அதன் இறுதியில் பயில்எழுத்துத் தொடுத்து*
*இடையிடை யிட்டுஎதிர் ஏறாய் முதல்அயல்*
*அடைதரப் பிறிதுஒரு செய்யுள் கரந்துஅங்கு*
*உறைவது கரந்துறை செய்யுளென்று உரைபெறும்* (**மாறனலங்காரம்**, 288)

[யாப்பருங்கலம், 96; மாறனலங்காரம், 288; தண்டியலங்காரம், 98; இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281 ]

***சான்றுப் பாடல்***

1. *அகல்அல்குல் தேரே அதரம் அமுதம்*
*பகர்தற்கு அரிதுஇடையும் பார்க்கின் - முகம்மதியம்*
*முத்துஎன்ன லாமுறுவல் மாதர் முழுநீலம்*
*மைத்தடங்கண் வெவ்வேறு வாள்* (**தண்டியலங்காரம்**: மேற்கோள் பாடல் ப. 234)

இச்செய்யுளில் மறைந்திருக்கும் மற்றொரு செய்யுள் வருமாறு

*அகர முதல எழுத்துஎல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*

*2. சீரே நிறைசுகச் செந்திலில் வேலான் திரள்பதத்தை*
*நீரே நிறைகுடத் தான்முழுக் காட்டிநல் நேசம்உற*
*வாரே நிறைமண நன்னகச் சேயனை மான்உதவும்*
*ஆரே நிறைமகள் காந்தனைச் சார்துதி யாற்றுநெஞ்சே*
(***கந்தன் சித்திரபந்தன மாலை***, *ப* 35)

இச் செய்யுளில் மறைந்திருக்கும் மற்றொரு செய்யுள் வருமாறு

*நல்வேலா செட்டிநகர் நஞ்சப்ப மன்னுதவு*
*கல்யாண சுந்தரனைக் கா*

## கரந்துறை பா

▶ கரந்துறைச் செய்யுள்

## கரவு வெளிப்படுப்பு

ஒருவன் மறைத்துச் செய்த செயலை அறிந்த மற்றவர் அச்செயலைத் தான் அறிந்தமையைத் தன்னுடைய செயல் மூலம் குறிப்பாக வெளிப்படுத்துவதாகப் பாடப்படும் செய்யுள்

*ஒருவன் மறை செய்கை ஓர்ந்து கருத்தோடு உறுதொழிலால்*
*விரவும் அதை வெளிஆக்கல் கரவு வெளிப்படுப்பாம்*
*உரியன் மனைக்கு வரவும் மனைவி உறவிரித்தாள்*
*பரவுஅணை என்பது உதாரணம் எட்டம பாண்டியனே* (**குவலயானந்தம்** (*மி*) 144)

இதில் இடம்பெறும் இறுதி இரண்டடிகளே இதற்குச் சான்றாகின்றன

தலைவன் பரத்தையிடம் சென்று வருவதை அறிந்த தலைவி அவன் ஓய்வெடுப்பதற்காகப் படுக்கை விரித்துக் கொடுக்கிறாள் இவளது இந்தச் செயல் தலைவனின் தவற்றை அவள் அறிந்ததை உணர்த்துகிறது

## கல்லவல்

நாடறி சொற்பொருள் பயப்பப் பிழையாமை வாசகம் செய்வது

***சான்றுப் பாடல்***

*'மனையிற்கு நன்று*
*முதுபோகக்குத் தீது*
*முதுபோக்கே அனறு*
*பெருமூர்க்குத் தீது'*

யாப்பருங்கல விருத்தியில் சான்றுடன் குறிப்பிடப்பட்டிருப்பினும் இது தெளிவாக விளங்கவில்லை

## கலிபுருடச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## காடகச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## காதைகரப்பு

காதை - சொல்; கரப்பு - மறைவு செய்யுளின் இறுதி அடியிலுள்ள ஈற்று அயலெழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு ஒவ்வோர் எழுத்தாக இடையிட்டுப் படித்துக்கொண்டே செல்ல மற்றொரு செய்யுள் கிடைக்கும் வகையில் அமைந்திருக்கும் பாடல்

*காதை கரப்பது காதை கரப்பே* (***மாறனலங்காரம்***, 289)

*யாப்பிறு மொழிமுதல் அக்கரம் தொடங்கி*
*ஒவ்வோர் எழுத்துஇடை ஒழித்து வாசிக்க*
*வேறொரு செய்யுள் விளைப்பது காதை*
*கரப்பாம் என்மனார் கற்றுணர்ந் தோரே* (***முத்துவீரியம்***, 1141)

*...பாட்டு ஒன்று இறுதி*
*மேலாய்ஒன்று இடைவிடவேறு ஆம்காதை கரப்பே* (***சுவாமிநாதம்***, 197)

*குறிப்பு* யாப்பருங்கலம், மாறனலங்காரம் இரண்டும் இரண்டாவதாக எழுதப்படும் செய்யுள் முதலாவதாக எழுதப்பட்ட செய்யுளின் எழுத்துகளைப் பொறுக்கி எடுத்து அமைக்கப்படின் அது கரந்துறை செய்யுள் என்கின்றன

யாப்பருங்கலம், மாறனலங்காரம் இரண்டும் கரந்துறை செய்யுளுக்கு உரிய இலக்கணத்தைக் காதை கரப்புக்கும், காதை கரப்புக்கு உரிய இலக்கணத்தைக் கரந்துறை செய்யுளுக்கும் கூறுகின்றன

[யாப்பருங்கலம், 96; வீரசோழியம், 179 உரை; தண்டியலங்காரம், 98, இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281.]

***சான்றுப் பாடல்***

1. *வாளரசு குமரா வொமங் குகா*
*வாளரு சுகநிலா வுமங்களா*
*வாளசுர விபலா கமன்விபூ*
*வாளரவி தழிமேனி மஞ்சகா* (*திருவலங்கற்றிரட்டு, ப.* 581)

இச் செய்யுளை இடையிட்டு வாசித்தால் பின்வரும் செய்யுள் கிடைக்கும்

*சமமே தரவா*
*விமலா விசுவா*
*கமலா கருவா*
*குமரா குரவா*

2. *பூவே ளாகவாழ் மாவா கெல்லரி*
*யேபா வைப்போ னலமா வாரியே*
*பாரோர் பேசீ கைபினும் மாநக*
*ரவைதினந் தேசணிச் சோம நேரா*
*நம்பு குணங்கூ ழளிவ லாரிமா*
*வாச னம்மா பாரிம் மாலே* (*தி.நா ராமச்சந்திரன்: சித்திரகவி மாலை, ப.* 40)

இச் செய்யுளை இடையிட்டு வாசித்தால் பின்வரும் செய்யுள் கிடைக்கும்

*மாரி மான வாரி வழங்கும்*
*ராமச் சந்திர நம்பிசீர்*
*பாரி மானப் பாரில் வாழ்கவே*

*குறிப்பு*: இப்பாடல் கரந்துறை செய்யுள் என்னும் பெயரில் சித்திரகவி மாலை (ப 40) இல் அமைந்துள்ளது

## குதிரைப் பாய்த்துச் சதுரங்கம்

▶ சதுரங்கம் ▼

## குவிபா

▶ ஓட்டியம் ▼

## கூட சதுக்கம்

கூடம் - மறைவு; சதுக்கம் - நான்கன் கூட்டம் மாறனலங்காரம், இதனைக் **கூட சதுர்த்தம்** என்கிறது. ஒரு செய்யுளின் ஈற்றடியில் அமைந்துள்ள எழுத்துகள் ஏனைய மூன்றடிகளிலும் மறைந்து நிற்கும் வகையில் அமையும் பாடல்

*பாடலின் நாலாம் பதம்பொறி வரியிடைக்*
*கூடம்உற் றதுவே கூடசதுர்த்தம்* (*மாறனலங்காரம்*, 293)

*. . . பின்அடி எழுத்துஏனை அடியின்*
*விழுந்துஅடங்கல் கூடச்சதுக்கம்* (*சுவாமிநாதம்*, 197)

[யாப்பருங்கலம், 96; தண்டி, 98; இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281 ]

***சான்றுப் பாடல்***

1. *போதாவே மாதாகா வாமாயூ ராநேசா*
*யோதாதி யேவாவே கோவேபூ பாலாவா*
*நாதாவே சூதேதே காவாயே தேவாவா*
*தாதாமா நேதாவா வேலாதா தேவாவா* (*கந்தன் சித்திரபந்தன மாலை, ப.* 31)



2. *போதா வாணி தாசா வாசவா புண்ணிய முளயோக*
*வேதா நாரா பூமா நேமா வாமா நகைமுகத்தோ*
*னேதா மாமா ராமிகு நீதா காவா வானெழிலி*
*தாதா சண்முக நாமா வாகைத் தாரா நீவாழி* (*தி க ச. சித்திர கவிமாலை*, *ப*. 72)

## கூட சதுர்த்தம்

▶ கூட சதுக்கம்

## கூர்மச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## கோமூத்திரி

நான்கடிச் செய்யுளின் முதல் இரண்டடிகளை ஓரடியாகவும் அடுத்த இரண்டடிகளை ஓரடியாகவும் எழுதி மேலும் கீழும் இடையிட்டுப் படித்தால் அந்தச் செய்யுளே வரும் வகையில் இயற்றப்பெறுவது

*கோமூத் திரநடை பெறல்கோ மூத்திரி* (**மாறனலங்காரம்**, 294)

*வரிகள் இரண்டு இரண்டாய்மேல் கீழ்இடைஒன்று அகற்றி*
*வாசிப்பநேர் சொல்பாட்டு ஒத்தல் கோமூத்திரி* (**சுவாமிநாதம்**, 196)

[யாப்பருங்கலம், 96; வீரசோழியம், 179, தண்டியலங்காரம், 98, இலக்கண விளக்கம், 690, குவலயானந்தம், 281.]

***சான்றுப் பாடல்***

*மாயா மாயா நாதா மாவா*
*வேயா நாதா கோதா வேதா*
*காயா காயா போதா காவா*
*பாயா மீதா பேதா பேதா* (**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 800)




*பதும நாபியி லேயிறை தேவியே*
*சதுர மாமறை ஞானசு வாலையே*
*மிதுன நாதயி தாயிசை தேடியே*
*மதுர மாபொறை மோனவி வாணியே*
(பா வெ பழனிமலை நாயனார். **ஸ்ரீமத் இராமாயணம்**, ப. 16)




## சக்கரச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## சக்கர பெந்தம்

▶ சக்கரம்

## சக்கரம்

வண்டிச் சக்கரம் போல் வரையப்பட்ட சித்திரம் ஒன்றில் அதன் குடம், பரிதி, ஆரங்கள் ஆகியவற்றில் உரிய முறையில் செய்யுளின் எழுத்துகளைப் பொருத்தி இயற்றப்பெறும் செய்யுள்

இது நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் எனப் பல வகைப்படும்

*சக்கரத்துள் தடுமாறுதல் தானே*
*சக்கர பெந்தம்எனச் சாற்றினரே* (*மாறனலங்காரம்*, 281)

*அதுவே*
*நால்இரு மூன்றுஇரு நால்என நாட்டும்*
*சார்பினில் ஆர்புனை தன்மைய ஆகும்* (*மாறனலங்காரம்*, 282)

*நால் ஆறு எட்டுஆரம் சக்கரம்* (*சுவாமிநாதம்*, 197)

[வீரசோழியம், 179 உரை; தண்டியலங்காரம், 98, இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281 ]

***நான்காரைச் சக்கரம்***

சக்கரம் ஒன்றில் நான்கு ஆரக்கால்களை அமைத்து எழுத்துகளை அதில் முறையே பொருத்துவது நான்காரைச் சக்கரமாகும் இது மூன்று வகையில் அமையும்

**முதல் வகை**

சக்கரத்தின் குடப் பகுதியில் ஓர் எழுத்து நிற்க ஆரம், பரிதியில் மற்ற எழுத்துகள் நிற்குமாறு பாடுவது

***சான்றுப் பாடல்***

*வான மாதிய வானவா*
*வான வாமனு வானவா*
*வான வாமன மானவா*
*வான மானிற மானவா* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 782)

*தாதா னாதா ராமச் சந்திர நாமா நீவேதா*
*தாவே நீமா நாமக ளுறுமனை பாரே யோதாதா*
*தாதா யோரே பாவலர் நாவினி லேபா ரேநீதா*
*தாநீ ரேபா லேமனங் கொடைகா ராதா னாதாத*
(*தி.நா.ராமச்சந்திரன்: சித்திரகவி மாலை*, ப. 20)





**வாசிக்கும் முறை**

குடப்பகுதியில் நிற்கும் எழுத்து நாலடிக்கும் முதலும் கடைசியுமாக வரும் நடுவட்டத்திலிருந்து கீழிறங்கி வலப்புறமாகச் சுற்றி நடுவட்டத்துக்கு வரவேண்டும்; வந்த வழியே திரும்பி மேலே சென்று வட்டத்தின் நடுவிற்கு வரவேண்டும் இவ்வாறே ஏனைய இரண்டடியையும் வாசிக்கச் செய்யுள் நிறைவடையும்.

குறிப்பு மேலே உள்ள இரு படங்களுக்கும் வாசிக்கும் முறை ஒன்றுதான்

**துருவம்**

முதல் பாடல்: 1/8/9/16/17/24/25/32 - வா, 2/31 - ன, 3/30 - மா, 6/11 - வா, 7/10 - ன, 14/19 - வா, 15/18 - ன, 22/27 - மா, 23/26 - ன.

செய்யுளில் அமையும் எழுத்துகள்: 32; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 17.

இரண்டாம் பாடல் 1/16/17/32/33/48/49/64 - தா, 2/63 - தா, 3/62 - னா, 4/61 - தா, 5/60 - ரா, 12/21 - நா, 13/20 - மா, 28/37 - பா, 44/53 - லே, 45/52 - பா, 46/51 - ரே, 47/50 - நீ

செய்யுளில் அமையும் எழுத்துகள் 64; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 41

**இரண்டாம் வகை**

வட்டத்தின் நடுவில் ஓர் எழுத்து நின்று அதைச்சுற்றி நான்கு எழுத்துகள் அமைய அதற்குமேல் அமையும் ஆரக்கால்களில் நந்நான்கு எழுத்துகள் நிற்பச் சுற்று வட்டையில் இருபத்தெட்டு எழுத்துகள் பொருந்துமாறு பாடப்படுவது



***சான்றுப் பாடல்***

*தேவாமோ கூரா திதமகிபா மாமோக*
*பூவாளி ஓஒ பொருதலைக்க - வோவாது*
*துங்கமுர சாயதே துன்பமெனும் பூமகட்கு*
*வெங்கனிலா வானேன் விது*
(**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல்,783)

குடப்பகுதியைச் சுற்றியுள்ள எழுத்துகளைச் சேர்க்கத் திருமலை எனும் பெயர் கிடைக்கும்

**துருவம்**

1/33 - தே, 13/47 - க, 26/27/54 - து, 14/40 - பூ, 7/20 - த

செய்யுளில் அமையும் எழுத்துகள் 55; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 49.



**மூன்றாம் வகை**

சக்கரத்தின் செங்குத்து ஆரத்தில் மேலிருந்து (வே) கீழாகப் படித்தபிறகு, படுக்கை ஆரத்தில் இடமிருந்து (சீ) வலமாக முடித்து மீண்டும் உச்சியிலிருந்து (வே) இடப்புறம் வட்டமாகப் படித்து ஆரம்பித்த எழுத்திலேயே முடித்தால் செய்யுள் நிறைவடையும்

***சான்றுப் பாடல்***

*வேலவா யோகா விசாகா குகமுருகா*
*சீலவா நாதாதி சாமியே - கோலமிகு*
*வேங்கடத்தன் சீமருகா வித்தகா யென்பாவே*
*வீங்குபுய மீதணிக வே*
(**கந்தன் சித்திரபந்தன மாலை, ப.** 10)

**துருவம்**

7/20 - சா, 1/27/55 - வே, 14/34 - சீ, 13/41 - கா, 26/48 - கு

செய்யுளில் அமையும் எழுத்துகள் 55, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 49.

***ஆறாரைச்சக்கரம்***

ஆறு ஆரங்களை உடைய சக்கரம் ஒன்றை வரைந்து அதன்குடம், பரிதி, ஆரங்கள் ஆகியவற்றில் உரியமுறையில் எழுத்துகளைப் பொருத்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்.

***சான்றுப் பாடல்***

1.*மாதவனே தென்னரங் கேசமான் மருளாகமிகு*
*போதனுமன்பிற் றொழுகேச வபுரை கூர்பவமே*
*வாதித மாகுதற் கிங்கேயெனா ருயிர்கா பொதுவே*
*வேதநமாநம போதநை வார்க்குள்ளமே தகவே*
(**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 784)



அமைப்பு

சக்கரத்தின் குடப்பகுதியில் ஓரெழுத்து நிற்க அதைச்சுற்றி ஆறு எழுத்துகளை அமைத்து, அதற்குமேல் அமையும் ஆரக்கால்கள் ஒவ்வொன்றிலும் ஏழு எழுத்துகளைப் பொருத்தி, வட்டையில் நாற்பத்திரண்டு எழுத்துகளை நிறுவினால் செய்யுள் முடிவடையும்

வாசிக்கும் முறை

வட்டையின் இடதுபுற ஆரத்தில் தொடங்கி நேரே சென்று வலதுபுற ஆரையில் முதலடியை முடித்து,[1] அடுத்த கீழாரையின் முனையில் தொடங்கி மேலேறி இரண்டாமடியை முடித்து, வலதுபக்கக் கீழாரையின் முனையில் தொடங்கி, நேராகச் சென்று இடதுபுற ஆரையின் மேல்பகுதியில் முடித்து, முடித்த எழுத்திலிருந்து நான்காமடியைத் தொடங்கி வட்டையின் இடதுபுறமாகச் சுற்றிவரச் செய்யுள் நிறைவடையும் ஒவ்வொரு ஆரையின் ஏழு எழுத்துகளிலும் உள்ள நடுவெழுத்துகளைக் கூட்டத் தென்குருகூர் எனும் பெயர் கிடைக்கும்

துருவம்

1/61 - மா, 10/29/48 - கே, 19/70 - கு, 20/64 - போ, 38/73 - மே, 39/67 - வா, 57/58/76 - வே.

செய்யுளில் அமையும் எழுத்துகள். 76; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 67.

*நிலைமண்டில ஆசிரியப்பா*

2. *மணிதரு பிறகணி கனகமிடு கையே*
*வாச வாழ்வே கரும்பு கொண்மத*
*னேமலி ஞாபக மிளிர்தா ளாண்மை*
*நாடு நம்பும் சுமுக மிவணின்*
*னிலவே மிகுபொன் னமுதிட லம்புவி*
*மகிழ்வோ டிசையே புகலக் கிளையும்*
*பெருக நாடகம் பேணிநீ மனைவி*
*புத்திர ரோடு புவமிசை வாழ்கவே*
(தி.க.சண்முகம்: *சித்திரகவி மாலை*, ப. 51)



வாசிக்கும் முறை

செய்யுளைச் சித்திரத்தில் குறிப்பிட்டுள்ள எண்முறைப்படி 1, 2, 3 எண்களிலிருந்து நேராக வாசித்து 1 - ஆம் எண்ணிலிருந்து சுற்றி வாசித்தால் நிறைவடையும் சக்கரத்தின் உட்பகுதியில் ஆரக்கால்களில் உள்ள 1, 2, 3, 4 எண்களின்படி முறையாகச் சுற்றி வாசித்தால் பின்வரும் குறள்வெண்பா கிடைக்கும்.

*தண்முக நம்பி தமிழ்நா டகமணி*
*சண்முக ஞானியே தான்*

துருவம்

1/64 - ம, 11/32/53 - த், 21/85 - யே, 22/71 - பெ, 42/92 - ணி, 43/78 - ம, 63/99 - மே .

செய்யுளில் அமையும் எழுத்துகள்: 111; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 103.

***எட்டாரைச் சக்கரம்***

எட்டு ஆரங்களை உடைய சக்கரம் ஒன்றில் அதன் குடம், ஆரம், பரிதி ஆகியவற்றில் உரியமுறையில் எழுத்துகள் பொருந்தும்படி இயற்றப்பெறும் செய்யுள்.

**சான்றுப் பாடல்**

*நிலைமண்டில ஆசிரியப்பா*

1. *தண்மதி நிகர்வ தயங்கிய வதனம்*
*பொன்னணி முலைநிட தப்புரை வரைநிகர்*
*மடிசேர் தருதா மதபத்தர்க் கெட்டா*
*மாறன் றுடரிமலை தன்மின் போன்றொளிர்*
*தண்ணென் பொற்சுனை மன்னிய மாம*
*ரம்மடவார் மையுண் டாட்டமர் கண்ணே*
(**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 785)



**வாசிக்கும் முறை**

வட்டையின் கிடைமட்ட இடதுபுற ஆரையில் முதலடியைத் தொடங்கி, வலதுபுற ஆரையில் முடித்து, அடுத்த இடதுபுற ஆரையில் இரண்டாமடியைத் தொடங்கி வலதுபுற ஆரையில் முடித்து, இவ்வாறே ஏனைய இரண்டடிகளைப் படித்து, ஐந்தாமடியை முதலடி தொடங்கிய எழுத்தில் தொடங்கி வட்டைவழியே இடம்சுற்றிப் படிக்கச் செய்யுள் நிறைவடையும் இதனுள் முதலடி தொடங்கிவந்த குறட்டெழுத்துகளை இடஞ்சுற்றிப் படிக்க **வடமலையப்பன்** என்னும் பெயர் கிடைக்கும்

**துருவம்**

1/69 - த, 9/26/43/52 - த, 17/85 - ம், 18/73 - பொ, 34/89 - ர், 35/77 - ர், 51/93 - டா, 52/82 - மா, 68/97 - ர்

செய்யுளில் அமையும் எழுத்துகள் 100, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 89.



நிலைமண்டில ஆசிரியப்பா

2. *அரவணி சங்கர னழறகணி லுதித்து*
*சரவணக் கேணி தனதிடத் தமர்ந்து*
*அரனிடத் தவளி னயிறன்னைப் பெற்று*
*அரக்ககுல சூர னழியப் படுத்தின*
*அறுமுக சரவண அப்பன் அடியிணை*
*துறுவுறு துணைநற் றுதிபபன துணிவே*
(**கந்தன் சித்திரபந்தன மாலை**, ப 25)

**வாசிக்கும் முறை**

வட்டையின் மேல்பகுதியில் உள்ள செங்குத்து ஆரையில் தொடங்கி நேரே கீழே வர ஓரடி முடியும் இவ்வாறே வட்டையில் இடப்புறமாக உள்ள அடுத்தடுத்த ஆரைகளைப் படிக்க 2, 3, 4 ஆம் அடிகள் நிறைவடையும் முதல் ஆரையில் தொடங்கி வட்டையில் இடஞ்சுற்றிப் படித்தால் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/69 - அ, 9/26/43/60 - ன, 17/85 - து, 18/73 - ச, 35/77 - அ, 37/89 - து, 51/93 - று, 52/81 - அ, 68/97 - ன

செய்யுளில் அமையும் எழுத்துகள் 100, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 89.

யாப்பருங்கல விருத்தி 96-ஆம் நூற்பாவில் சக்கரம் என கூறப்பட்டதினின்றும் பூமிச் சக்கரம் ஆகாயச் சக்கரம் பூமியாகாயச் சக்கரம், வட்டச் சக்கரம், புருடச் சக்கரம், சதுரச் சக்கரம், கூர்மச் சக்கரம், மந்தரச் சக்கரம், காடகச் சக்கரம், கலிபுருடச் சக்கரம், சலாபச் சக்கரம், சக்கரச் சக்கரம், அரவுச் சக்கரம் ஆகிய 13 சக்கரங்களை உரையாசிரியர் குறிப்பிடுகின்றார் இவற்றை புணர்ப்பாவை, போக்கியம், கிரணியம், வதுவிச்சை ஆகியவற்றில் கண்டுகொள்க எனக் கூறுவதால் இவை பற்றிய தெளிவு எற்படவில்லை

## சங்கு பந்தம்



சங்கு வடிவமைப்பில் அமைந்த சித்திரமொன்றில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

*சான்றுப் பாடல்*

*தேவற்குத் துன்பத்தைத் தீர்த்தசத்தி வேலவன்மீ*
*தேவைத்த பக்தி திகழ்ந்தோங்கப் - பாவொத்த*
*வித்தாரன் கல்யாண சுந்தரனா மேலோன்செய்*
*சித்திரப்பா மெத்ததிறத் தே* (கந்தன் சித்திரபந்தன மாலை சாற்றுகவி, ப XIV)

*நீடோங்கல் மீதிலெலா நினறருள்செய் எம்மானின்*
*பீடோங்கப் பைந்தமிழில் பண்ணிசைப்போ-னாடோறும்*
*சந்தக் கவிதை பொழிசாந்தத் தவமுனியாம்*
*சுந்தரத்தின் நாமம்சொல் நீ* (தோத்திர மஞ்சரி, ப. 58)

**வாசிக்கும் முறை**

சங்கின் நடுவில் தொடங்கி (நீ) வலமாகச் சுற்றி மேலேறி உச்சியில் இடமாகச் சுற்றி, கீழே இறங்கி, நுனி வரை வந்து மீண்டும் நடுவே மேல் ஏறிச்சென்று தொடங்கிய எழுத்தில் முடித்தால் வெண்பா முற்றுப்பெறும்

**முதல் பாடலுக்குத் துருவம்**

1/74 - தே, 5/73 - த், 18/71 - தி, 32/37 - க, 55/65 - ர.

செய்யுளில் அமையும் எழுத்துகள் 74; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 69.

**இரண்டாம் பாடலுக்குத் துருவம்**

1/75 - நீ, 5/74 - ல், 18/72 - ம், 33/38 - ப், 56/67 - த்

செய்யுளில் அமையும் எழுத்துகள் 75; சித்திரத்தில் அமையும் எழுத்துகள். 70.

## சடாக்கர பந்தம்



ஓம் சரவணபவ என்னும் வடிவில் அமைந்த சித்திரத்தில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

*சான்றுப் பாடல்*

*பூசமுர மேவகுண தீபநவ பூர்வ மொழி*
*நேசவள்ளிக் காப்புனத்தில் நின்றகுகா - பாசமொடு*
*காலதண்ட காலனொண்ட ஆலமுண்ட நீலகண்ட*
*பாலதண்ட பாணியென்னைப் பார்*
(கந்தன் சித்திரபந்தன மாலை, ப. 8)

*விசுவந் தீதமர வேசாரு மிறைவனும்*
*சசிமனும் போற்றும் தண்டபா ணியன்றான்*
*கொங்கவிர் சிரவையிற் கொண்ட கோயிற்*
*றன்கையிற் புதுக்கிய புகழோன்*
*வாழி வாழி ஊழி வாழியே*
(தோத்திர மஞ்சரி, ப 56)

**வாசிக்கும் முறை**

அறுகோணத்தின் வெளியே கீழ் இடப்புறம் தொடங்கி (பூ/வி) அறுகோணத்தின் உள்ளிலும் வெளியிலுமாக மாறிமாறிப் படித்து ஓங்காரத்தின் இடது முனையில் தொடர்ந்து வரிசையாக வாசித்தால் செய்யுள் முடிவடையும். அறுகோணத்திற்குள் முதல் பாடலில் சரவணபவ என்னும் மறையும், இரண்டாம் பாடலில் சுந்தரசாமி என்னும் (பாட்டுடைத் தலைவர்) பெயரும் இடம்பெற்றிருக்கும். பாடலில் (இச்சொற்கள்) இடம்பெறாது சித்திரத்தில் தொடர்ந்து அமைந்திருப்பது இச் சித்திரத்தின் சிறப்பாகும்.

**துருவம்**

முதல் பாடல் 49/54 - ட, 56/61 - ல

செய்யுளில் அமையும் எழுத்துகள் 72, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 70

இரண்டாம் பாடல் 49/54 - யி, 56/61 - ல

செய்யுளில் அமையும் எழுத்துகள் 72, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 70.

## சதுரங்கத் தாரணை

▶ தாரணை

## சதுரங்க பந்தம் (சதுரங்க பெந்தம்)

வரிசைக்கு எட்டு கட்டங்களாக எட்டுவரிசைகளுக்கு அறுபத்து நான்கு கட்டங்கள் அமைந்த சதுரங்கத்தில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

இச் சித்திரத்தில் புலவன் கருதிய பாட்டுடைத் தலைவன் பெயரோ, இறைவன் பெயரோ, புகழ்பெற்ற ஊரின்பெயரோ நீள்வரிசையிலோ, குறுக்கு வரிசையிலோ அமைவது சிறப்பு

*சதுரங்க அறையில் சதிர் பெற அமைப்பது*
*சதுரங்க பெந்தமென்று அறைதரும் தன்மைய*
(*மாறனலங்காரம்*: *உரைச்சூத்திரம்*. *ப*. 500)

*எழும்பரிக்கால் முதல்பேதஞ் சதுரங்கம்* (*சுவாமிநாதம்*, 197)

[*வீரசோழியம்*, 179 *உரை* ]

***சான்றுப் பாடல்***

*மாய வயனமையா வானரிதன் றோர்பரிமா*
*வாய முகஞ்சேர்மாத ராடல்சொல்வாய்-தூயதவத்*
*தாயரங்க னேமத் தகுவன்வத மாரிநய*
*மாய னரிமாத வன்*
(*திருவரங்கத் திருவாயிரம்*)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மா | 2 ய | 9 ன | 10 ரி | 25 மா | 26 த | 49 வ | 50 ன் |
| 4 ய | 3 வ | 8 வா | 11 த | 24 ர் | 27 ரா | 48 கு | 51 வ |
| 5 ன | 6 மை | 7 யா | 12 ன் | 23 சே | 28 ட | 47 த | 52 த |
| 16 ரி | 15 ப | 14 ர் | 3 றோ | 22 ஞ் | 29 ல் | 46 த் | 53 மா |
| 17 மா | 18 வா | 19 ய | 20 மு | 21 க | 30 சொ | 45 ம | 54 ரி |
| 36 த | 35 ய | 34 தூ | 33 ய் | 32 வா | 31 ல் | 44 னே | 55 ந |
| 37 வ | 38 த் | 39 தா | 40 ய | 41 ர | 42 ங் | 43 க | 56 ய |
| 64 ன் | 63 வ | 62 த | 61 மா | 60 ரி | 59 ன | 58 ய | 57 மா |

**வாசிக்கும் முறை**

சித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள எண் முறைப்படி வாசிக்கச் செய்யுள் பொருந்தியிருப்பதை அறியலாம் சித்திரத்தின் நான்கு பக்கங்களிலும் 'மாயனரிமாதவன்' எனும் பெயர் அமைந்திருக்கிறது

பாட்டுடைத் தலைவன் பெயர் போன்றவை அமையாது, வாசிக்கும் முறையிலும் வேறுபட்டிருக்கும் மற்றொரு சதுரங்கம் பின்வருமாறு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ழ் | வ | து | மா | ண | ப் | பெ |
| கி | ளா | யா | கே | ற் | ய | ரி | ளா |
| ர் | கோ | ர | ரு | ந் | தெ | ங் | க |
| ளா | ள் | வு | நா | னு | யெ | ளா | வா |
| ந் | த | ச | மா | தி | ய | ர் | கோ |
| வ | ண் | க | ர் | ல | ம | வி | ய் |
| ய | ம | கா | வே | ளா | ம | யி | லோ |
| மே | ர | த | ந் | சு | ஞ் | று | லே |

*வாளா ரநாதி மயிலேறுஞ் சுந்தர மேயமகா*
*வேளா மயிலோய விமலாகண் வந்த சமாதியர்கோ*
*வாளா யெனுநாவுள் ளார்கோ ரருந்தெங்க ளாரியற்கே*
*யாளாகி வாழ்வது மாணப் பெரிதெனு மாகமமே*
(*திருவலங்கற்றிரட்டு*, *ப* 111)

**வாசிக்கும் முறை**

சதுரத்தின் இடதுபுற மேல்முனையில் தொடங்கி குறுக்குவெட்டாக வலதுபுறக் கீழ்முனைவரை வாசித்து, அங்கிருந்து நேர்கோட்டில், இடதுபுறம் சென்று ஒரு கட்டம் மேலேறி வலம் நோக்கி வாசித்து இவ்வாறே இடம்வலம், வலம்இடம் என மாறிமாறி வாசித்தவாறே மேற்புற வலதுமுனைக்குச் சென்று அங்கிருந்து குறுக்குவெட்டில் இடதுபுறக் கீழ்ப்பகுதிக்கு வரச் செய்யுள் நிறைவடையும்

இச் சதுரங்கத்திற்கான துருவத்தை விருத்தமாக மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பாடியுள்ளார். விருத்தம் வருமாறு

*அறுபத்து நால்அறுபத் திரண்டுஐமபா ன்நாற்பான்நான்கு*
*அடுத்தமுப்பத் தாறுஇருபத் தாறுஇருபத் துஇரண்டு*
*பெறும்அகக ரங்கள்ஒன்று முதல்ஏழு வரைநிகர்ப்பப்*
*பின்னும்ஐம்பத்து ஏழுஐம்பான் மூன்றொடுநாற் பான்மூன்று*
*உறுமுப்பத் தைந்துஇருபத்து ஒன்பதுபன் னேழ்பதினைந்து*
*உளஎழுபத் துஇரண்டுமுத ல்எழுபத்துஎட்டு ஈறாம்*
*மறுவற்று வரப்பாடும் கவிதைசது ரங்கபந்தம்*
*வழுத்தியஅஃ துஎழுபத்துஎட்டு எழுத்தின்முடி குவதே* (தனிப்பாடல்)

**துருவம்**

1/64 - வா, 2/62 - ளா, 3/50 - ர, 4/44 - நா, 5/36 - தி, 6/26 - ம, 7/22 - யி, 15/78 - மே, 17/77 - ம, 29/76 - க, 35/75 - மா, 43/74 - னு, 53/73 - தெ, 57/72 - ரி

செய்யுளில் அமையும் எழுத்துகள். 78; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 64.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | யா | வீ | வீ | யா | வா | மா |
| வா | யா | வோ | வா | வா | வோ | யா | வா |
| யா | வோ | வா | மா | மா | வா | வோ | யா |
| வீ | வா | மா | மே | மே | மா | வா | வீ |
| வீ | வா | மா | மே | மே | மா | வா | வீ |
| யா | வோ | வா | மா | மா | வா | வோ | யா |
| வா | யா | வோ | வா | வா | வோ | யா | வா |
| மா | வா | யா | வீ | வீ | யா | வா | மா |

*மாவாயாவீ வீயாவாமா*
*வாயாவோவா வாவோயாவா*
*யாவோவாமா மாவாவோயா*
*வீவாமாமே மேமாவாவீ*

(*திரு அம்பர்ப்புராணம்*, ப. 230)

(இப்பாடல் சதுரங்கத்தின் முதல் நான்கு வரிசைக் கட்டங்களில் முறையே பொருந்த அடுத்த நான்கு வரிசைக் கட்டங்களில் இறுதி அடி முதலாகவும் முதலடி இறுதியாகவும் பொருந்தும். ஏனைய இரண்டு, மூன்றாம் அடிகளும் இவ்வாறே முறைமாறிப் பொருந்தும்)

**வாசிக்கும் முறை**

சதுரத்தின் இடது மேல்முனையில் தொடங்கி வலம் நோக்கிப் படித்து அங்கிருந்து ஓர் எழுத்து கீழறங்கி இடம் நோக்கிப் படிக்க வேண்டும் இவ்வாறே வலம்இடம், இடம்வலம் என மாறிமாறிப் படிக்கையில் செய்யுள் நிறைவடையும்.

செய்யுளின் ஒவ்வோர் அடியும் மாலைமாற்றாக அமைந்திருக்கின்றது சதுரங்கத்தின் நான்கு ஓரங்களிலும் செய்யுளின் முதலடி பொருந்தியுள்ளது.

***குதிரைப்பாய்த்துச் சதுரங்கம்***

சதுரங்க விளையாட்டுக் குதிரையின் ஓட்டத்தைப் போல ஒரு கட்டத்தில் ஓர் எழுத்தை எழுதி அடுத்த எழுத்தை மூன்று கட்டங்களை (ட வடிவில்) அடுத்து எழுதிச் சித்திரத்தை நிறைவு செய்வது எழுதிய கட்டத்திற்கு மீண்டும் செல்லாமல் நிறைவு செய்யப்பட வேண்டும்

பாட்டுடைத் தலைவன் பெயர் இடம்பெற்றும், இடம்பெறாமலும் இக்கவி வகை அமையும்

***சான்றுப் பாடல்***

1. *தேரினெந் நெஞ்சநீ திரித வென்கொலோ*
*நாரொடும் வியன்றமி ணயந்து தூவிய*
*காரெனும் பரிதிமால் கணங்கொள் பூவரா*
*ரீரடி யேழைசூட் டியையப் போற்றுவாம்*
(வல்லி *பரிணய நாடகம்*)

(இப்பாடல் பரிதிமாற் கலைஞரின் **சித்திரக் கவி விளக்கம்** என்னும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | 6 ஞ் | 51 டி | 8 நீ | 11 த | 60 போ | 57 யை | 54 சூ |
| 50 ர | 13 ன் | 2 ரி | 61 ற் | 52 யே | 55 ட் | 10 ரி | 59 ப் |
| 5 நெ | 64 ம | 7 ச | 12 லெ | 9 தி | 58 ய | 53 ழை | 56 டி |
| 14 கொ | 49 நீ | 62 று | 3 னெ | 16 நா | 47 வ | 36 ப | 31 ய |
| 63 வா | 4 ந் | 5 லோ | 48 ரா | 35 ம் | 30 வி | 17 ரெ | 46 பூ |
| 24 மி | 21 ய | 26 ய | 41 க | 44 கொ | 39 மா | 32 கா | 37 ரி |
| 27 ந் | 42 ண | 23 ற | 20 வி | 29 தூ | 34 னு | 45 ள் | 18 டு |
| 22 ன் | 25 ண | 28 து | 43 ங் | 40 ல் | 19 ம் | 38 தி | 33 ரெ |

இப்பாடலின் சித்திரத்தில் வலதுபக்க மேல் முனையிலிருந்து இடதுபக்கக் கீழ்முனைவரைப் படிக்க (குறுக்கு வாக்கில்) சூரிய நாராயணன் எனும் பெயர் கிடைக்கும்.

2. *அம்புயற்கு வெஞ்சிறையை யாற்றி யரற்குமுன்*
*னம்புகா துக்குரைசொன் னாயகா - உம்பர்கலி*
*போகுமா றழலைமாப் போக்கினா யெற்குனரு*
*ளாகுமா றென்றோ வறை (சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனிப்பாடல்)*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 6 கு | 51 னா | 8 ஞ் | 11 யை | 60 றெ | 57 ளா | 54 கூ |
| 50 கி | 13 ற் | 2 ம் | 61 ன் | 52 யெ | 55 ன | 10 றை | 59 மா |
| 5 ற் | 63 வ | 7 வெ | 12 யா | 9 சி | 58 கு | 53 ற் | 56 ரு |
| 14 றி | 49 க் | 62 றே | 3 பு | 16 ர | 47 ப் | 36 ப | 31 ளா |
| 64 றை | 4 ய | 15 ய | 48 போ | 35 ம் | 30 ன் | 17 ற் | 46 மா |
| 24 கா | 21 ன | 26 க் | 41 கு | 44 ழ | 39 லி | 32 ய | 37 ர் |
| 27 கு | 42 மா | 23 பு | 20 ன் | 29 சொ | 34 உ | 45 லை | 18 கு |
| 22 ம் | 25 து | 28 ரை | 43 றா | 40 போ | 19 மு | 38 கி | 33 கா |

## சதுரங்க பெந்தம்

▶ சதுரங்க பந்தம்

## சதுர்நாக பந்தம்

▶ நாகபந்தம் ▼

## சதுரச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## சப்தபங்கி

▶ திரிபங்கி ▼

## சருப்பதோபத்திரம்

ஒரு சதுரத்தில் பிரித்துக்கொள்ளப்பட்ட அறுபத்து நான்கு கட்டங்களில் உரியமுறையில் எழுத்துகளைப் பொருத்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்

இச் செய்யுளை இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக என எப்படிப் படித்தாலும் அடிமாறாது வரும் இதன் முன் இரண்டு அடிகள் ஒரு மாலைமாற்று ஆகவும் பின்னிரு அடிகள் பிறிதொரு மாலை மாற்று ஆகவும் அமையும்

*இருதிறத்து எழுதலும் எண்நான்கு எழுத்துடை*
*ஒருசெய்யுள் எண்எண் அரங்கினுள் ஒருங்குஅமைந்து*
*ஈர்இரு முகத்தினும் மாலை மாற்றாய்ச்*
*சார்தரும் மாறியும் சருப்பதோ பத்திரம்* (மாறனலங்காரம், 292)

*ஒருபதம்எட்டு எழுத்தாய்நான்கு அடிக்கவியை எட்டுஎட்டு*
*ஒருநிறையாய் மேல்கீழ்கீழ் மேல்எட்டுஎட்டு அறையின்*
*தரஎழுதி நான்முகமும் சொல்லினும்பாட்டு ஆதல்*
*சருப்பதோபத் திரம்:* (சுவாமிநாதம், 196)

[யாப்பருங்கலம், 96; தண்டியலங்காரம், 98; இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 81.]

***சான்றுப் பாடல்***

கலிவிருத்தம்

*தேமா பூமா மாபூ மாதே*
*மாதா காவா வாகா தாமா*
*பூகா வாலா லாவா காபூ*
*மாவா லாநீ நீலா வாமா* (*மாறனலங்காரம்:* மேற்கோள் பாடல், 798)

வஞ்சிவிருத்தம்

*தாதாமா வேவேமா தாதா*
*தாதாதா தாதாதா தாதா*
*மாதாசே யாயாசே தாமா*
*வேதாயா மீமீயா தாயே*
(*திருவலங்கற்றிரட்டு*, ப 399)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தா | தா | மா | வே | வே | மா | தா | தா |
| தா | தா | தா | தா | தா | தா | தா | தா |
| மா | தா | சே | யா | யா | சே | தா | மா |
| வே | தா | யா | மீ | மீ | யா | தா | யே |
| தா | தா | மா | வே | வே | மா | தா | தா |
| தா | தா | தா | தா | தா | தா | தா | தா |
| மா | தா | சே | யா | யா | சே | தா | மா |
| வே | தா | யா | மீ | மீ | யா | தா | யே |

### சலாபச் சக்கரம்

▶ சக்கரம் ▼

### சித்திரக்கா

▶ சித்திரப்பா

### சித்திரத் தாரணை

▶ தாரணை.

### சித்திரப்பா

செய்யுளின் சீர்களில் இடம்பெறும் எண்கள் நான்காக இருந்தால் அவை கூடின எல்லாம் பத்தாகவும், மூன்றாக இருந்தால் அவை கூடின எல்லாம் பதினைந்தாகவும் பிற எண்கள் வழுவாமலும் வைத்துப் பாடப்படும் பாடல்

இதனை இரண்டாகப் பிரித்து விளங்கிக் கொள்ளலாம்

1. செய்யுளின் சீர்களில் இடம்பெறும் எண்கள் ஒன்றிலிருந்து நான்கிற்குள்ளாக இருப்பின் அவற்றின் கூட்டுத்தொகை பத்தாக அமையும் அதேசமயம் நான்கிற்குள்ளாக இருக்கும் எண்கள் திரும்பத் திரும்ப வரும்

2 செய்யுளின் சீர்களில் இடம்பெறும் எண்கள் ஒன்றிலிருந்து ஒன்பதிற்குள்ளாக இருப்பின் அவற்றின் கூட்டுத்தொகை பதினைந்தாக அமையும். (தெளிவுக்கு வரைபடம் காண்க )

இங்கு சித்திரப்பா வியப்பு எனும் பொருளில் ஆளப்பட்டிருக்கிறது போலும் யாப்பருங்கலம் இதனைச் *சித்திரக்கா* என்று கூறுகிறது

[வீரசோழியம், 179; குவலயானந்தம், 281.]

நான்கு கூடியவெல்லாம் பத்தாவதற்கு எடுத்துக்காட்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 3 | 2 | 4 | - 10 |
| 2 | 4 | 1 | 3 | - 10 |
| 3 | 1 | 4 | 2 | - 10 |
| 4 | 2 | 3 | 1 | - 10 |
| 10 | 10 | 10 | 10 | |

'ஒருதிரட் பிண்டிப் பொன்னெயில் மூன்றின்
ஈரறம் பயந்த நான்முக அண்ணல்
மூவகை உலகிற்கும் ஒருபெருங் கடவுள்
நால்வகை யோனியுள் இருவினை கடிந்து
முந்நெறி பயந்த செந்நெறி ஒருவன்
நால்வகை அளவையும் இருவகைப் பண்பும்
ஒன்ற உரைத்த முக்குடைச் செல்வன்
ஈரடி பரவினர் என்ப
பேரா நானெறி பெறுகிற் போரே'
(*யாப்பருங்கல விருத்தி*: *மேற்கோள் பாடல்*)

மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாவதற்கு எடுத்துக்காட்டு

இருவர் எழுநாள் மாறமர்ந்தான் கோயில்
ஒருவனை எட்டா வுவந்தேன் - பொருவிலா
நந்தியான் முக்கண்ணான் நாற்கதி ஒன்பானோடு
ஐந்துகலை தந்தான் அறி (*வீரசோழியம்*. ப. 279)

| | | | |
|---|---|---|---|
| 2 | 7 | 6 | - 15 |
| 9 | 5 | 1 | - 15 |
| 4 | 3 | 8 | - 15 |
| 15 | 15 | 15 | |

இங்கு வடகிழக்குத் திசையில் தொடங்கி எட்டுத் திசையிலும் நிறுத்தி நடுவே 5 - ஐ நிறுத்த நிறைவடையும். இதை இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழாகக் கூட்டக் கூட்டல் எண் 15ஆக அமையும். ஒரு முறை வந்த எண் மறுமுறை வராது

## சிவலிங்க பந்தம்

இலிங்க வடிவில் சித்திரம் ஒன்றை வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

1. *கார்கொண்ட புண்ணியத்தால் காமதிப்பால் மங்களஞ்செய்*
*தார்மதியே றப்புனைந்த சாத்துகணயன் சீர்வஞ்சி*
*யன்னவனைப் பாகார்த்தா னாங்கருள்வான் மாவிடையோன்*
*தென்காசி யத்தனையே செப்பு* (தென்காசிச் சிவாலயத்தில் எழுதப்பட்டுள்ளது.)




**வாசிக்கும் முறை**

சிவலிங்கத்தின் அடிப்பகுதியில் இடப்புறம் தொடங்கிப் படித்து வலம்இடம், இடம்வலம் என மாறிமாறிப் படித்தவாறே மேலேறி அங்கிருந்து நேர்கோட்டில் கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**: 6/83 - பு; 16/82 - ப்; 24/81 - செ, 30/80 - யே; 34/79 - னை, 36/78 - த, 38/77 - த், 42/76 - ய, 48/75 - சி, 56/74 - கா, 66/73 - ன்

செய்யுளில் அமையும் எழுத்துகள் 83; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 72

நேரிசை ஆசிரியப்பா

2. *இயலதாற் சேயை யேத்திப் பலநூல்*
*புயலெனப் பொழிந்த போதச் சரபரை*
*மறவா மனத்தி ராமா னந்தர்*
*திருநெறி தழைக்கத் தினமுஞ் சிந்தித்*
*தேதர முதற்சொலுந் தீயமூ நச்சுச்*
*சோதனை யில்லாச் சுத்த னாகிப்*
*பரசிவை யுதவு பால னெனமிளிர்*
*சரவண பவனடித் தாமரை நாறுஞ்*
*சிரனா நின்ற ஞானி*
*சிரவைச் சுந்தர தேசிகர் வாழியே* (தோத்திர மஞ்சரி, பக் 94 - 95)




**வாசிக்கும் முறை**

சிவலிங்கத்தின் அடிப்பகுதியில் இடமிருந்து வலமாகத் தொடங்கி, அடுத்து வலமிருந்து இடமாகச் சென்று, இப்படியே மாறிமாறி உச்சிவரை போனபிறகு, அங்கிருந்து நடுவரியில் மேலிருந்து கீழாக இறங்குகையில் 'சிரவைச் சுந்தர தேசிகர் வாழியே' என்னும் ஈற்றடி கிட்டும்

**துருவம்**

8/142 - யே, 22/141 - ழி, 34/140 - வா, 44/139 - ர், 52/138 - க, 58/137 - சி, 62/136 - தே, 64/135 - ர, 66/134 - த, 70/133 - ந், 76/132 - சு, 84/131 - ச், 94/130 - வை, 106/129 - ர, 120/128 - சி

செய்யுளில் அமையும் எழுத்துகள். 142; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 127.

## சுழிகுளம்

குளத்தில் எறியப்படும் கல் சுழிசுழியாய் அலைகளைத் தோற்றுவிப்பதைப் போலச் சுழி அமைப்பில் வரையப்படும் சித்திரம் ஒன்றில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்தி இயற்றப்பெறும் செய்யுள்.

*தெழித்துஎழு நீர்குளத் தினுள்செறித் ததைக்கொடு*
*சுழித்துஅடங் குவபோன்று அடங்குதல் சுழிகுளம்* (*மாறனலங்காரம்*, 295)

*ஓர்பாட்டு எவ்வெட்டுஎழுத் தாய் நால்வரி இட்டு*
*ஒழுங்குகீழ்மேல் மேல்கீழ்புறம் புறம்பார்க்கி னும்பாட்டு*
*ஒத்தல் சுழி குளம்* (*சுவாமிநாதம்*, 197)

[தண்டியலங்காரம் 98; வீரசோழியம் 179; இலக்கண விளக்கம் 690; குவலயானந்தம் 281.]

*சான்றுப் பாடல்*

வஞ்சித்துறை

*மதிமதி மாமா வாவா*
*திதிதிதி சேயே யோவா*
*மதியமு மாசே யேமா*
*திதிமுரு காமா சேமா* (*பாம்பன் சுவாமிகள், சித்திரகவிகள், ப.* 30)

*மாதாதா தாதாதா வாவா*
*தாதாதா தாவாகா சாவா*
*தாதாபூ சாதேவா காதா*
*தாதாசா ராசீதே வாதா* (*சு. பொன்சுவாமி செட்டியார், சித்திரகவிகள்*)






(இரண்டாவது செய்யுளை நெடில் வருக்கத்திற்கும், ஒற்றில்லாச் செய்யுளுக்கும் உதாரணமாகக் கொள்ளலாம் )

**வாசிக்கும் முறை**

இடதுபுற முனையில் முதலெழுத்தைத் தொடங்கி, கீழிறங்கி, சுழியின்வழியே வலப்புறம் சென்று மேலேறி, இவ்வாறே சுழிவழியாக ஏனைய எழுத்துகளையும் படிக்கச் செய்யுள் நிறைவடையும்.

**துருவம்**

முதல்பாடல். 2/9 - தி, 3/17 - ம, 4/25 - தி, 5/32 - ள், 6/24 - மா, 7/16 - வா, 11/18 - வா, 14/23 - யே, 20/27 - மு, 21/30 - மா, 12/26 - தி, 13/31 - சே.

இரண்டாம் பாடல்: 2/9 - தா, 3/17 - தா, 4/25 - தா, 5/32 - தா, 6/24 - தா, 7/16 - தா, 11/18 - தா, 14/23 - கா, 20/27 - சா, 21/30 - தே, 12/26 - தா, 13/31 - வா

## செய்யுட் தாரணை

▶ தாரணை

## சொக்கட்டான் பந்தம்

சொக்கட்டான் கட்ட வடிவில் அமையும் சித்திரம் ஏழினை வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

*தாயனைய சேயனே தாகனக யேகனே*
*தாயநய ஞேயனே நேயரிய - லாயனே*
*ஈதாநா தாநிதானே சாலசல சீலனே*
*காதாதே தாசீதா கா* (*கந்தன் சித்திரபந்தன மாலை, ப* 16)




வாசிக்கும் முறை

வரையப்பட்டுள்ள ஏழு சொக்கட்டான்களில் முதலாவதில் செய்யுளைத் தொடங்கி நீள்வாக்கில் கீழிறங்கி ஈரெழுத்து மேலேறி இடம், வலம் வாசிக்க ஒரு கட்டம் நிறைவுபெறும் இவ்வாறே ஏழு சொக்கட்டான்களையும் வாசிக்கச் செய்யுள் நிறைவுபெறும்.

துருவம்

2/4/6 - ய, 9/11/13 - க, 16/18/20 - ய, 23/25/27 - ய, 30/32/34 - தா, 37/39/41 - ல, 44/46/48 - தா

செய்யுளில் அமையும் எழுத்துகள் 49, சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 35

**தசாங்கக் கூற்றிருக்கை**

▶ எழுகூற்றிருக்கை ▾

**தமருக பந்தம்**

தமருகம்(உடுக்கை) வடிவில் அமைந்த சித்திரம் ஒன்றில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்



***சான்றுப் பாடல்***

*வேலா வீயா வீராகோ*
*கோலா கோதே றாராமா*
*மாலா வேணை மாமாகா*
*காலா ளாதே காகாவே* (திருவலங்கற்றிரட்டு, ப 161)

வாசிக்கும் முறை

உடுக்கையின் இடப்புறத்தின் கீழ்ப்பகுதியில் தொடங்கி மேல் நோக்கி வாசித்து அங்கிருந்து குறுக்குவாரில் வலப்புறத்தின் கீழ்ப்பகுதிக்கு வந்து மேல்நோக்கி வாசித்து மேல்முனையிலிருந்து இடப்புறம் தொடங்கிய இடத்திற்கே வந்தால் செய்யுள் நிறைவடையும்.

துருவம்

1/28 - வே, 7/8 - கோ, 11/25 - தே, 14/15 - மா, 21/22 - கா.

செய்யுளில் அமையும் எழுத்துகள் 28; சித்திரத்தில் அமையும் எழுத்துகள்: 23.

**தாரணை**

யாப்பருங்கல விருத்தி நூற்பா (96) 'தாரணைப் பகுதியும்' என்றதனால் உரையாசிரியர் ஒன்பது தாரணைகளைக் குறிப்பிடுகின்றார்

ஒன்பது தாரணைகளாவன, நாம தாரணை, அக்கரத் தாரணை, செய்யுட் தாரணை, சதுரங்கத் தாரணை, சித்திரத் தாரணை, வயிரத் தாரணை, வாயுத் தாரணை, நிறைவு குறைவாகிய எண்பொருட் தாரணை, வத்துத் தாரணை என்பனவாகும்

இவற்றை உருவக்கர சங்கேதங்களால் இடம்பட அறிந்து தரித்து, அனுலோமமாகவும், பிரதிலோமமாகவும் பிறவாறாகவும் சொல்லுவது என்று கூறி அவையெல்லாம் தாரணை நூலில் கண்டுகொள்க என உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இவை பற்றிப் பிற்கால இலக்கணிகள் கூறாததாலும், இலக்கிய ஆட்சி கிடைக்காததாலும் தெளிவாக விளங்கவில்லை.

**திரிபங்கி**

ஒரு செய்யுளுக்குள் தனித்தனியே மூன்று செய்யுள்கள் அமைந்திருக்குமாறு இயற்றப்பெறும் பாடல். அதாவது ஒரு செய்யுளின் அடிகள் மூன்று தனித்தனிச் செய்யுள்களாகப் பிரியும் வகையில் அமைந்திருப்பது திரிபங்கி.

*நனியொரு பாவாய் நடந்தது தானே*
*தனிதனி மூன்றாஞ் சால்புறு பொருண்மையின்*
*பகுப்ப நிற்பதுதிரி பங்கியதாகும்* (மாறனலங்காரம், 296)

*ஒருகவிக்கு உட்கவி மூன்றொழு குவது*
*திரிபங்கி யென்மனார் தெளிந்திசி னோரே* (**முத்துவீரியம்**, 1150)

*. . . ஒரு கவிமூன்று கவியாய்ப்*
*போதல்திரி பங்கி* (**சுவாமிநாதம்**, 197)

[இலக்கண விளக்கம், 690 ]

***சான்றுப் பாடல்***

**கட்டளைக்கலித்துறை**

1. *ஆதரந் தீரன்னை போலினியாய் அம்பி காபதியே*
*மாதுபங் காவனனி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்*
*ஏதமுய்ந் தார்இன்னல் சூழ்வினை தீரெம் பிரான் இனியார்*
*ஓதுமொன் றேயுன்னு வாரமு தேயும்பர் நாயகனே* (**முத்துவீரியம்**, ப 511)

இச்செய்யுளுள் பின்வரும் மூன்று செய்யுள்கள் அமைந்துள்ளன

**வஞ்சித்துறை**

(அ) *ஆதரந்தீர்*
*மாதுபங்கா*
*ஏதமுய்ந்தார்*
*ஓதும் ஒன்றே*

(ஆ) *அன்னை போல் இனியாய்*
*வன்னிசேர் சடையாய்*
*இன்னல்சூழ் வினைதீர்*
*உன்னுவார் அமுதே*

(இ) *அம்பிகா பதியே*
*அம்புநீண் முடியாய்*
*எம்பிரான் இனியார்*
*உம்பர் நாயகனே*

**கட்டளைக் கலித்துறை**

2. *சங்கத் தமிழன் திசைபுகழ் சீராளன் தண்ணளிசேர்*
*மங்குற் கொடையான் வசைமொழி கூறாதான் வண்ணமதன்*
*பொங்குந் தனவான் அசைவிலா மாவீரன் புண்ணியவான்*
*தங்கக் குணவான் இசைபொழி பூமாரி சண்முகமே*
(**தி.க சண்முகம்: சித்திரகவி மாலை**, ப 86)

இச்செய்யுளில் பின்வரும் மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன

(அ) *சங்கத் தமிழன்*
*மங்குற் கொடையான்*
*பொங்குந் தனவான்*
*தங்கக் குணவான்*

(ஆ) *திசைபுகழ் சீராளன்*
*வசைமொழி கூறாதான்*
*அசைவிலா மாவீரன்*
*இசைபொழி பூமாரி*

(இ) *தண்ணளிசேர்*
*வண்ணமதன்*
*புண்ணியவான்*
*சண்முகமே*

*ஒரே செய்யுளில் மூன்று செய்யுள்கள் அமைந்திருப்பதைப் போன்று ஐந்து செய்யுள்கள் (பஞ்சபங்கி), ஏழு செய்யுள்கள் (சத்தபங்கி), ஒன்பது செய்யுள்கள் (நவபங்கி) அமைவனவும் உள்ளன*

***பஞ்சபங்கி***

ஒரு செய்யுளுள் தனித்தனியே ஐந்து செய்யுள்கள் யாப்பமைதி கெடாது அடங்கி இருக்குமாறு பாடப்படும் பாடல்.

*சான்றுப் பாடல்*

நேரிசையாசிரிப்பா

*திருமறை வீட்டில் செபதவம் செய்யவும்
செந்தமிழை மருவுநற் சங்கத்தில் ஆங்கிலம்
மன்அவை மாணபுற வேகரு முகில்எனப்
பொழிவான் கவிஞரைக் கண்ட வுடன்தரும்
கொடைகண்ட உலகு தாதா எனச்சாற்
றிடுமே; ஆங்கிலம் செந்தமிழ் ஆரியம்,
பன்மொழி பாங்குறக் கற்றவ னாம்பார்
திருநெய்த் தானத்தில் திகழும் மறையோன்
திருநட ராசப்பேர்ச் செம்மல் அரும்தவத்
தால்பூமி வந்த மணி;பூ சுரரும்
போற்றிடும் கைகா மணிகாரா வாங்காண்
மஞ்சணை யும்நெய்த் தானம் தஞ்சை-
தனிற்செல் வநகர் தஞ்சம்என வந்-
தவரை அஞ்சல் எனஆ தரிப்போன்,
அன்னவன் நாமம் அறைகுதும் கேண்மோ;
என்ராமச் சந்திரன் என்சித் திரகவி
மாலையைப் பெற்றே மனையொன் றளித்தான்,
காலையில் அவனைநான் காணச் சென்றால்
வறுமைநீங் கப்பொன் வாரி வழங்குவான்;
மறுமைஇம் மைப்பயன் கருதா வள்ளல்
பாரி போலவே பாரில்
சீரொடு வாழ்கெனச் செப்பிவாழ்த் துவனே!*

(தி.நா.ராமச்சந்திரன்: சித்திரகவி மாலை, ப. 46 - 47)

*கட்டளைக் கலித்துறை*

(அ) *திருமறை வீட்டில் செபதவம் செய்யவும் செந்தமிழை
மருவுநற் சங்கத்தில் ஆங்கிலம் மன்அவை மாண்புடனே
கருமுகில் என்னப் பொழிவான்; கவிஞரைக் கண்டவுடன்
தருங்கொடை கண்ட வுலகுதா தாஎனச் சாற்றிடுமே*

*குறள் வெண்பா*

(ஆ) *ஆங்கிலம் செந்தமிழ் ஆரியம் பன்மொழி
பாங்குறக் கற்றவனாம் பார்*

*நேரிசை வெண்பா*

(இ) *திருநெய்த்தா னத்தில் திகழும் மறையோன்
திருநட ராசப்பேர்ச் செம்மல் - அருந்தவத்தால்
பூமிதனில் வந்தமணி பூசுரரும் போற்றிடுங்கை
காமணி காராஆம் காண்*

*வஞ்சித்துறை*

(ஈ) *மஞ்சணையும் நெய்த்தானம்
தஞ்சைதனிற் செல்வநகர்
தஞ்சம்என வந்தவரை
அஞ்சல்என ஆதரிப்போன்*

*நேரிசையாசிரியப்பா*

(உ) *அன்னவன் நாமம் அறைகுதும்; கேண்மோ!
என்ராமச் சந்திரன் என்சித் திரகவி
மாலையைப் பெற்றே மனையொன் றளித்தான்;
காலையில் அவனைநான் காணச் சென்றால்
வறுமைநீங் கப்பொன் வாரி வழங்குவான்,
மறுமைஇம் மைப்பயன் கருதா வள்ளல்;
பாரி போலவே பாரில்
சீரொடு வாழ்கெனச் செப்பிவாழ்த் துவனே!*

*சத்தபங்கி*

ஒரு செய்யுளுள் யாப்பமைதி கெடாத ஏழு பாடல்கள் உள்ளடங்கி இருக்குமாறு பாடப்படும் பாடல்

*குறிப்பு* திரிபங்கி, பஞ்சபங்கி, நவபங்கி மூன்றிலும் முறையே (தனிப்பாடலைத் தவிர்த்து) மூன்று, ஐந்து, ஒன்பது தனித்தனிச் செய்யுள்கள் கிடைக்கின்றன ஆனால் சத்தபங்கியில் தனிப்பாடலையும் சேர்த்தால்தான் ஏழு பாடல் கிடைக்கின்றது

*சான்றுப் பாடல்*

முருகன் மீது சத்தபங்கி

(அ) *திமிரமறாத புலாதிகளேதரு தேடரிதாய் மாறுஞ்*
*செனனமகாமால் வசமேமதமுறு சிறுமையின மதியாலே*
*குமரசிகாமணி யேகனிவாயருள் கூடெனவே கூறுங்*
*குருபரகோலா கலனேவிதியொடு குறுகிய மிடிதீராய்*
*நமதுவிநாயக தேவசகோதர நாடொறுமே தேறும்*
*நவிமகள்சேர்வே டுவனே புதுமண நறுமலர் புனைமார்பா*
*அமரர்பிரானருள் குஞ்சரிதோள் புண ராடவனே மீறும்*
*அரகரவேலா யுதனேமுதுமறை யறுமுக முருகோனே* (தனிப்பாடல்)

*கட்டளைக் கலித்துறை*

(ஆ) *திமிர மறாத புலாதிக ளேதரு தேடரிதாய்*
*குமர சிகாமணி யேகனி வாயருள் கூடெனவே*
*நமது விநாயக தேவச கோதர நாடொறுமே*
*அமரர் பிரானருள் குஞ்சரி தோள்புணர் ஆடவனே*

*வெண்டளைக் கலிப்பா*

(இ) *தேடரிதாய் மாறுஞ் செனனமகா மால்வசமே*
*கூடெனவே கூறுங் குருபரகோ லாகலனே*
*நாடொறுமே தேறும் நவிமகள்சேர் வேடுவனே*
*ஆடவனே மீறும் அரகரவே லாயுதனே*

*கலிவிருத்தம்*

(ஈ) *மாறுஞ் செனன மகாமால் வசமே*
*கூறுங் குருபர கோலா கலனே*
*தேறும் நவிமகள் சேர்வே டுவனே*
*மீறும் அரகர வேலா யுதனே*

*வண்ண வஞ்சி விருத்தம்*

தனதன தனதன தனதானா

(உ) *மதமுற சிறுமையின் மதியாலே*
*விதியொடு குறுகிய மிடிதீராய்*
*புதுமண நறுமலர் புனைமார்பா*
*முதுமறை யறுமுக முருகோனே*

*வண்ண வஞ்சித்துறை*

தனதன தனதானா

(ஊ) *சிறுமையின் மதியாலே*
*குறுகிய மிடிதீராய்*
*நறுமலர் புனைமார்பா*
*அறுமுக முருகோனே*

*வெண்பா*

(எ) *தேடரிதாய் மாறுஞ் செனனமகா மால்வசமே*
*நாடொறுமே தேறு நவிமகள்சேர் - வேடுவனே*
*ஆடவனே மீறு மரகரவே லாயுதனே*
*கூடெனவே கூறுங் குரு*

*நவபங்கி*

ஒரு செய்யுளுள் தனித்தனியே ஒன்பது செய்யுள்கள் யாப்பமைதி கெடாது அடங்கி இருக்குமாறு பாடப்படும் பாடல்

*அரிமரு காகரு ணாலய னேதிட வாரணனே பேர்தன்*
*அரியிமை யோர் சூழ்புனிதா புலவட ரயிலமர் பொற்கரனே*
*கரிமுக னேயசகோ தரனே படிகா ரணனே நாதங்*
*கதியுற வேவா னவனே நலமிகு கயிலை யினற்குருவே*
*குரவலர் நீபம ணிப்புயனே வடி கூரமுதே யோதுங்*
*குருமணி சேர்மார் பினனே யுலகருள் குயிலுதவுத்தமனே*
*மரகத மாமயில் வாகனனே கொடி வாரணனே கோதின்*
*மதியக மேவாழ் குமரா குலவிய மயிலைம லைக்குகனே*

*வஞ்சி விருத்தம்*

(அ) *அரிமரு காகரு ணாலயனே*
*கரிமுகன் நேயச கோதரனே*
*குரவலர் நீபம ணிப்புயனே*
*மரகத மாமயில் வாகனனே*

*வண்ண வஞ்சி விருத்தம்*

**தனதன தனதன தத்ததனா**

(ஆ) *புலவட ரயிலமர் பொற்கரனே*
*நலமிகு கயிலையின் நற்குருவே*
*உலகருள் குயிலுத வுத்தமனே*
*குலவிய மயிலை மலைக்குகனே*

*கட்டளைக் கலித்துறை*

(இ) *அரிமரு காகரு ணாலய னேதிட வாரணனே*
*கரிமுக னேய சகோதர னேபடி காரணனே*
*குரவலர் நீப மணிப்புய னேவடி கூரமுதே*
*மரகதமா மயில் வாகன னேகொடி வாரணனே*

*வெண்டளைக் கலிப்பா*

(ஈ) *ஆரணனே போதன் அரிஇமையோர் சூழ்புனிதா*
*காரணனே நாதங் கதியுறவே வானவனே*
*கூரமுதே ஓதுங் குருமணிசேர் மார்பினனே*
*வாரணனே கோதின் மதியகமே வாழ்குமரா*

*சந்த விருத்தம்*

(உ) *போதன் அரி யிமையோர்சூழ் புனிதா புலவடரயிலமர் பொற்கரனே*
*நாதங்கதி யுறவே வானவனே நலமிகு கயிலையி னற்குருவே*
*ஓதுங் குருமணி சேர் மார்பினனே யுலகருள் குயிலுத வுத்தமனே*
*வாரணனே கோதின் மதியக மேவாழ்குமரா குலவிய மயிலை மலைக் குகனே*

*கலி விருத்தம்*

(ஊ) *போதன் அரியிமை யோர்சூழ் புனிதா*
*நாதங் கதியுற வேவா னவனே*
*ஓதுங் குருமணி சேர்மார் பினனே*
*கோதின் மதியக மேவாழ் குமரா*

*வண்ண வஞ்சித்துறை*

**தனதன தத்ததனா**

(எ) *அயிலமர் பொற்கரனே*
*கயிலையி னற்குருவே*
*குயிலுத வுத்தமனே*
*மயிலைமலைக் குகனே*

*வஞ்சித்துறை*

(ஏ) *திடவா ரணனே*
*படிகா ரணனே*
*வடிகூ ரமுதே*
*கொடிவா ரணனே*

*வெண்பா*

(ஐ) *ஆரணனே போதன் அரிஇமையோர் சூழ்புனிதர்*
*கூரமுதே ஓதுங் குருமணிசேர் - மார்பினனே*
*வாரணனே கோதின் மதியகமே வாழ்குமரா*
*காரணனே நாதங் கதி*

## திரிபாகி (திரிபதாதி)

மூன்று எழுத்துகள் கூட ஒரு மொழியாகி, அதில் முதலெழுத்தும் இறுதியெழுத்தும் சேர வேறொரு மொழியாகி, இடையெழுத்தும் கடையெழுத்தும் சேர மற்றொரு மொழியாகி வரும் வகையில் அமைக்கப்படும் செய்யுள் இதனை மாறனலங்காரம் *திரிபதாதி* எனவும் *முத்துவீரியம்* திரிபாகி எனவும் குறிப்பிடும்.

காமாரி எனும் சொல்லில் முதலெழுத்தும் கடையெழுத்தும் சேரக்
காரி (வள்ளல்) எனும் சொல் கிடைக்கிறது இடையெழுத்தும் கடையெழுத்தும் சேர
மாரி(மழை) எனும் சொல் கிடைக்கிறது.

*மூன்றெழுத்து ஒருமொழி முதல்ஈறு இடையீறு*
*ஆன்ற பொருள் பிறவாம் திரிபதாதி* (**மாறனலங்காரம்**, 299, உரை)

*மூன்றெழுத்து ஒருபெயர் முதலிடை முரிபகின்*
*முப்பெயர் எதிர்முளைப்பது திரிபாகி* (**முத்துவீரியம்**, 1151)

*.. மூன்று எழுத்து ஒருசொல் முதல்பின்*
*புகல்இடைபின் சேர்ந்து சொற்களாம் திரிபதாதி* (**சுவாமிநாதம்**, 198)

[யாப்பருங்கல விருத்தி, 96; தண்டியலங்காரம், 98 உரை; இலக்கண விளக்கம், 690 ]

***சான்றுப் பாடல்***

1. *முந்தமாயன் பதியாய் முற்றியபேர் மூன்றெழுத்தில்*
*வந்தமுதலீறு இசையாய் மற்றுஇடைஈறு - அந்தச்*
*சுதரிசனத்தான் துணைத்தாள் சூழ்சிலம்பு உளளீடாய்*
*வதரி வரிதரி ஆ மாம்* (**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 808)

இச் செய்யுளின் இறுதி அடியிலுள்ள வதரி என்பதின் முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்க்க வரி என்பது கிடைக்கும் இடையெழுத்து, இறுதி எழுத்தைச் சேர்க்கத் தரி என்பது கிடைக்கும்

வதரி - பத்ரிநாத்
வரி - வரிப்பாடல்
தரி - திருமாலோடு தொடர்புடையதொரு மலை

2. *முன்னொரு ஊரின் பேராம்;*
*முதலெழுத்து இல்லா விட்டால்*
*நன்னகர் மன்னர் பேராம்;*
*நடுவெழுத் தில்லா விட்டால்*
*கன்னமா மிருகத் தின்பேர்;*
*கடையெழுத்து இல்லாவிட்டால்*
*உன்னிய தேனின் பேராம்;*
*ஊரின்பேர் விளம்பு வீரே* (**தனிப்பாடல்**)

ஊரின் பெயர் - மதுரை

*இரண்டு மூன்றாம் எழுத்துகள் சேர்ந்தால் - துரை*
*முதல், மூன்றாம் எழுத்துகள் சேரின் - மரை (மான்)*
*முதல், இரண்டாம் எழுத்துகள் சேரின் - மது*

## திரிபதாதி

▶ திரிபாகி.

## திருக்கைப் பந்தம்

பெரிய வட்டத்தின் நடுவே கை வடிவிலான சித்திரம் வரைந்து வட்டம், கை இரண்டிலும் எழுத்துகள் பொருந்தும்படி பாடப்படும் செய்யுள்.

***சான்றுப் பாடல்***

*சண்முகம் திருவார் வாருதி மான*
*ஞாதி ஞான மாரி பாரி*
*காரி பாரிலே மாகை யீகை*
*மாலே போல வேதா வேலவா*
*நாடகச் சரப ரவியவிர் சீர்பேர்*
*பேசு தேசு கவிகள் வள்ள*
*லுளனிவ னிதிமதி மனைமக*
*விகமி சைமிக வாகவனி வரமே* (தி.க.சண்முகம்: சித்திரகவி மாலை, ப. 66)

**வாசிக்கும் முறை**

உள்ளங்கையின் அடிப்பகுதியில் தொடங்கி மேலேறிச் சுண்டுவிரலின் நுனிவரை சென்று அங்கிருந்து கீழிறங்கி மோதிர விரலில் ஏறி இறங்கி இவ்வாறே நடுவிரல், ஆட்காட்டி விரல், கட்டைவிரல் ஆகியவற்றிலும் ஏறி இறங்கி வட்டத்திற்கு வந்து மேலும் கீழுமாக மாறிமாறிச் சுற்றி வாசிக்கையில் நிறைவடையும்.



**துருவம்**

1/45 - ச, 6/12 - தி, 7/11 - ரு, 8/10 - வா, 13/19 - மா, 14/18 - ன, 15/17 - ஞா, 20/26 - ரி, 21/25 - பா, 22/24 - ரி, 27/33 - லே, 28/32 - மா, 29/31 - கை, 35/39 - ல, 36/38 - வே, 46/48 - ர, 49/51 - வி, 52/54 - ர், 55/57 - பே, 58/60 - சு, 61/63 - க, 64/66 - ள், 67/69 - ள, 70/72 - னி, 73/75 - தி, 76/78 - ம, 79/81 - க, 82/84 - மி, 85/87 - க, 88/90 - வ.

செய்யுளில் அமையும் எழுத்துகள்: 92; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 62.

## திருமால் ஒருபது கூற்றிருக்கை

▶ எழுகூற்றிருக்கை ▼

## திருவடிப் பந்தம்

பெரிய வட்டம் ஒன்றில் அமைந்த இரண்டு பாதங்களில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

*திருவடிச் சேவை தாபோ தந்தா*
*வேதாந்த மேதா மேதகுங் கொங்கு*
*நிலைகலை நிதிமலி மதிதா வழிகிளை*
*நீள வாருதி நீர்போற் பெருகிட*
*வேதா சபைசதா முதலித முறைமன*
*மறைமுக யோக முளவண வளமலி*
*சண்முக மீளி நீதிசீர் சீல*
*முலக மிகவே நாவே பேசு*

*பேர்தார் வாகை வாழ வழகா*
*குகாவேள் வேலா மேலா வணிவர*
*மார நிலைநிதி யாதி தாவே* (தி.க.சண்முகம்: சித்திரகவி மாலை, ப 66)

**வாசிக்கும் முறை**

உட்புறம் கீழே உள்ள வட்டத்திலிருந்து இடது பாதத்தில் இடப்புறமாக மேலேறி, சுண்டு விரலில் மேலேறிக் கீழிறங்கி அடுத்த விரலில் ஏறி இறங்கி, அடுத்தடுத்த விரல்களிலும் ஏறி இறங்கிக் கீழ் வட்டத்துக்கு வந்து, மறுபடி வலதுபாதத்தில் மேலேறி, பெருவிரலில் ஏறிஇறங்கிப் பின் ஒவ்வொரு விரலிலும் ஏறி இறங்கிக் கீழே உள்ள வட்டத்திற்கு வந்து வெளிவட்டத்தில் ஏறியும் இறங்கியும் வாசிக்கச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/45/89 - தி, 2/44 - ரு, 11/15 - ந், 12/14 - தா, 16/20 - த, 17/19 - மே, 21/25 - கு, 22/24 - ங், 26/30 - நி, 27/29 - லை, 31/35 - தி, 32/34 - ம, 46/88 - நீ, 55/59 - தா, 56/58 - ச, 60/64 - மு, 61/63 - த, 65/69 - ரை, 66/68 - ம, 70/74 - மு, 71/73 - க, 75/79 - ள, 76/78 - வ, 90/92 - சீ, 93/95 - ல, 96/98 - க, 99/101 - வே, 102/104 - பே, 105/107 - ர், 108/110 - வா, 111/113 - ழ, 114/116 - கா, 117/119 - வே, 120/122 - லா, 123/125 - வ, 126/128 - ர, 129/131 - நி, 132/134 - தி



செய்யுளில் அமையும் எழுத்துகள் 136,
சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 98.

## துவி வெண்பா

▶ இரட்டை வெண்பா

## தூசங்கொளல்

ஒருவர் ஒரு வெண்பாப்பாட, அந்த வெண்பாவின் இறுதி எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு மற்றொருவர் பாடும் வேறொரு வெண்பா

[யாப்பருங்கலம், 96; வீரசோழியம், 179, உரை ]

## தேர்க்கவி

▶ இரதபந்தம்

## தேர்கை

கூறிய ஒன்றினின்றும் நேரடியாகப் பொருள்கொள்ளாமல் பிறபொருள் தேர்ந்துகொள்ளும் வகையில் இயற்றப்படும் செய்யுள் வகைபோலும் இதனைக் "குறைத்தலைப் பிணங்கண்டு 'காவிப் பல்லான்' என்றான் என்பதும், 'குதிரை பட்ட நிலமிது' எனச் 'செத்தது பெட்டைக் குதிரை' என்றான் என்பதும் முதலாகவுடையன 'விரலும் கண்டகமும் கண்டறிந்தான்' என்பதும் பிறவும் அன்ன," என யாப்பருங்கலம், 96 உரை குறிப்பிடுகிறது

எனினும், இக்கவி வகை குறித்த தெளிவு ஏற்படவில்லை

## தேர்ப்பிணிப்பு

▶ இரதபந்தம்

## நடுவெழுத்தலங்காரம்

செய்யுளில் உள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்றெழுத்தை உடைய மற்றொரு பரியாயச் (synonym) சொல்லைக்கூறி அவற்றுள் நிற்கும் நடு எழுத்துகளைத் தொகுத்தெழுத வேறொரு சொல்லோ தொடரோ கிடைக்கும் வகையில் அமைத்து, ஏனைய சொற்களுக்கும் தக்க பொருள் வருமாறு இயற்றப் பெறும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

1. *திருமால்வா கனம்நாவாய் இராசி ஒன்று*
*சினைதெவிட்டார் மாதுலன்கோ கிலம்இவ் ஏழின்*
*உருவாம் ஏழ் எழுத்தின்நடு எனக்குச் செய்தான்*
*உகந்துபதி நான்கினையும் தானே கொண்டான்*
*ஒருபாகத்து இருத்தினான் கையில் ஏற்றான்*
*ஒருமதலை தனக்களித்தான் உண்டான் பூண்டான்*
*பரிவால்ஒண் கரத்துஅமைத்தான் உகந்தான் இந்தப்*
*பைம்பொழில்தில் லையுள்ஆடும் பரமன் தானே* (*தனிப்பாடல்*)

திருமால் வாகனம் - நாகாரி (கருடன், பாம்புக்குப்பகைவன்)

| | |
|---|---|
| நாவாய் | - கலம் |
| இராசி ஒன்று | - கன்னி |
| சினை | - கவுடு |
| தெவிட்டார் | - ஆரார் |
| மாதுலன் | - மாமன் |
| கோகிலம் | - பல்லி |

இச் சொற்களின் நடுவெழுத்துகளைச் சேர்க்கக் 'காலன் வராமல்' என்னும் தொடர் கிட்டுகிறது எனக்குக் காலன்வராமல் செய்தான் என்பது பொருள்

இந்த ஏழு சொற்களின் முதலிலும் முடிவிலும் உள்ள எழுத்துகளைச் சேர்த்தால் முறையே நாரி, கம், கனி, கடு, ஆர், மான், பலி என்னும் சொற்கள் கிட்டும்

நாரி - சிவபெருமான் பெண்ணை (உமையை) ஒரு பாகத்தில் இருத்தினான்; கம் - கபாலத்தைக் கையில் ஏற்றான்; கனி - விநாயகனுக்கு அளித்தான்; கடு - விடம் உண்டான்; ஆர் - மாலை அணிந்தான்; மான் - கரத்தில் ஏந்தினான்; பலி - உகந்தான் எனச் சொற்களைக் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்

2. *திருமகள்ஓர் திசைக்குஇறைவன் வன்மீன் சொல்லி*
*திகழ்அரசன் மாதிவற்றின் பிரதி நாம*
*மருவுநடு எழுத்துஆறும் சேர்த்துப் பார்த்து*
*மன்னுநின்பேர் வாசிமற்றப் பன்னி ரண்டில்*
*இருமையினும் பயன்நல்க விசாரி தேடு*
*இருபுயத்தில் சூடுதெய்வ மந்தி ரத்தை*
*அருமையுடன் புனையருந்து கவிஞர்க் கெல்லாம்*
*அன்னையென வரும்தென்னாட்டு அரசர் ஏறே*
(*புளியங்குடி முத்துவீரக்கவிராயர் தனிப்பாடல்*)

| | |
|---|---|
| திருமகள் | - கமலை |
| ஓர்திசைக்கு இறைவன் | - நிருதி (தென்மேற்குத் திசைக்குக் காவலன்) |
| வன்மீன் | - முதலை |
| சொல்லி | - செப்பி |
| திகழ் அரசன் | - பூபதி |
| மாது | - கன்னி |

இவற்றின் நடுவெழுத்து மருதப்பன்

நடுவெழுத்துகளை விடுத்து முதல், இறுதி எழுத்துகளைச் சேர்க்க முறையே கலை, நிதி, முலை, செபி, பூதி, கனி என்பன கிட்டுகின்றன

கலை - கல்வி கற்றால் இப்பிறவி மட்டுமல்லாது அடுத்த பிறவியிலும் பயனடையலாம்; நிதி - வாழ்வதற்குச் செல்வத்தைத் தேடு; முலை - இல்லற வாழ்வில் சிறந்துபடல்; செபி - தெய்வ மந்திரத்தை உருப்போடு; பூதி (விபூதி) - திருநீற்றை அருமையுடன் அணிந்துகொள்; கனி - கனியை உண்

**நவ தாரணை**

▶ தாரணை

**நவபங்கி**

▶ திரிபங்கி ▼

**நாக பந்தம்**

பாம்பின் (நாகத்தின்) படத்தை மரபின்படி வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வண்ணம் இயற்றப்பெறும் செய்யுள்

இந் நாகபந்தம் நான்கு வகையாக அமைகிறது.

அ ஏக நாக பந்தம் - ஒற்றைப் பாம்புப் பிணிப்பு
ஆ இரட்டை நாகபந்தம் - இரட்டைப் பாம்புப் பிணிப்பு
இ சதுர்நாகபந்தம் - நான்கு பாம்புப் பிணிப்பு
ஈ அட்ட நாகபந்தம் - எட்டுப் பாம்புப் பிணிப்பு

[தண்டியலங்காரம், 98; மாறனலங்காரம், 285; இலக்கண விளக்கம், 690, சுவாமிநாதம், 201.]

***அ. ஏக நாக பந்தம்***

ஒற்றை நாகச் சித்திரத்தில் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

*சண்முக நம்பி சங்கக் கலைக*
*ளோம்பு சதுர னுளமே பத்தி*
*நீதி சேர வளம்பல நீள*
*நாடகம் பலபல நீடு நாற்கவி*
*காத்து மாநீ டூழி வாழி*
*வாகா வோது கோநீ மாண்பே* (*தி.க சண்முகம்; சித்திரகவி மாலை, பக்.* 40 - 41)

**வாசிக்கும் முறை**

நாகத்தின் தலைப்பகுதியில் தொடங்கி வாசித்துக் கொண்டே வருகையில் வால் பகுதியில் செய்யுள் நிறைவடையும்



**துருவம்**

4/14 - க, 6/16 - ம், 8/18 - ச, 10/12 - க, 20/30 - ர, 22/32 - ள, 24/34 - ப, 26/28 - தி, 36/46 - நீ, 38/48 - நா, 40/50 - க, 42/44 - ப, 52/62 - கா, 54/64 - து, 56/66 - நீ, 58/60 - ழி

செய்யுளில் அமையும் எழுத்துகள் 69;
சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 51

***ஆ. இரட்டை நாகபந்தம்***

பின்னிப் பிணைந்திருக்கும் இரண்டு நாகங்களுக்கிடையே இரண்டு வெண்பாக்களை உரிய முறையில் பொருத்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

*வரியரவு இரண்டாய் வால்வயிறு இரண்டாய்த்*
*தெரிமூலை நான்காய்ச் சிறந்து மும்மூன்றுடன்*
*நிலைபெறும் ஒருபான் இருபான் நிறீஇத்*
*தலைஇரண்டு எழுத்தாய்ச் சார்தரச் சந்தியின்*
*கவினுறத்து எழுத்துக் கலந்துறுப்பு ஆக*
*நவிலிரு பாவே நாக பெந்தம் (மாறனலங்காரம், 285)*

*அரவுஇரண்டு கலந்து இனிசை நேரிசைவெண் பாவின்*
*ஆண்பெண்மேற் சொலு(ம்) நாகபெந்தம் (சுவாமிநாதம், 201)*

குறிப்பு சுவாமிநாதம் மட்டுமே இரட்டை நாகபந்தத்தில் இன்னிசை வெண்பா ஒன்றும் நேரிசை வெண்பா ஒன்றும் வரவேண்டும் எனக் கூறுகிறது இலக்கியங்களுள் இவ்வாறில்லாமல் பலவகைப் பாக்களும் விரவி வருகின்றன

***சான்றுப் பாடல்***

*பரவ சோகுதண் பாடல ராசியும்*
*விரவி யுங்கு மிடைகர வீரமுங்*
*குரவ மாமல கங்குளி ரத்தியு*
*முரம னைபட வோங்கு குணத்தவே*

*புனைவண் டாடு மருத மரவம்பூ*
*நனைவம் பேய்தொடை பொங்கரா னாடியே*
*நினைகண் ணோகண்டா னீதம தாகுவ*
*தனைவ ராத தரமொய்க றாதவே*
*(திரு அம்பர்ப்புராணம், ப 231)*

**வாசிக்கும் முறை**

முதல் செய்யுளை இடதுபுறம் தலையுள்ள நாகத்தில் தொடங்கி வாசித்துக் கொண்டே வர வால்பகுதியில் நிறைவுபெறும் இதேபோல் இரண்டாம் பாவை வலதுபுறம் தலையுள்ள நாகத்தில் தொடங்கி வாசிக்க வால்பகுதியில் நிறைவுபெறும்



**துருவம்**

முதல் பாடல். 5/37 - கு, 9/48 - ட, 13/18 - யு, 20/52 - கு.

செய்யுளில் அமையும் எழுத்துகள். 56; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 50.

இரண்டாம் பாடல் 5/37 - டா, 9/48 - த, 13/18 - ம், 20/52 - ய், 39/44 - த

செய்யுளில் அமையும் எழுத்துகள் 56; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 50.

முதல், இரண்டாம் பாடல்· 3/3 - வ, 7/33 - ண், 11/26 - ரா, 22/22 - டை, 24/50 - ர, 31/46 - வ, 35/35 - க, 55/55 - த

**மற்றொரு வகை**

சித்திரத்தின் வடிவ அடிப்படையில் வகைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இணைந்திருக்கும் இரண்டு பாம்புகளுக்கிடையே பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள் (இரு குறள் வெண்பா)



*செல்வச் சிரவைத் திருவருட் டேசிக*
*னல்லருட் பார்வையைநீ நாடு*
*சுந்தர சாமியைத் தெய்வக் குருவாக*
*வந்தனைநீ செய்வையேலுய் வை*

(*தோத்திர மஞ்சரி*, பக் 112 - 113)

**வாசிக்கும் முறை**

பின்னியிருக்கும் இரு பாம்புகளில் இடது பக்கம் இருக்கும் பாம்பின் தலையிலிருந்து வால்வரை படித்தால் முதற்குறளும், வலதுபக்கப் பாம்பில் இரண்டாவது குறளும் அடங்கி உள்ளன

**துருவம்** 8/8 - த், 16/16 - க, 24/24 - வை



மற்றொரு வகை

***சான்றுப் பாடல்***

வஞ்சித் துறை

*சேயா சேயாதே*
*தேயா சேயாசே*
*மாயா மாயாவா*
*வாயா மாயாமா*

*வாயா மாவாயா*
*மாயா சேமாசே*
*யோயா நேயாவோ*
*யாயே தேயாளே*

(*பாம்பன் சுவாமிகள்: சித்ரகவிகள், ப.* 49)

**வாசிக்கும் முறை**

இடதுபக்கப் பாம்பின் தலையில் தொடங்கி வால்வரை வாசிக்க முதல் பாடலும், வலதுபக்கப் பாம்பின் தலையில் தொடங்கி வால்வரை வாசித்துவர இரண்டாம் பாடலும் நிறைவுபெறும்

**துருவம்**

முதல், இரண்டாம் பாடல் 2/14 - யா, 4/16 - யா, 6/18 - தே, 8/8 - சே,

இரண்டு, முதல் பாடல் 2/14 - யா, 4/16 - வா, 6/18 - மா

இரண்டு பாடல்களும். 8/8 - சே, 10/10 - சே, 12/12 - யா

**இரட்டை நாகபந்தத்திற்கு மாம்பழக்கவிச்சிங்க நாவலர் இயற்றியுள்ள துருவக் குறிப்பு**

*எட்டினுக்கு ஆறாகும் எண்ணைந் தினுக்கே இயைந்த பதினாலதாகும்*
*ஈரெட் டினுக்குவரு பதினெட்டு நாலைந் தினுக்குநாற் பத்தாறுதான்*
*தொட்டஇரு பத்திரண்டு எண்மூன்று நாலேழ் துலங்கும்இரு பத்தாறதாம்*
*தோன்றும் எண்ணாறுக்கு முப்பதாம் பத்தைந்து தூயமுப் பத்திரண்டாம்*
*திட்டமுறு முப்பத்து நான்கினுக்கு ஐம்பத்து இரண்டாம் ஆறேழுடன்*
*செப்புநாற் பத்தினால், ஐம்பதிற்று எட்டுடன் சேர்வதோர் அறுபதாகும்*
*கட்டமில் லாமலறு பத்துமூன்று அக்கரங் களையுடைய வெண்பாஇது*
*கமழ்விசித்ர உபய நாகபந்தனமாம் கனிந்துருகு செஞ்சொல் மாதே*

இதற்கான பாடலும் சித்திரமும் கிடைக்கவில்லை

இரட்டை நாகபந்த சித்திரத்திற்கான அமைப்பொன்று சித்திர கவி விளக்கம் என்னும் நூலில் காணப்பெறுகிறது

*வாலுள் இருமூன்றும் தலையில் இரண்டுஎழுத்தும்*
*முலைகள் நான்கும் வயிறுஇரண்டும் ஐஐந்தாய்*
*நால்எட்டு நால்ஐந்து ஏழுஆகி நடைபெறுமே*
*சேல்இட்ட கண்அரவின் சீர்* (சித்திரகவி விளக்கம்)

27226
04/11/10

***சான்றுப் பாடல்***

*மாறன் சடகோபன் வணகுருகூர் வாழ்பொருநை*
*யாற னளிமேய வனனமே - யேறத்*
*தமனாமா மாசரதன் றாண்மொழிதற பாமன்*
*னெமர்யா யெமையா ளிறை*

*அறமு மறமமைந்த வன்பென் பதுவும்*
*பெறனன் னலமதுண்மை பேரா - துறுபாற்கோர்*
*மானமன மேநினைமான் மாமேகத் தந்தமே*
*யேன மெமையாளி யை* (*மாறனலங்காரம்*, 789, 790)

**வாசிக்கும் முறை**



இடதுபக்கப் பாம்பின் தலையில் தொடங்கி வால்வரை வாசிக்க முதல் பாடலும், வலதுபக்கப் பாம்பின் தலையில் தொடங்கி வால்வரை வாசித்துவர இரண்டாம் பாடலும் நிறைவுபெறும்

**துருவம்**

முதல்பாடல்

4/38 - ம, 8/50 - ந், 12/18 - பெ, 20/54 - ன, 40/46 - மே.

செய்யுளில் அமையும் எழுத்துகள்: 59; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 55.

இரண்டாம்பாடல்

4/38 - ச, 8/50 - ன், 12/18 - ரு, 20/54 - யா, 40/46 - த

செய்யுளில் அமையும் எழுத்துகள் 59; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 55.

இரண்டு பாடல்களும்

2/2 - ற, 6/34 - ம, 10/26 - வ, 22/22 - ன, 24/52 - ம, 26/10 - ண், 32/48 - பா, 34/6 - கோ, 36/36 - மா, 52/24 - மே, 56/56 - மை

***இ சதுர்நாக பந்தம்***

நான்கு பாம்புகள் தம்முள் இணைந்தவாறு உள்ள சித்திரம் வரைந்து அந்த நான்கு பாம்புகளிலும் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

*சண்முக மாலே தமிழறி தாதாவே*
*விண்புவி யோதுவான் மேகமே மேவிசை*
*மேனெறி யாலேநீ வாகு கவிதாரே*
மேவு புயாவாழ்க வே (*தி.க.சண்முகம்: சித்திரகவி மாலை, ப.* 45)

**வாசிக்கும் முறை**

ஒவ்வொரு பாம்பிலும் தனித்தனியே தலைமுதல் வால்வரை வாசிக்கச் செய்யுள் நிறைவுபெறும்

**துருவம்**

1,1→ 6/32 - லே, 22/22 - மே

1,2→ 2/2 - ண், 4/36 - க, 20/44 - வா, 28/40 - மே, 34/44 - வா, 36/4 - க, 40/28 - மே, 44/20 - வா

1,3→ 12/38 - தா, 16/42 - பு, 38/12 - தா, 42/16 - பு.

1,4→ 8/8 - மி, 10/30 - றி, 14/26 - வி, 16/42 - பு, 18/18 - யோ, 26/14 - வி, 30/10 - றி, 46/46 - க.

2,2→ 6/32 - லே, 22/22 - மே

2,3→ 8/8 - மி, 10/30 - றி, 14/20 - வி, 18/18 - யோ, 26/14 - வி, 30/10 - றி, 46/46 - க

2,4→ 12/38 - தா, 16/42 - பு, 38/12 - தா, 42/16 - பு

3,3→ 24/24 - மே

3,4→ 4/36 - க, 20/44 - வா, 28/40 - மே, 34/44 - வா, 36/4 - க, 40/28 -மே, 42/16 - பு

4,4→ 22/22 - மே, 32/6 - லே



மற்றொரு வகை

சித்திரத்தின் வடிவ அடிப்படையில் இவ்வகைப்பாடுகள் செய்யப்படுகின்றன

நேரிசை வெண்பா

*தூய தவனே துறவி யரமுத*
*மாய சரிதை யறைதிக - ழேய*
*குருவே அறமே புரியுமு ளத்து*
*திருவே அருளினே செய்*
(தோத்திர மஞ்சரி, ப. 62)



**வாசிக்கும் முறை**

படத்தில் நான்கு பாம்புகள் பின்னிப் பிணைந்துள்ளன. எந்தப் பாம்பின் தலையிலிருந்து வால்வரை நெளித்துப்படித்தாலும் இந்த வெண்பா வரும்

1,2→ 3/3 - த, 7/28 - ற, 11/33 - மு, 20/37 - தி, 24/24 - கு, 28/7 - ற, 37/20 - தி, 41/41 - ரு

1,3→ 16/31 - ரி, 31/16 - ரி

1,4→ 5/43 - னே, 7/28 - ற, 9/18 -ய, 13/13 - மா, 18/9 - ய, 20/37 - தி, 22/22 - ழே, 24/24 - கு, 26/39 - வே, 35/35 - த, 39/26 - வே

2,3→ 5/43 - னே, 9/18 - ய, 13/13 - மா, 18/9 - ய, 22/22 - ழே, 26/39 -வே, 35/35 - த, 39/26 - வே, 43/5 இ- னே

2,4→ 16/31 - ரி, 30/17 - பு

3,4→ 11/33 - மு, 16/31 - ரி, 28/7 - ற, 33/11 - மு, 37/20 - தி, 41/41 - கு

மற்றொரு வகை

*தேவனே சேந்தா திருமுருகா தாட்சேர்பு*
*மேவடியேன் நோவதா மாதாவே - நோவையே*
*தீராயோ ராதியே தேசேறு சேயையே*
*ஓராயோ நீயே யுரை* (சிவதாசன், **குறுக்குத்துறைக் கலம்பகம்**, 92)

**வாசிக்கும் முறை**

சித்திரத்தில் நான்கு பாம்புகள் தம்முள் பின்னிப் பிணைந்துள்ளன எந்தப் பாம்பின் தலையிலிருந்து வால்வரை நெளித்துப் படித்தாலும் இந்த வெண்பா கிட்டும்

**துருவம்**



1,1→ -----
1,2→ 2/2 - வ, 16/16 - பு
1,3→ 4/38 - சே, 6/26 - தா,
10/8 - ரு, 24/12 - தா, 28/22 - நோ,
30/42 - யே, 34/34 - ரா, 36/20 - யே,
40/14 -சே
1,4→ 8/8 - ரு, 12/26 - தா,
14/38 - சே, 20/42 - யே, 22/22-நோ,
26/12 - தா, 38/14 - சே,42/20 - யே,
44/44 - ரா, 48/48 - யு
2,2→ ------
2,3→ 4/40 - சே, 6/24 - தா,
10/10-ரு, 24/6 - தா, 28/28 - நோ,
30/36 - யே, 34/34 - ரா,
36/30 - யே, 40/4 - சே
2,4→ 8/10 - ரு, 12/24 - தா,
14/40 - சே, 20/36 - யே,
22/28 - நோ, 26/6 - தா, 34/4 - சே,
42/30 - யே
3,3→ 44/34 - ரா
3,4→ 2/2 - வா, 16/16 - பு

***ஈ. அட்ட நாக பந்தம்***

எட்டு பாம்புகள் தம்முள் இணைந்தவாறு உள்ள சித்திரம் ஒன்றை வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்

*. . . மறை தலைவால்*
*இருவயிறு நால்மூலை நாள் இசைவும் ஐந்தைந்து*
*இடைநான்குஎவ் வெட்டாய்த் தொண் ணூற்றிரண்டன் பான்ஏழ்*
*ஒருகவிக்காய்; நூற்றுப்பன் னான்கு எழுத்துத் தலைவால்*
*உற்றநாலிசை வில்ஒவ் வொன்றிடை நான்கு ஈரெட்டாய்*
*மருவுசந்தி யிரட்டுமற்ற சந்திஅட்ட நாகம்*
*வகுப்பதும்வால் கறைபதினொன்று இடுவதுஞ்சில் விடத்தே* (**சுவாமிநாதம்**, 201)

அட்ட நாகபந்தம் இரு வகையில் அமைகிறது

1 ஒரே செய்யுள் எட்டுப் பாம்புகளுக்கும் தலைமுதல் வால்வரை வாசிக்கப் பொருந்துவது
2. எட்டுப் பாம்புகளுக்கும் தனித்தனியே எட்டுச் செய்யுள்கள் பொருந்துவது

***1. ஒரே பாடல் அமையும் வகை***

***சான்றுப் பாடல்***

இன்னிசை வெண்பா

1. *ஆரார் சடைய னனற்க ணுறுசேயை*
*மாறா துறுவான மாமலை யாண்டியை*
*நாடிநினை யாமோச நாசரை யம்மசனி*
*கூடி யிடுமே குறை* (சிவதாசன், **குறுக்குத்துறைக் கலம்பகம்**: 27)



**துருவம்**

1,2→ 2/2 - ரா
1,3→ 4/34 - ச, 12/18 - வா, 40/22 - ம, 44/26 - டி
1,4→ 16/16 - றா, 24/32 - யா, 28/28 - நா, 32/24 - யா
1,6→ 8/20 - ன, 14/14 - யை, 20/8 - ன, 30/42 - நி, 36/36 - ச, 42/30 - நி
1,7→ 18/12 - று, 22/40 - ம, 26/44 - டி, 38/6 - ச
1,8→ 6/38 - ய, 10/10 - க, 38/6 - ய, 46/46 - டு, 48/48 - கு
2,3→ 6/38 - ய, 10/10 - க, 38/6 - ய, 46/46 - டு, 48/48 - கு.
2,4→ 18/12 - று, 22/40 - ம, 24/32 - யா, 26/44 - டி, 34/4 - ச
2,5→ 8/20 - ன, 14/14 - யை, 20/8 - ன, 30/42 - நி, 36/36 - ச, 42/30 - நி
2,7→ 16/16 - றா, 24/32 - யா, 28/28 - நா, 32/24 - யா
2,8→ 4/34 - ச, 12/18 - வா, 40/22 - ம, 44/26 - டி
3,4→ 2/2 - ரா
3,5→ 4/34 - ச, 12/18 - வா, 40/22 - ம, 44/26 - டி
3,6→ 16/16 - றா, 24/32 - யா, 28/28 - நா, 32/24 - யா
3,8→ 8/20 - ன, 14/14 - யை, 20/8 - ன, 30/42 - நி, 36/36 - ச, 42/30 - நி
4,5→ 6/38 - ய, 10/10 - க, 38/6 - ய, 46/46 - டு, 48/48 - கு
4,6→ 4/34 - ச, 18/12 - று, 22/40 - ம, 26/44 - டி, 34/4 - ச
4,7→ 8/20 - ன, 14/14 - யை, 20/8 - ன, 30/42 - நி, 36/36 - ச, 42/30 - நி
5,6→ 2/2 - ரா.
5,7→ 4/34 - ச, 12/18 - று, 40/22 - ம, 44/26 - டி
5,8→ 16/16 - றா, 24/32 - யா, 28/28 - நா, 32/24 - யா
6,7→ 6/38 - ய, 10/10 - க, 38/6 - ய, 46/46 - டு, 48/48 - கு
6,8→ 18/12 - று, 22/40 - ம, 26/44 - டி, 34/4 - ச
7,8→ 2/2 - ரா

2. *சீதரா மாலே திருவனந்த மாபுர*
*மாதவா மாயா வரதாதா - மோதரா*
*மூலனே வாழுமோர் மான்முத்தி யேதாநீ*
*வாலரா மஞ்ச வர* (அபிநவ காளமேகம் தென்திருப்பேரை அநந்தகிருஷ்ண ஐயங்கார்)

நாக பந்தம்



**துருவம்**

1,2→ 2/2 - த
1,3→ 4/34 - மா, 12/18 - மா, 40/22 - தா, 44/26 - ரா.
1,4→ 16/16 - த, 24/32 - மோ, 28/28 - ல, 32/24 - மோ
1,6→ 8/20 - வ, 14/14 - ர, 20/8 - வ, 30/42 - வா, 36/36 - மு, 42/30 - வா.
1,7→ 18/12 - மா, 22/40 - தா, 26/44 - ரா
1,8→ 6/38 - தி, 10/10 - ந், 38/6 - தி, 46/46 - ஞ், 48/48 - வ
2,3→ 6/38 - தி, 10/10 - ந், 38/6 - தி, 46/46 - ஞ், 48/48 - வ
2,4→ 18/12 - மா, 22/40 - தா, 24/32 - மோ, 26/44 - ரா, 34/4 - மா
2,5→ 8/20 - வ, 14/14 - ர, 20/8 - வ, 30/42 - நி, 36/36 - ச, 42/30 - நி
2,7→ 16/16 - த, 24/32 - யா, 28/28 - நா, 32/24 - யா.
2,8→ 4/34 - மா, 12/18 - மா, 40/22 - தா, 44/26 -ரா
3,4→ 2/2 - ரா
3,5→ 4/34 - மா, 12/18 - மா, 40/22 - தா, 44/26 - ரா
3,6→ 16/16 - த, 24/32 - மா, 24/32 - யா, 28/28 - ல, 32/24 - யா
3,8→ 8/20 - வ, 14/14 - ர, 20/8 - வ, 30/42 - வா, 36/36 - மு, 42/30 -வா.
4,5→ 6/38 - தி, 10/10 - ந், 38/6 - தி, 46/46 - ஞ், 48/48 - வ.
4,6→ 4/34 - மா, 12/18 - மா, 40/22 - தா, 44/26 - ரா
4,7→ 8/20 - வ, 14/14 - ர, 20/8 - வ, 30/42 - வா, 36/36 - மு, 42/30 -வா
5,6→ 2/2 - ரா
5,7→ 4/34 - மா, 12/18 - மா, 40/22 - தா, 44/26 - ரா.
6,7→ 6/38 - தி, 10/10 - ந், 38/6 - தி, 46/46 - ஞ், 48/48 - வ
6,8→ 18/12 - மா, 22/40 - தா, 26/44 - ரா, 34/4 - மா
7,8→ 2/2 - ரா.

***2. எட்டுப் பாம்புகளுக்கும் தனித்தனிப்பாடல்கள் அமையும் வகை***

*மாரா சவிலீலை மன்னோடக் கோதேவா*
*வாராய்கோ வுன்பாத மாகோர - மாராபா*
*தூபாலா கோலவிசீ தூபாலை போதமே*
*பாபாமா நாதவதி பா*

*சீரா புவிமேலை தேன்பாட பூகோல*
*வாராரா மாகோனின் பாதாமே - கோராமா*
*பூபாதா பாங்கோ புவிமாதா மாலைபத*
*கோபாலா மாந்தரதி கோ*

*பாலா ரவிவேலை பன்மாட மேகோலி*
*வாலாராக் கோபன் மதலாகோன் - மாலாபா*
*தூபாத கோசவிபூ தூமாலை நாதமே*
*பாபாமா போதபதி யே*

*பாலா குவிசோலை பன்னட னாகோபி*
*வாலாரா மேகோலன் மாதற்கோர் - மாலேபா*
*மீபாயா கோதை விதுதூ முலைமாத*
*ரேபார்மா வீதனிதி யே*

*சேயா யவிமாலை சென்றாட வேகோபி*
*வாயாரா சூகோவென் றோதக்கோன் - மாயாபா*
*சீபாலா கோலேவி தீதூவே லைநீத*
*மோபாய்மா மோதவிதி யோ*

*மாயா கவிகாலை மன்றாட வேகோல*
*வாயாரா மாகோகான் மாதர்கோர் - மாயாபா*
*தூபாதா கோசவிபூ தூமாலை மாதவா*
*பாபாமா வேதனதி பா*

*மாமா தவிமாலை மன்சூட பூகோதை*
*வாமாரா பூகோகொன் மாதங்கோ - ராமா*
*விபாவுபா ரோகோமா வித்தூவா லைத்தன்*
*அபாவுமா வேதனிதி தா*

*ராமா கவிமாலை நான்சூட வாகோமா*
*வாமாராக் கோமான் வதனாகோ - தாமா*
*சுபாசபாக் கோசவிபூ தூமாலை நாதா*
*தபாதமா பாதகதி தா* (ப.வெ பழனிமலை நாயனார், ஸ்ரீமத் இராமாயணம், ப. 24)



துருவம்

1,2→ 2/2 - ரா
1,3→ 4/34 -, 12/18 - கோ , 40/22 - த, 44/26 - மா
1,4→ 16/16 - ரா, 24/32 -கோ, 28/28 - பா, 32/24 - கோ
1,6→ 8/20 - ன, 14/14 - வா, 20/8 - ன, 30/42 - பா, 36/36 - தூ, 42/30 - பா
1,7→ 18/12 - கோ, 22/40 - மா, 26/44 - மா
1,8→ 6/38 - லை, 10/10 - ட, 38/6 - லை, 46/46 - த, 48/48 - தி
2,3→ 16/16 - ரா, 24/32 -கோ, 28/28 - பா, 32/24 - கோ.
2,4→ 4/34 - வி, 12/18 - கோ, 40/22 - த, 44/26 - மா
2,5→ 8/20 - ன், 14/14 - வா, 20/8 - ன், 30/42 - பா, 36/36 - தூ, 42/30 - பா
2,7→ 16/16 - ரா, 24/32 -கோ, 28/28 - பா, 32/24 - கோ
2,8→ 4/34 - வி, 12/18 - கோ, 40/22 - த, 44/26 - மா
3,4→ 2/2 - லா
3,5→ 4/34 - வி, 12/18 - கோ, 40/22 - த, 44/26 - மா
3,6→ 16/16 - ரா, 24/32 -கோ, 28/28 - மா, 32/24 - கோ
3,8→ 8/20 - ன், 14/14 - வா, 20/8 - ன், 30/42 - பா, 36/36 - தூ, 42/30 - பா
4,5→ 6/38 - லை, 10/10 - ட, 38/6 - லை, 46/46 - த, 48/48 - தி
4,6→ 4/34 - வி, 12/18 - கோ, 22/40 - தா, 26/44 - மா
4,7→ 8/20 - ன, 14/14 - வா, 20/8 - ன், 30/42 - பா, 36/36 - தூ, 42/30 - பா
5,6→ 2/2 - யா
5,7→ 4/34 - வி, 12/18 - கோ, 22/40 - தா, 26/44 - மா
5,8→ 16/16 - ரா, 24/32 -கோ, 28/28 - பா, 32/24 - கோ
6,7→ 6/38 - லை, 10/10 - ட, 38/6 - லை, 46/46 - த, 48/48 - தி
6,8→ 18/12 - கோ, 22/40 - மா, 26/44 - மா, 34/4 - வி
7,8→ 2/2 - மா

இந்த எட்டு வெண்பாக்களில் எந்த வெண்பாவை எடுத்து எந்தப் பாம்பில் பொருத்திப் பார்த்தாலும் பொருந்தும்

**இந்த வகை அட்டநாக பந்தத்திற்கு மாம்பழக் கவிச்சிங்க நாவலர் கூறும் துருவம் வருமாறு**

*முப்பத்து நாலுக்கு நாலாகும்; ஆறுக்கு முப்பதிற் றெட்டாகும்;*
*மொழியும் எட்டுக்கு இருபதாம்; பன்னிரண்டுக்கு மூவாறு இலக்கம் எனலாம்,*
*ஒப்பற்ற இருபத்தி ரண்டுக்கு நாற்பதாம், ஓரும் இருபத்து நாலுக்கு*
*உயரும் முப்பத்திரண்டு; இருபதோடு ஆறினுக்கு உரிய நாற்பத்து நாலாம்;*
*தப்பற்றிடச் சிறந்திடு முப்பதுக்குத் தழைத்தநாற் பத்திரண்டாம்*
*சார்தர உரைத்திட்ட இவ்விலக்கங்களில் தவறாமல் அக்கரங்கள்*
*செப்பிநாற் பத்தொன்பதாம் எழுத்தினால் செய்த செய்யுள்எண் நாகபந்தம்*
*செங்களப குங்கும மணங்கமழ் தரும்படி திரண்டிலகு கொங்கை மாதே!*

4/34, 6/38, 8/20, 12/18, 22/40, 24/32, 26/44, 30/42 ஒன்றாக வரும்படி 49 எழுத்தினால் அமைக்கப்படுவது

ஐம்பத்தொரு எழுத்துகளால் அமையும் நாகபந்தத்திற்கான துருவம்.

*ஒருநான்குஅக் கரத்தொடுநாற் பத்தொன்றாம்,*
*ஆறுடன்நாற் பத்தைந்தாம்; எட்டுடன் ஐந்நான்காம்;*
*இருள்அறு பன்னிரண்டுடனே பதினெட் டாகும்;*
*இருபத்தி ரண்டுடனே நாற்பத் தேழாம்;*
*பரவும் இருபத்து நான்குடன் முப்பத்தொன்*
*பானாம்,முப் பான்மூன்றோடு ஐம்பத் தொன்றாம்;*
*அருமுப்பத் தேழுடனே நாற்பத் தொன்பானாம்;*
*அட்டநாக பந்தமாம் செய்யுட்கே.*

4/41, 6/45, 8/20, 12/18, 22/47, 24/39, 33/51, 37/49 ஒன்றாக வருமாறு 51 எழுத்துகளால் இயற்றப் படுவது

இந்தத் துருவத்திற்கான படவடிவும் இலக்கியமும் கிடைக்கவில்லை

## நாம தாரணை

▶ தாரணை

## நாமாந்திரப் பிரகேளிகை

நாமாந்திரம் - வேறுபெயர்; கேளிகை - விளையாட்டு

சொல்லக்கருதிய பொருளை மறைத்துக் கொண்டு வெளிப்படையில் வேறொன்றுபோற் காட்டி வித்துவான்களை மயக்கி விநோதம் புரிதற்கேற்ற சொற்களாற் பாடப்படும் செய்யுள் நாமாந்திரம் நாமாந்தரிதையாவது வெளிப்படையிலே நாமம் வேறோன்றாகக் காட்டிக் கருதிய பொருளை மறைத்திருப்பது (சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை)

***சான்றுப் பாடல்***

பாத்திரப்பெயர்கள்

1. *பன்னி ரண்டு கரகந் தனைஎட்டு*
*பானை யைத்துண் டதரக் குயவனை*
*முன்னி ரண்டு குடங்கையி லேந்தியை*
*முட்டி முட்டிமல் லார்மாவைச் சாடியைப்*
*பொன்இ ரண்டு பெறும்பெருஞ் செட்டியைப்*
*போற்று வீர்புல வீர்சக ரந்தனை*
*முன்னர் வைத்த கலசம்பத் தும்பெறீஇ*
*முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மையே*

(*சுன்னாகம் முத்துக்குமார கவிராயர், **தனிப்பாடல்***)

கரகம், பானை, குடம், முட்டி, சாடி, கலசம், சால் என்பன பாத்திரப் பெயர்கள் பன்னிரண்டு கரகம், எட்டுப்பானை, இரண்டு குடம், கலசம் பத்து எனத் தொகை பூண்டும் நிற்கின்றன செட்டி என்பது வந்த வரிசை நோக்கிச் சட்டி என ஒலிகொண்டு மயக்குகிறது குயவனை என்பது இப்பாத்திரங்களை வனைந்து கொடுக்கும் குலாலனை நினைப்பிக்கின்றது கரகத்தைப் பானையைச் சாடியைச் சட்டியைத் துதித்தால் கலசம்பத்தும் பெற்று வாழலாம் என இயையும்

***உரை.*** பன்னிரண்டு கர கந்தனை - பன்னிரு திருக்கரங்களை உடைய கந்தசாமியை; எள் துப்பு ஆனைஐ துண்டம் அதரம் குயம் அனை முன் இரண்டு குடங்கையில் ஏந்தியை - எட் பூவினையும் பவளத்தினையும் யானையையும் முறையே நிகர்த்த மூக்கு அதரம் முலை என்பனவற்றினை உடைய உலக மாதாவாகிய உமாதேவியாரால் முன்னரே உள்ளங்கை இரண்டினாலும் ஏந்தி வளர்த்தருளப்பட்டவரை; முட்டி முட்டி மல்லார் மாவைச் சாடியை - பல முறை எதிர்த்துப்போராடி வலி நிறைந்த மாமர வடிவாய்நின்ற சூரபன்மனைக் கொன்றருளினவரை; பொன் இரண்டு பெறும் பெரும் செட்டியை - தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் மகளிர் இருவரையும் மனைவியாகப் பெற்றுக்கொண்ட பெரியசெட்டியை; புலவீர் போற்றுவீர் - புலவீர்காள் போற்றக்கடவீர்; சகரந்தனை முன்னர் வைத்த கலசம் பத்தும் பெறீஇ - சகல சம்பத்துக்களையும் பெற்று; முதன்மைசால் பெரு வாழ்வுறல் மெய்ம்மையே - முதன்மை நிறைந்த பெருவாழ்வினை அடைதல் சத்தியம் என்க

கடைச்சரக்குப் பொருட்களின் பெயர்கள்

2. *பலசரக்குப் பையெடுத்தான் வேளிராய புரியாள்*
*பயந்தேனென் றாளரிசி வசம்போவென் றழுதாள்*
*மலர்சூடன் சாம்பிராணி யானேன்னென் றாணீ*
*வரக்காண மென்றழுதி துவரையெதிர் பார்த்தா*
*ளைகடலை வைகின்றா ளென்னாமா யக்கா*
*யான்பிழைப்பே னென்றாள்பேச் சுக்குமதி மதுரா*
*கலமுத்துச் சாமிசீ ரகமிளகன் பாக்கு*
*கடுகவா விதில்வெகு சகாயமுண்டு குணமே*

(*கொட்டாம்பட்டிக் கருப்பைய பாவலர், **தனிப்பாடல்***)

வேறு

*பல சர குப்பை எடுத்தான் வேள்; இராய புரியாள்*
*பயந்தேன் என்றாள், அரி சிவ சம்போ என்று அழுதாள்;*
*மலர்சூடன் சாம் பிராணி ஆனேன் என்றாள்;*
*வரக் காணம் என்று அழுது இதுவரை எதிர்பார்த்தாள்;*
*அலைகடலை வைகின்றாள்; "என்னமாய் அக்கா*
*யான் பிழைப்பேன்?" என்றாள் - பேச்சுக்கும் அதிமதுரா!*
*கல; முத்துச் சாமி! சீர் அகம் இளகு, அன்பு ஆக்கு,*
*கடுகவா, இதில்வெகு சகாயம் உண்டு; குணமே*

*உரை* வேள் பல சர குப்பை எடுத்தான் - மன்மதன் வலிய அம்புகளின் கூட்டத்தை (மலர்க்கணைகளைத் தலைவியின்மீது எய்வதற்காக) கைகளிற் கொண்டான்; இராயபுரியாள் பயந்தேன் என்றாள் - (அவ்வளவில்) இராயபுரி என்னும் ஊரைச் சேர்ந்தவளாகிய தலைவி, "நான் அஞ்சுகிறேன்" எனக் கூறினாள், அரி சிவ சம்போ என்று அழுதாள் - 'திருமாலே', 'சிவா', 'சம்புவே' என அரற்றினாள்; மலர் சூடன் சாம் பிராணி ஆனேன் என்றாள் - நான் பூக்களை அணிந்துகொள்ள மாட்டேன்; சாகும் நிலையில் உள்ள உயிரினமாக ஆகிவிட்டேன் என்று புலம்பினாள்; நீ வரக்காணம் என்று அழுது இதுவரை எதிர்பார்த்தாள் - நீ வரவில்லையே என வருந்தி இந்நேரம் மட்டும் உன்னை எதிர்நோக்கியிருந்தாள்; அலை கடலை வைகின்றாள் - (தன் ஓசையால் பிரிவுத்துயரை மிகுவிப்பதால்) அலைகளை உடைய சமுத்திரத்தைப் பழிக்கின்றாள்; அக்கா யான் என்னமாய்ப் பிழைப்பேன் என்றாள் - தோழியே! பிரிவுத் துயரத்தைத் தாங்க மாட்டாத நான் எப்படி உயிர்வாழ்வேன் என ஏங்குகின்றாள்; பேச்சுக்கும் அதிமதுரா - (எண்ணம், செயல்களால் மட்டும் அன்றிச்) சொற்களாலும் மிக இனியவனே!; முத்துச்சாமி - முத்துச்சாமி என்னும் இயற்பெயர் உடையவனே!; சீர் அகம் இளகு - (நல்லதையே எண்ணுகின்றதாகிய) சிறப்பு மிக்க உள்ளத்தில் இரக்கம் கொள்வாயாக; அன்பு ஆக்கு - (உன்னையே எண்ணி ஏங்கும் அத்தலைவியின் மீது) நேயம்கொள்வாயாக; கடுக வா - (அவள் இருக்கும் இடத்திற்கு) விரைவில் வருவாயாக; கல - அவளைச் சேர்வாயாக; இதில் வெகு சகாயம் உண்டு - இச்செயலால் (உனக்கு) பல நன்மைகள் விளையும்; குணமே - இக் காரியம் சரியானதே ஆகும் (தவறாகாது என்றபடி).

இச்செய்யுளில் பலசரக்குப் பை, தேன், அரிசி, வசம்பு, சூடன்(கற்பூரம்), சாம்பிராணி, காணம்(கொள்ளு), துவரை, கடலை, சுக்கு, அதிமதுரம், சீரகம், மிளகு, பாக்கு, கடுகு, காயம்(பெருங்காயம்) ஆகிய கடைச்சரக்குகளின் பெயர்கள் வேறு பொருளில் ஆளப்பெற்றிருப்பதால் இது நாமாந்தரப் பிரகேளிகை எனப்படும் *

தின்பண்டங்களின் பெயர்கள்

3. *தேங்குழலப் பந்தோசை யித்தியமா வுடலிற்*
*றிகழ்வடையப் பழம்பணியா ரங்களெலா நீத்தே*
*யோங்கியழு தலட்டுபல காரமுள வனைமார்க்*
*கொடுங்கிப்பா யசநிகர்த்த வுற்றார்க்கு மஞ்சி*
*வீங்கிபக்கோ டாமுலையிற் பூந்தினவு கொண்டுன்*
*விரகத்தி லதிரசமுற் றன்பிட்டு வந்தா*
*டாங்குதனின் கடன்செந்தில் வேலரசே யவணின்*
*றன்பாலா யடைதலெழில் தறுமுறுக்குத் தானே*

(கொட்டாம்பட்டிக் கருப்பைய பாவலர், தனிப்பாடல்)

வேறு

*தேன்குழல் அ பந்தோ சைத்தியம் ஆ உடலில்*
*திகழ்வு அடை அ பழம் பணி ஆரங்கள் எலாம் நீத்தே*
*ஓங்கி அழுது அலட்டு பல காரம் உள அனைமார்க்கு*
*ஒடுங்கி பாய்அசம் நிகர்த்த உற்றார்க்கும் அஞ்சி*
*வீங்கி இப கோடு ஆம் முலையில் பூம் தினவு கொண்டுஉன்*
*விரகத்தில் அதி ரசம் உற்று அன்பு இட்டு வந்தாள்;*
*தாங்குதல் நின் கடன்; செந்தில் வேல் அரசே! அவள்நின்*
*தன்பாலாய் அடைதல் எழில் தரும் முறுக்கு தான்ஏ*

*உரை:* செந்தில் வேல் அரசே - திருச்சீரலைவாய்ப்பதியில் கோவில் கொண்டுள்ள வேலாயுதப் பெருமானே!, தேன் குழல் - மணம்மிக்க கூந்தலை உடைய ஒரு பெண், அ பந்தோ - (வெளிப்படையாகத் தெரிகின்ற) அந்தப் பந்துகளைப் போன்ற நகில்களில் மட்டுமோ (இல்லை; பிற உறுப்புகளிலும்); சைத்தியம் ஆ உடலில் திகழ்வு அடை - குளிர்ச்சியான உடம்பின்கண் அழகுபெற்று விளங்குகின்றன ஆகிய; பழம்பணி ஆரங்கள் எல்லாம் நீத்து - பழைய அணிகலன்கள் முத்துமாலைகள் முதலிய எல்லாவற்றையும் களைந்துவிட்டு; ஓங்கி அழுது அலட்டு காரம் உள பல அனைமார்க்கு ஒடுங்கி - மேலும் மேலும் அழுது புலம்புகின்றவர்களும் தன்மேல் சினம் மிக்கவர்களும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் ஆகிய செவிலித்தாய், நற்றாய் ஆகியோரின் கண்களில் படாமல் பதுங்கி; பாய் அசம் நிகர்த்த உற்றார்க்கும் அஞ்சி - (கடாப்போரில்) கோபத்தோடு பாய்ந்து தாக்குகின்ற ஆட்டுக்கிடாய்களைப் போன்ற உறவினர்களுக்கும் பயந்துகொண்டு; வீங்கு இப கோடு ஆம் முலையில் - வளர்ந்துகொண்டே இருக்கின்றனவும் யானைத் தந்தங்களைப் போன்றனவும் ஆகிய மார்பகங்களில்; பூம் தினவு கொண்டு - இனிய நமைச்சலைப் பெற்று, (காதலனின் தோளைத் தழுவினால் மட்டுமே நீங்கும் தினவு); உன் விரகத்தில் அதி ரசம் உற்று - உன்மேற் கொண்ட காதலில் மிகுந்த சுவையைப் பெற்று, அன்பு இட்டு வந்தாள் - நேசம் கொண்டு வந்திருக்கிறாள்; தாங்குதல் நின் கடன் - அவளை ஏற்று ஆதரித்தல் உன்னுடைய கடமை ஆகும்; அவள் நின்தன் பாலாய் அடைதல் - அம்மங்கை உந்தனிடம் பொருந்தும் இச்செயல் எழில் தரும் முறுக்கே தான் - அழகிய கம்பீரமே ஆகும் (இதனால் இழிவு எதுவுமில்லை என்றவாறு).

இச்செய்யுளில் தேங்குழல், அப்பம், தோசை, வடை, அப்பழ(ள)ம், பணியாரங்கள், லட்டு, பலகாரம், பாயசம், பக்கோடா, பூந்தி, அதிரசம், பிட்டு, அடை, முறுக்கு என்னும் தின்பண்டங்களின் பெயர்களும் பழம், பால் என்னும் இரு சொற்களும் உணவுப் பொருட்களின் பெயராக அல்லாமல் வேறு வேறு பொருள்களில் ஆளப்பட்டமையின் நாமாந்திரப் பிரகேளிகையாகும்.

ஊர்ப்பெயர்கள்

4. *திருமயிலை வான்மியூர் முகிலைஙென சாயற்*
*றிகழ்கோதைத் திருவல்லிக் கேணிலைமை யுற்ற*
*வொருமுல்லை வாயினகை யாலங்காட் டுவிழி*
*யொற்றியூர் வதவசமோ வெனநொந்துன் மயலால்*
*வருமணிமே கலைகாஞ்சித் துகில்வளைகள் நழுவ*
*மலைத்தண்ணா மலைமுலையின் வார்கிழிய வந்தாள்,*
*தருமதுரை யேசெந்தில் வேலரசே யன்னா*
*டனைப்புலியூ ருக்கனுப்பிற் சார்பாக்க முனதே*
(*கொட்டம்பட்டிக் கருப்பையப்பாவலர், தனிப்பாடல்*)

வேறு

*திரு மயிலை வான் மி ஊர் முகிலை அன சாயல்*
*திகழ் கோதை திருவல் இக்கு ஏணில் ஐமை உற்ற*
*ஒரு முல்லை வாயின்நகை ஆலம் காட்டும் விழி*
*ஒற்றி ஊர்வது அவசமோ என நொந்து, உன் மயலால்*
*வரு மணி மேகலை காஞ்சித் துகில் வளைகள் நழுவ*
*மலைத்து, அண்ணா மலை முலையின் வார் கிழிய வந்தாள்;*
*தரும துரையே! செந்தில் வேல் அரசே! அன்னாள் -*
*தனைப்புலி, ஊருக்கு அனுப்பில் சார்பு ஆக்கம் உனதே*

*உரை:* தரும துரையே - அறநெறியினின்றும் பிறழாத தலைவனே!, செந்தில் வேல் அரசே - திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள வேலாயுதக் கடவுளே!; திரு மயிலை அன சாயல் - கண்டாரால் விரும்பப்படுகின்ற மயிற்பறவையைப் போன்ற மென்மைத் தோற்றத்தையும்; மி வான் ஊர்முகில் ஐ திகழ் கோதை - மேலே உள்ள ஆகாயத்தில் தவழ்கின்ற மேகத்தின் எழிலைப் பெற்று விளங்குகின்ற கூந்தலையும்; முல்லைவாயின் நகை - முல்லை அரும்புகளின் வரிசையைப் போன்ற புன்முறுவலையும்; ஆலம் காட்டும் விழி - (தன் கரு நிறத்தாலும், பொதுநோக்கால் மிகத் துன்புறுத்தும்திறத்தாலும்) நஞ்சினையொத்த கண்களை உடையவளும்; ஒரு திரு - இலக்குமியை யொத்தவளுமாகிய ஓர் அழகி; உன் மயலால் - நின்மீது கொண்ட பெருங்காதலால்; வல் இக்கு ஏணில் ஐமை உற்று - வலிமையை உடைய (மன்மதனின்) கரும்பு வில்லின் வளைவால் (அம்பு சொரிவதால்) தளர்ச்சியடைந்து; வரும் மணிமேகலை காஞ்சி

துகில் வளைகள் நழுவ - மிகுதியான இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மேகலை, காஞ்சி ஆகிய இடையணிகளும், புடைவையும், கைவளையல்களும் சோர, ஒற்றி ஊர்வது அவசமோ என நொந்து - உன்னை நெருங்கித் தழுவுவது தன் திறனுக்கு அப்பாற்பட்ட செயலோ என எண்ணி வருந்தி, அண்ணா மல் ஐ முலையின் வார் கிழிய - ஒன்றோடொன்று நெருங்கிப் பொருதுகின்ற அழகிய நகில்களின்மேல் கட்டப் பெற்றுள்ள கச்சு (தன் ஏக்கப் பெருமூச்சால்) கிழியவும், மலைத்து - என்ன செய்வது என அறியாதவளாகத் திகைத்து, வந்தாள் - உன்னிடம் வந்திருக்கிறாள்; அன்னாள்தனைப் புலி - அத்தகையவளாகிய மங்கையை அணைத்து (உன்னுடையவளாக ஆக்கிக்கொண்டு); ஊருக்கு அனுப்பில் - அவளுடைய சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தாயெனில், உனது சார்பு ஆக்கம் ஏ - (அவள்) உனக்குப் பொருத்தமான செல்வமாகவே விளங்குவாள்

இச்செய்யுளில் திருமயிலை, (திரு) வான்மியூர், திருவல்லிக்கேணி, (திரு)முல்லைவாயில் (திரு)ஆலங்காடு, (திரு)ஒற்றியூர், காஞ்சி, (திரு)அண்ணாமலை, மதுரை, புலியூர் (தில்லை), பாக்கம் ஆகிய தலப்பெயர்கள் தம் பொருளில் அல்லாமல் வேறு பொருளில் ஆளப்பட்டதால் வேறு பெயர் குறித்த சொல் விளையாட்டு (நாமாந்தரப் பிரகேளிகை) ஆயிற்று *

**ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்கள்**

*'முன்னீ வினைபருத் தித் துறை மேவிய மூளையர்தா*
*மன்னாரில் வாழ்விற் றனங் கிளப் பார்புல வஞ்சரைமெய்*
*துன்னாலை யிட்டு வறுத்தலை மேவிச் சுழிபுரம் போய்*
*பன்னா லையணி யத்வாம் புலத்திற் பழகுவரே*

இப்பாடலில் ஈவினை, பருத்தித்துறை, மூளாய், மன்னார், தனங்கிளப்பு, துன்னாலை, வறுத்தலை, சுழிபுரம், பன்னாலை, அத்துவாம்புலம் ஆகிய ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும் இடம்பெற்றுள்ளன. ஈவினை என்பது முன் என்ற அடைபெற்று முன்னீவினை ஆயது பருத்தித்துறை என்பது பருத்து இத்துறை எனப் பிரிந்து நின்றது மூளாய் என்பது மூளை எனத் திரிபுற்றது இவ்வூர்ப் பெயர்களில் உட்கரந்திருக்கும் தத்துவப் பொருண்மையை நோக்கின் பின்வருமாறு அமையும்.

முன்னீவினை பருத்து - முற்பிறவியிற் செய்த நல்வினை அதிகரித்து; இத்துறை மேவிய மூளையர் - இப்பூமியின்கண் பிறப்பெடுத்த மூளையுடைய மகான்கள்; மன்னார் இல்வாழ்வில் - இல்லற வாழ்க்கையில் நிலைபெற மாட்டார்கள்; தனங்கிளப்பார் - பொருளீட்டமாட்டார்கள், புலவஞ்சரை - ஐம்புலன்களாகிய வஞ்சகர்களை; மெய்துன் ஆலையிட்டு - ஞானமெனும் இயந்திரத்திலிட்டு வறுத்தலை மேவி - வறுத்தெடுத்து; சுழிபுரம் போய் - கோபத்திற்கிடமான இவ்வுடம்பு நீங்கப்பெற்று; பன் ஆலயம் நண்ணி - சொல்லப்படுகின்ற ஆத்மா சிவத்தில் ஒடுங்கப்பெற்று, அத்வாம்புலத்திற் பழகுவர் - இரண்டறக் கலத்தலாகிய அத்துவித வெளியை அடைவர்.

முற்பிறவியிற் செய்த புண்ணிய மேலீட்டை உடைய புத்திசாலிகள் இப்பிறவியிலே இல்லற வாழ்க்கையில் நிலைபெறாதவர்களாய்ப் புலன்களைக் கட்டுப்படுத்தி உடம்பை நீங்கிச் சிவத்துடன் அத்துவிதம் ஆவார்கள் என்பதே இப்பாடலின் தெளிபொருள்'

- கௌசல்யா சுப்பிரமணியன் (ப ஆ ), "மல்லை நமச்சியவாயப்புலவர் அவர்களின் ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம் அறிமுகவுரை", **கலாநிதி நா. சுப்பிரமணியனின் ஆய்வுகள் - பார்வைகள் - பதிவுகள்** (தொகுதி 2), சென்னை· சவுத் விஷன், 2005, பக் 107 - 108

## நாற்கூற்றிருக்கை

▶ எழு கூற்றிருக்கை ▼

## நான்காரைச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## நான்கெழுத்துப் பாட்டு

▶ எழுத்துப்பாட்டு ▼

## நிரோட்டகம் (நிரோட்டம்/நிரோட்டி/நிரோட்டியம்)

நிர் என்பது வடமொழியில் எதிர்மறை முன்னொட்டு; ஓட்டகம், ஓட்டம், ஓட்டி, ஓட்டியம் என்பன ஓஷ்டியக, ஓஷ்டிய என்னும் வடசொற்களின் திரிபுகள்.

இவற்றின் பொருள் இதழ் இயையப் பிறப்பவை என்பதாகும் எனவே, இதழ் இயையாது பிறப்பவை நிரோட்டம்/நிரோட்டி/நிரோட்டியம்

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து உயிரெழுத்துகளும் ப, ம, வ எனும் மூன்று மெய்யெழுத்துகளும் இல்லாமல் பாடப்படும் செய்யுள்

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து உயிரெழுத்துகளுடன் ப, ம, வ நீங்கிய பதினைந்து மெய்யெழுத்துகள் இணைந்து (5x15 = 75) உருவான எழுபத்தைந்து உயிர்மெய் எழுத்துகளும் ப, ம, வ என்ற மூன்று மெய்யெழுத்துகளும் இம்மூன்றால் உண்டான (3x12 = 36) முப்பத்தாறு மெய்யெழுத்துகளும் சேர்ந்து (5+75+3+36 = 119) மொத்தம் 119 எழுத்துகள் உதடுகளின் தொடர்பால் பிறப்பவை இந்த எழுத்துகளை முற்றிலும் ஒதுக்கிவிட்டு ஏனையவற்றை மட்டும் கொண்டு புனையப்படும் செய்யுள் நிரோட்டகம்/நிரோட்டம்/நிரோட்டி/நிரோட்டியம் எனப்படும் உதட்டின் முயற்சியால் பிறக்கும் எழுத்துகள் ஆளப்படாத செய்யுள் என்பது இச்சொல்லின் பொருளாகும்

*இதழ்குவிந்து இயையாது இயல்வது நிரோட்டியம்* (*மாறனலங்காரம்*, 274)

*இதழ்குவி யாஎழுத்து எடுத்துப் பாடுவது*
*அதுநிரோட் டகம்என்று அறையப் படுமே* (*முத்துவீரியம்*, 1147)

*பாதம் உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ விசை நூற்று*
*பத்தொன்பான் எழுத்தில் நிரோட்டகம் கரந்திசையே* (*சுவாமிநாதம்*, 198)

[யாப்பருங்கல விருத்தி, 96 உரை; தண்டியலங்காரம், 98 உரை, இலக்கண விளக்கம், 690 ]

***சான்றுப் பாடல்***

1. *எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே*
   *செய்தற் கரிய செயல்* (*குறள்*. 489)

2. *நாதன் அரங்கநகர் நாரா யணன்நறைசேர்*
   *சீதநளி னத்திற் சிறந்த - காதற்*
   *கனிநா னிலக்கிழத்தி கட்கினிய காந்தித்*
   *தனிநா யகன்தாள் சரண்* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல், 770)

3. *தீயநெறி இல்அடியார் சிந்தைச் செழுந்தடத்தில்*
   *ஆயநக நண்ணி அலர்ந்ததே - ஏயநறைக்*
   *கந்த நெகிழிதழ்க் கண்ணியான் அன்றளித்த*
   *கந்தன் எழிற்கஞ்சக் கால்* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர். தனிப்பாடல்*)

இச் சித்திர(க்)கவி வகை பெரும்பாலும் யமகம் என்னும் சொல்லணியோடும், சிறுபான்மை ஏகபாதம் என்னும் சொல்லணியோடும் இணைத்து அந்தாதியாகிய சிற்றிலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ளது. துறைமங்கலம் சிவப்பிரகாசரின் செந்தில் நிரோட்டக யமக அந்தாதியும், வண்ணச்சரபரின் ஏகத்தாள் இதழகலந்தாதியும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும்

நிரோட்டகம், ஏகபாதம் என்னும் வடமொழிப் பெயர்களில் முறையே ஓகாரமும், பகர மகரங்களாகிய ஓட்டக எழுத்துகளும் பயில்வதால் தண்டபாணி சுவாமிகள் அச்சொற்களை *இதழகல், ஏகத்தாள்* என நிரோட்டகமாகவே தமிழ்ப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

தலையணிச்சீர் இதழகல் - நிரோட்டக யமகம்

*நத்தன னத்த னறியா நிலைதிக ணாதர்தன்ன*
*நத்தன னத்தனத் தாளத்தி லாடினர் நல்லநய*
*நத்தன னத்த னயிலணி சேய்தன்னை நாடியக*
*நத்தன னத்தனன் றென்றறிந் தார்சிலர் நானிலத்தே*
(வண்ணச்சரபர், *ஏகத்தாள் இதழகல் அந்தாதி*, 83)

*உரை:* நத்தன் அனத்தன் அறியா நிலை திகழ் நாதர் - சங்கினை ஏந்திய திருமாலாலும் அன்னப்பறவையை வாகனமாக உடைய பிரமனாலும் அறிய முடியாத தன்மையை உடைய தலைவரும்; தன்னனத் தனனத்தனத் தாளத்தில் ஆடினர் - தன்னன தன என்பன போன்ற தாளங்களுக்கு ஏற்ப நடனம் செய்பவருமாகிய சிவபெருமானின்; நல்ல நயனத்தன் - நன்மைமிக்க கண்ணில் தோன்றியவரும்; அல் நத்தன் - அஞ்ஞானமாகிய இருளை அழிக்கின்ற குருநாதரும்;

அயில் அணி சேய் தன்னை - வேலாயுதத்தை ஏந்தியுள்ளவரும் ஆகிய முருகப்பெருமானை; நாடிய கனத்தன் - விரும்பி அடைந்த மாண்பினை உடைய ஒருவன், அனத்தன் அன்று என்று - பயனற்றவன் அல்லன் என; அறிந்தார் - நன்கு உணர்ந்த அறிஞர்கள், நானிலத்து சிலரே - உலகத்தில் மிகச் சிலரே ஆவர்

*கருத்து* முருகப்பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் பயனற்றுக் கெட்டுவிட மாட்டார்கள் என உறுதியாக அறிந்தவர்கள் உலகத்தில் சிலர்மட்டுமே; பலர் அறியார் என்றபடி.

*குறிப்பு* நகர னகரங்கள் மாறிவருதல் யமகம் நோக்கிய எழுத்துப் போலி, ஈற்றேகாரத்தைச் சிலர் என்பதனோடு இயைக்க, பிரிநிலை *

*சீரா ரயிலணிந் தான்றலத் தேற்றநஞ் செந்திலதே*

*சீர் ஆரைஇலஅண் இந்தான்தல தேற்றநம் செம்திலதே*
*சீரார் ஐஇல்அணிந்து ஆன்றல் அத்து ஏற்று அனம்செம் திலதேசு*
*ஈரார் அயில் அணிந்து ஆன்தலத்து ஏற்ற நஞ்சு எந்துஇலதே*
*சீர்ஆர்அயில் அணிந்தான் தலத்து ஏற்றம் நம்செந்தில் அதே*
(*வண்ணச்சரபர், ஏகத்தாள் இதழகல் அந்தாதி*)

*உரை சீர்* - செல்வங்களுக்கு; ஆரை - மதில் போன்றுள்ள; இல - மனைவியாகிய லட்சுமியை; அண் - பொருந்தியவரான விட்டுணுவும், இந்தான் - சந்திரனை அணிந்துள்ள சிவனும்; தல - பூமியையுடையவனும்; தேற்ற - தெளிந்ததன்மை பொருந்தியவனும்; நம் - நம் என்னும் பீசாட்சரத்தோனும் ஆன பிரமனும் ஆகிய மும்மூர்த்திகளின்; செம் - செவ்விதான; தில - விருப்பங்களைப் பொருந்திய; தே - கிருபையையும்; சீரார் - சொற்சீர்களையுடைய புலவர்களையும்; ஐ - தலைமையான; இல் - வீடாகிய மோட்சத்தையும்; அணிந்து - அலங்கரித்துக் கொள்வதனாலுள்ள; ஆன்றல் - பெருமையையும்; அத்து - செந்நிறத்தையும்; ஏற்று - இடபவாகனத்தையுடைய; அனம் - அன்னம்போன்ற உமையவளிடத்து, செம் - செனிக்கின்ற தன்மையையும்; தில - எள்ளைப்போன்ற; தேசு - காரொளியான சனியனால்; ஈரார்- இழுக்கப்படாதவர்களின்; அயில் - புத்திக் கூர்மைக்கு; அணிந்து - சமீபமான நிலையையும்; ஆன் - ஒருக்காற் பசுவடிவான சிவபெருமான்; தலத்து - விரித்த கையில்; ஏற்ற - ஏற்றுக்கொண்ட; நஞ்சு - ஆலகாலவிடத்தை; எந்து - தாங்கிய; இல - இடமான கூர்மையுள்ள; தே - தெய்வத்தன்மையான; *சீர்*- சிறப்பு; ஆர் - பொருந்திய; அயில் - வேலாயுதத்தையும்; அணிந்தான் - தரித்துக்கொண்டவரான முருகக் கடவுளின்; தலத்து - வாசத்தலமான எல்லாப் படைவீட்டுள்ளும்; ஏற்றம் - உயர்ச்சியானது; நம் - நமக்கு உரியது ஆகிய; செந்தில் - திருச்செந்தூர் என்னும்; அதே - அத்தலமே

*கருத்து:* திருமூர்த்திகளின் செவ்விதான விருப்பங்களை அங்கீகரிக்குங் கிருபையையும் வித்துவான்களையும் மோட்ச வீட்டையும் அலங்காரப் பெருமையையும் இடபவாகனத்திலேறும் உமையவளுக்குக் குழந்தையான தன்மையையும் எள்ளைப் போன்ற கருநிறச் சோதியான சனியாற் பீடிக்கப்படாதவர்கட்குச் சமீபமாகத் தோற்றுகின்ற நிலையையும் ஒருக்காற் பசு வடிவமாயும் திருவிளையாடல் செய்த சிவபெருமான் கையால் ஏற்றுக்கொண்ட ஆலகால விடம்தங்கிய கூர்மையோடு கூடித் தெய்வத்தன்மை பெற்றுள்ள வேலாயுதத்தையும் தரித்துக்கொண்ட முருகப்பெருமான் வசிக்கும் தலமான எல்லாப் படைவீட்டுள்ளும் திருச்செந்தூரே உயர்ச்சி உள்ளது என்பதாம் (*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*)

## நிரோட்டம்

► நிரோட்டகம்

## நிரோட்டி

► நிரோட்டகம்

## நிரோட்டியம்

► நிரோட்டகம்.

## பஞ்ச பங்கி

► திரிபங்கி ▼

## பதும பந்தம்

► கமல பந்தம்.

## பாத மயக்கு (அடிமயக்கு)

புலவர்கள் மூவர் மூன்று ஆசிரியவடி பாட வேறொருவர் பிறதோர் அடி பாடி நிறைவு செய்யும் வகையில் அமையும் செய்யுள்

[யாப்பருங்கலம், 96; வீரசோழியம், 179, குவலயானந்தம், 281.]

***சான்றுப் பாடல்***

1. *ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த* (*அகநானூறு*, 81)
*கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்* (*முல்லைப்பாட்டு*, 37)
*நன்னாட் பூத்த பொன்னிணர் வேங்கை* (*அகநானூறு*, 8520)
*மலர்கொயல் உறுவதுஎன் மனமவள் மாட்டே*

மேற்கண்டவாறு மூன்று பழஞ்செய்யுள்களில் இருந்து மூன்று அடிகளை எடுத்துக்கொண்டு, தான் ஒரு அடியைப் பாடிச் செய்யுளை நிறைவு செய்திருக்கிறார் பாக்கனார்.

2 *கொங்கன்வந்து பொங்கினான் கொழுஅரிசிச் சோற்றினை*
*சங்கமங்கள் கூடியே சாப்பிடத் தொடங்கின*
*அங்கும்இங்கும் பார்க்கிறீர் அமுதினில் கண்ணில்லையே*
*எங்கள்பாவம் எங்கள்பாவம் எங்கள்பாவம் ஈசனே* (*சிவஞான முனிவர், தனிப்பாடல்*)

முதல் மூன்று அடிகள் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட இறுதி அடியைத் தான் பாடி முடித்திருக்கின்றார் சிவஞான முனிவர்

## பாவின் புணர்ப்பு

வெவ்வேறு நான்கு புலவர்கள் பாடி முடிக்கும் ஒரு செய்யுள் இதனை யாப்பருங்கலம், விரசோழியம் இரண்டும் வெவ்வேறு வகையாக வரையறுக்கின்றன அவை பின்வருமாறு

**யாப்பருங்கலம்** நால்வர் நான்கு பாவில் கட்டுரை சொன்னால், அவையே அடிக்கு முதலாகப் பாடிப் பொருள் முடிப்பது

**வீரசோழியம்** நால்வர் நான்கடிக்கு ஈற்றுரை சொன்னால், இவன் நாலடிக்கு முதல் பாடிப் பொருள் முடிப்பது குவலயானந்தம் பெயரளவில் இக்கவி வகையைக் கூறிச் செல்கின்றது

[குவலயானந்தம், 281.]

**மலர்மிசை** எழுந்த மலர்தலை வேங்கைப்
**பொத்தகத்** திருந்த நெய்த்தலைத் தீந்தேன்
**கண்டகம்** புக்க செங்கண் மறவன்
**யாழி** னின்னிசை மூழ்க
**வீடுகெழு** பொதியில் நாடுகிழ வோனே (*யாப்பருங்கலம்: மேற்கோள் பாடல், ப* 576)

மேற்கண்ட செய்யுளில் ஒவ்வொரு அடியின் முதற்சீரும் வெவ்வேறு புலவர்களால் சொல்லப்பட, பிறிதொருவர் அவற்றை முதலாகக் கொண்டு செய்யுளைப் பாடி முடித்திருக்கிறார்

## பிந்துசி யுதகம்

▶ ஒற்றுப்பெயர்த்தல்

## பிந்துமதி

பிந்து - புள்ளி; மதி - மிகுதல் மேற்புள்ளிகளை உடைய எழுத்துகளாலேயே இயற்றப்படும் பாடல் வகை

முற்காலத்தில் எகர, ஒகர உயிரெழுத்துகள் குறில் என்பதனைக் காட்ட மேற்புள்ளியிட்டு எழுதப்பட்டன. வரிவடிவில் சில குறில்களுக்கு மேற்புள்ளி இடுதலைத் தொல்காப்பியர் "எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (தொல். 16) எனக் கூறுவார் எகர ஒகரத்துடன் இணைந்த மெய்யெழுத்துகள் மட்டுமே பயிலும் ஒரு செய்யுள் இயற்றப்பெற்றால் அதை எழுதும்போது மேற்புள்ளியிட வேண்டியதில்லை (சிறுபான்மை மெய் எழுத்துகள் வந்து புள்ளி பெறுதல் விதிவிலக்காக ஏற்றுக்கொள்ளப்படும்) இத்தகைய செய்யுள்களே பிந்துமதி எனப்படும்

இக்காலத்தில் வரிவடிவில் குற்றெழுத்துகளுக்கு மேற்புள்ளியிடும் வழக்கம் மறைந்துவிட்டமையால் இப்போது உள்ள வரிவடிவில் பிந்துமதியை அமைத்துக்காட்ட இயலாது

*நெய் கொண்டே னெற்கொண்டே னெட்கொண்டென் கொட்கொண்டென்*
*செய்கொண்டென் செம்பொன் கொண் டென்?*
(*யாப்பருங்கல விருத்தி: மேற்கோள் பாடல்*, 583)

மேற்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள எகர ஒகரங்கள், மெய்யெழுத்துகள் போலப் புள்ளி வைத்து எழுதப்பெறுவனவாகும்.

## பிரிந்தெதிர் செய்யுள்

ஒரு செய்யுளின் ஈற்றுச் சீரிலிருந்து எதிரேறாகப் படிக்கையில் பிறிதொரு செய்யுள் கிட்டுமாறு பாடப்படும் செய்யுள் வகை

*பிரிந்து எதிர்வனவே பிரிந்தெதிர் செய்யுள்* (*மாறனலங்காரம்*, 290)

***சான்றுப் பாடல்***

வஞ்சித்துறை

1. *நீர நாகமா*
*தார மாகமே*
*வார மாகமா*
*ணார ணாககா* (*மாறனலங்காரம்: மேற்கோள் பாடல்*, 796)

***உரை:*** நீர - நற்குணநாயகனே!, நாக - பாம்பின்மேல் துயில் கொள்பவனே!; மா தாரமாக மேவும் ஆரம் ஆக - திருமகளை மனைவியாகக் கொண்ட மாலைகளை உடைய மார்பனே!; மாணாரணாக - பெருமையுடைய வேத சொரூபனே!; கா - என்னைக் காப்பாற்றுவாயாக

இச் செய்யுளை ஈற்றுச் சீரிலிருந்து எதிரேறிப் படிக்கையில் பின்வரும் செய்யுள் கிட்டும்

2. *காக ணாரணா*
*மாக மாரவா*
*மேக மாரதா*
*மாக நாரநீ*

***உரை:*** மாகம்ஆர் அவாம் - துறக்கத்துள்ளார் பெருக விரும்பும்; நார - நற்குணத்தையுடையவனே! மேகம் ஆக - மேகத்தைப் போலும் திருமேனியை உடையவனே; மா ரதா - சத்துருக்களை வெல்லும் முழுவீரனே; நாரணா - நாராயணன் என்னும் திருநாமத்தவனே; நீ கண் - நினது சொரூப ரூப குண விபூதிகளை மயக்கமற அறிதற்கு நீயே எமக்கு ஞானக்கண் ஆனதால்; கா - எம்மைக் காப்பாயாக

மாலைமாற்றில் எதிரேறாகப் படித்தாலும் முதல்செய்யுளே வரும்; இதில் வேறுசெய்யுள் வரும் இதுவே இரண்டிற்கும் இடையேயான வேறுபாடு ஆகும்

## பிரேளிகை

பிரேளிகை - விடுக்கும் புதிர்; விடுகவியாக அமையும் செய்யுள்.

[யாப்பருங்கல விருத்தி, *96*.]

***சான்றுப் பாடல்***

*நால் எழுத்துப் பூடு; நடுவே நரம்பு இருக்கும்;*
*காலும் தலையும் கடைச்சாதி - மேலாக*
*ஒட்டு முதல் எழுத்தும் ஓதும் மூன்றாம் எழுத்தும்*
*விட்டால் பரமனுக்கு வீடு*

இங்கு நால் எழுத்துப் பூடு என்பது 'புகையிலை' - யைக் குறிக்கிறது. காலும் தலையும் கடைச்சாதி என்பது முதலெழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்க்கக் கிட்டும் 'புலை' என்னும் சாதியைக் குறிக்கிறது ஒட்டு முதல் எழுத்தும் மூன்றாம் எழுத்தும் விட்டால் என்பது பு, யி என்னும் இரண்டு எழுத்துகள் நீங்கக் கைலை என நின்ற அச்சொல் சிவபெருமானுக்கு இருப்பிடமாகிய கைலையைக் குறிக்கிறது

## பிறிதுகவி

► பிறிதுபடுபாட்டு

## பிறிதுபடுபாட்டு

செய்யுளின் அடியையும் தொடையையும் சீரமைப்பால் வேறுபடுத்தி எழுதினாலும் அதன் சொல், பொருள் வேறுபடாது பிறிதொரு செய்யுளாய் நிறைவடையும் வகையில் அமையும் பாட்டு. அதாவது, ஒரு பாட்டு இரு யாப்பிற்று ஆதல் பிறிதுபடுபாட்டு எனலாம் சுவாமிநாதம் இதனைப் *பிறிதுகவி* என்று கூறுகிறது

*பிறிது ஒன்றாதல் பிறிதுபடு பாட்டே* (**மாறனலங்காரம்**, 291)

*பாஅடி தொடைகளும் படுப்ப வேறு*
*மேவருஞ் சொற்பொருள் வேறுப டாமல்*
*மற்றொரு பாவாய் வருவது பிறிது*
*படுபாட்டு எனப்பெயர் பகரப் படுமே* (**முத்துவீரியம்**, 1153)

*பாஎனினும் இனம்எனினும் ஓர் கவியாய்ப்*
*பதம்எதுகை பொருள்ஒப்பச் சொல்பிறிது கவியாம்* (**சுவாமிநாதம்**, 200)

[இலக்கண விளக்கம், 690.]

***சான்றுப் பாடல்***

*பொற்றேர்பரி மாகரி மாபொருதார்*
*எற்றேபடை வீரரை யெண்ணிலமால்*
*உற்றேவிய யூகமு லோகமுடைச்*
*சுற்றாயிர மூடுசு லாயதனை* (**கம்பராமாயணம்**, 6.26.19)

இது மூன்று சீர் கொண்ட வஞ்சி விருத்தம் இதனைக் கலிவிருத்தமாகவும் கொள்ளலாம் அதுவருமாறு

*பொற்றேர் பரிமா கரிமா பொருதார்*
*எற்றே படைவீ ரரைஎண் ணிலமால்*
*உற்றே வியயூ கமுலோ கமுடைச்*
*சுற்றா யிரமூ டுசுலா யதனை*

புலவர் புராணத்தின் சேக்கிழார் சருக்கம் முழுவதும் பிறிதுபடு பாட்டாக அமைந்துள்ளது பிறிதுபடு பாட்டுகளைக் கொண்டே ஒரு தனி இலக்கியத்தைப் 'பிறிதுபடு பாட்டுப் பிரபந்தம்' எனக் குமரகுருதாச சுவாமிகள் இயற்றியுள்ளார்

*மாண்தாங்கும் வேலா மலர்குவளை மார்பாஆண்*
*டாண்டுதோ றும்குறை யாதவத்தம் - வேண்டான்ற*
*கொன்பேண் விபுத குருவேறோய் தாண்டாண்மை*
*இன்பே தரவருதி இன்று* (**பத்துப் பிரபந்தம்**, 3)

கலிவிருத்தம்

*மாண்தாங்கும் வேலா மலர்குவளை மார்பா*
*ஆண்டாண்டு தோறும் குறையாத வத்தம்*
*வேண்டான்ற கொன்பேண் விபுதகுரு வேறோய்*
*தாண்டாண்மை இன்பே தரவருதி இன்று*

## புருடச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## பூமிச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## பூமியாகாயச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## மதுரகவி

தொடை, தொடை விகற்பங்கள் நிறைந்து பல அணிநலன்களைக் கொண்டு, இனிமை நயத்துடன் உய்த்துணரும் உள்ளங்கட்கு இன்பம் கொடுப்பதாய் இயற்றப்பெறும் செய்யுள்

[குவலயானந்தம், 281.]

கவிதையினை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனத் தமிழ் இலக்கண நூல்கள் நால் வகைப்படுத்தி கூறும்

*எடுத்த பொருளினோடு ஓசை இனிதாய்*
*அடுத்தவைசெஞ் சொல்லாய் அணியும் - தொடுத்த*
*தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்*
*இடம்உடைய மாமதுர யாப்பு* (வெண்பாப் பாட்டியல், 3)

இவ்வாறிருக்க மதுரகவி என்பதைச் சித்திர(க்)கவிக்குள் குவலயானந்தம் அடக்குவது மேலாய்விற்கு உரியது

## மந்தரச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## மயில்வாகனப் பந்தம்

மயில் வடிவிலான சித்திரம் வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்தி இயற்றப்பெறும் செய்யுள் இது இருவகையாக அமைகிறது

1. மயிலின் தோகையில் மட்டும் எழுத்துகள் பொருந்துவது
2. மயிலின் தோகை, உடல், தலைப்பகுதி அனைத்திலும் எழுத்துகள் பொருந்துவது

***சான்றுப் பாடல்***

நிலைமண்டில ஆசிரியப்பா

1 *வேங்க டம்வாழ் வேதன் றாதை*
*வாங்கு மருகன்! மன்மத னாணத்*
*திகழ்சிவ பாலன்; புகழ்மிகு வேல*
*வயமிடு சீலன், கயமகள் லோலன்*
*தூய நெறியா மேயநெ மார*
*மார்க்கத் தலைவ னார்க்கு முகிலென*
*மன்னு தமிழைப் பன்னு நாவன்;*
*பணிபுரி விரதமார் பத்தரின் வேந்து*
*சுந்தர நாமத் தூயவன் வாழ்கவே*
(தோத்திர மஞ்சரி, ப 121)



**வாசிக்கும் முறை**

தோகையின் அடிப்பகுதியில் தொடங்கி மேலேறி இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் மேல்நோக்கில் படித்துக்கொண்டே சென்று உச்சியிலிருந்து நடுப்பகுதியில் கீழிறங்கினால் பாடலின் இறுதி அடி கிட்டிச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/127 - வே, 3/126 - க, 7/125 - ழ், 13/124 - வா, 21/123 - ன், 31/122 - வ, 43/121 - ய, 57/120 - தூ, 71/119 - த், 83/118 - ம, 93/117 - நா, 101/116 - ர, 107/115 - த, 111/114 - ந்

பாடலில் அமையும் எழுத்துகள் 127; சித்திரத்தில் அமையும் எழுத்துகள். 113.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய வண்ணவிருத்தம்

*தனதன தனதன தனதன தனதன தனதன தனதன*

2. *வரதந திபநக ரசுமுக வொருகுக வறிதுத புவிரிவிதி*
*மரகத வரிபர மதுகளி லசலவி மலமழ வெனவிரிய*
*மரபுறு குறுமுனி வருதிம யலசர மதிவிரி விபுதகுரு*
*சுரபதி நவரச பரததி நகரம துகமழ முனிவருதி*
(பாம்பன் சுவாமிகள், சித்திரகவிகள், பக். 5 - 6)



**வாசிக்கும் முறை**

மயிலின் மூக்குப் பகுதியில் தொடங்கி உடல், தோகைப் பகுதிகளில் இடவலமாக வாசித்து இறுதியில் தோகை, உடலின் ஓரங்களில் வாசிக்கச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/81 - வ, 2/82 - ர, 3/86 - த, 4/80 - ந, 5/87 - தி, 6/78 - ப, 7/88 - ந, 8/89 - க, 9/77 - ர, 10/76 - சு, 11/33 - மு, 14/75 - ரு, 15/74 - கு, 20/73 - த, 21/72 - பு, 22/71 - வி, 23/70 - ரி, 24/69 - வி, 25/68 - தி, 26/67 - ம, 27/66 - ர, 33/90 - ர, 34/91 - ம, 35/92 - து, 39/65 - ச, 40/64 - ல, 44/94 - ம, 45/95 - ழ, 50/63 - ய, 51/62 - ம, 57/96 - மு, 58/97 - னி, 61/100 - தி.

செய்யுளில் அமையும் எழுத்துகள் 100; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 64.

## மலைப்பந்தம்

மலை வடிவிலான சித்திரம் ஒன்றை வரைந்து, அதில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்துமாறு இயற்றப்படும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

1. *நீறு தரிப்பான் நெடியரவங் கொன்றைமதி*
*யாறு தரிப்பான் அணிகலை - யேறு*
*தவரே தொழுமழகு தாளுளான் யாரோ*
*அவரே சிவன்மலை யான்* (ப வெ பழனிமலை நாயனார் ஸ்ரீமத் இராமாயாணம், பக் 28 -29)



**வாசிக்கும் முறை**

சிகரத்தின் அடிப்பகுதியில் இடதுபுறம் தொடங்கி வலப்பக்கம் படித்து ஒரு கட்டம் மேலேறி இடதுநோக்கிப் படித்துச் சென்று இவ்வாறே இடமிருந்துவலம் வலமிருந்து இடம் என மாறிமாறி உச்சிக்குச் சென்று அங்கிருந்து நடுவில் கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்.

**துருவம்**

7/55 - ன், 19/54 - யா, 29/53 - லை, 37/52 - ம, 43/51 - ன், 57/50 - வ,

செய்யுளில் அமையும் எழுத்துகள்' 55, சித்திரத்தில் அமையும் எழுத்துகள்' 49.

நிலைமண்டில ஆசிரியப்பா

*மாமறை போதித்த வழியே நடந்து*
*வேந்த ரமைச்சர் மேதைநீ தானென*
*ஓதப் பொறுமை உயிரிடத் தன்பு*
*கருணை நீதி கடவுளின் தாளை*
*வணங்கு நேர்மை வள்ளலா யீகை*
*ஆழ்ந்தறி மனமும் அன்னைதந் தையரை*
*யொருமன தாப்பணி வாய்மை உறவினர்*
*புகழ்ந்திட நேயம் பொருந்தவே நீதமார்*
*சபைதனை யடுத்தே வாய்மழை பொழிவோ*
*னரசவை பணிபே ராங்கிலம் பேசி*
*மன்னுசீர் சேர வாதந் தான்புரி*
*கேசரி தானிவ னம்புவி மெச்சு*
*மதிமுகன் சதாவுள மாசு நீங்க*
*முருகன் பாத வணந்தனை யுன்னித்*
*திணிபூ வாணி நாவுரை தீரனே*
*வாகை மாலை தானணி மார்பா*
*சீர்தா ரணிவளம் சேரநீ வாழ்கவே*

(*தி.நா.ராமச்சந்திரன்: சித்திரகவி மாலை, ப.* 9 - 10)



**வாசிக்கும் முறை**

முன்குறிப்பிட்டுள்ள முறைப்படி வாசித்து, சித்திரத்தில் உள்ள கோட்டின் அடையாளப்படி மேலேறினால் பாட்டுடைத் தலைவன் பெயர் வரும் கோட்டின் அடையாளப்படி கீழிறங்குவதையும் சேர்க்க, பின்வரும் குறள் வெண்பா கிட்டும்

போதார் புயராமச் சந்திர பூபாநீ
தாதா மனையொன்று தா.

**துருவம்**

15/239 - வே, 43/238 - க, 69/237 - ழ், 93/236 - வா, 115/235 - நீ, 135/234 - ர, 153/233 - சே, 169/232 - ம், 183/231 - ள, 195/230 - வ, 205/229 - ணி, 213/228 - ர, 219/227 - தா, 223/226 - ர்.

செய்யுளில் அமையும் எழுத்துகள் 244; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 230.

## மாணிக்கமாலைப் பந்தம்

மாணிக்க மாலை போன்ற சித்திரம் ஒன்றை வரைந்து ஒவ்வொரு மணியிலும் எழுத்துகள் பொருந்தும்படி இயற்றப்பெறும் செய்யுள்

***சான்றுப் பாடல்***

நேரிசையாசிரியப்பா

*சீரார் ராமச் சந்திரன் கன்னன்*
*கொடைதரு மாமணி மன்மத தேகன்*
*மேதகு தனத னிதியுளான் மதிமலி*
*மறையோ னாங்கில மலகில கற்றோன்*
*நீதி யதிபதி தமிழிலே தென்னன்*
*பொன்மொழி பேசிப் புவிபுனை புகழ்பெறு*
*மன்பன் இன்னவன் மக்க ளிகசுக*
*மனைவி துணைவர் வணவள மேவச்*
*சீர்பேர் பார்மிசைச் சேர*
*வாழி வாழி வாழி மகிழ்ந்தே*
(*தி.நா.ராமச்சந்திரன்: சித்திரகவி மாலை, ப.* 8)



**வாசிக்கும் முறை**

மாலையின் பூட்டுவாய்ப் பகுதியில் மேற்புறத்தில் தொடங்கி, மூன்று மாணிக்கக் கற்கள் கீழிறங்கி மீண்டும் ஒரு கல் மேலேறி வலமாகச் சுற்றிச் சித்திரத்தில் காட்டியுள்ள எண் முறைப்படி வாசிக்கச் செய்யுள் நிறைவடையும்.

**துருவம்**

2/4 - ரா, 11/13/15 - ன், 21/23/25 - ம, 31/33/35 - த, 41/43/45 - ம, 51/53/55 - ல, 61/63/65 - தி, 71/73/75 - ன், 81/83/85 - பு, 91/93/95 - ன், 101/103/105 - க, 111/113/115 - வ, 121/123/125 - ர், 131/133/135- வா

செய்யுளில் அமையும் எழுத்துகள் 141; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 115.

**மாத்திரைச் சுதகம்**

► மாத்திரைச் சுருக்கம்

**மாத்திரைச் சுருக்கம் (மாத்திரைச் சுதகம், அளவுச் சுதகம்)**

செய்யுளின் சொல்லொன்றில் உள்ள ஓர் எழுத்தின் மாத்திரையைக் குறைத்தால் வேறொரு பொருள் தருமாறு அமையும் பாடல் இது மாத்திரை வருத்தனத்திற்கு மாறானது

*மாத்திரை சுருங்கமறு பொருள்உணர்த்து உரை*
*மாத்திரைச் சுருக்கம்என வகுத்தனரே* (*மாறனலங்காரம்*, 299 *உரைச் சூத்திரம்*)

*ஒருபொருள் தரும்சொல்ஓர் மாத்திரை குறைய*
*மற்றொரு பொருள்தரல் மாத்திரைச் சுருக்கம்* (*முத்துவீரியம்*, 1148)

*சொல், பொருள்திரிய அளவுஅறு மாத்திரைச் சுருக்கப் பாவே* (*சுவாமிநாதம்*, 199)

[யாப்பருங்கல விருத்தி, 96; தண்டியலங்காரம், 98 உரை; இலக்கண விளக்கம், 690.]

***சான்றுப் பாடல்***

கலிவிருத்தம்

*ஒடியும் மாத்திரை ஒன்றுடைத் தாதகி*
*மடியும் ஒன்றுடை மாந்தருச் செய்தில;*
*கடியும் ஒன்றுடை காடுகை யாற்கிழித்து*
*இடியும் ஒன்றுடை கீலகம் ஏய்க்குமே*

(*திருநாகைக் காரோணப் புராணம்*: நந்திநாதப்படலம், 41)

*உரை* ஒடியும் மாத்திரை ஒன்று உடை தாதகி - தாதகி என்னும் சொல்லுக்குப் பரியாய பதமாகிய ஆத்தி என்பதில் ஒரு மாத்திரை குறைவதால் உண்டாகும் சொல்லாகிய அத்தி, அதாவது யானைகள்; மடியும் ஒன்று உடை மாந்தரு செய்தில - மாந்தரு என்பதன் பரியாயமாகிய சூதம் என்பதில் ஒரு மாத்திரை குறைவதால் தோன்றும் சொல்லைச் (சுதம் - கெடுதி) செய்ய வில்லை; கடியும் ஒன்று உடை காடு கையால் கிழிந்து - காடு என்பதன் பரியாயமாகிய கானம் என்பதன் ஒரு மாத்திரை குறைந்த சொல்லைத் (கனம் - மேகம்) தம் துதிக்கையால் கிழித்து; இடியும் ஒன்றுடை கீலகம் ஏய்க்கும் - கீலகம் என்பதன் பரியாயமாகிய ஆப்பு என்பதன் ஒரு மாத்திரை குறைந்த சொல்லை (அப்பு - நீர்) பொழியச் செய்வதால் மேகத்தை நிகர்க்கும் ஏ - அசை

*குறிப்பு* யானைகள் யாருக்கும் கெடுதி செய்யாமல் மேகத்தைத் தம் கையால் கிழித்து நீரைப் பொழிவித்தலால் அந்த மேகத்தை நிகர்க்கும் என்பது கருத்து

தாதகி, மாந்தரு, காடு, கீலகம் என்னும் நான்கு சொற்களின் பரியாயங்களாக முறையே ஆத்தி, சூதம், கானம், ஆப்பு என நான்கு சொற்களை நிறுத்தி அவற்றின் முதலெழுத்துகளின் ஒரு மாத்திரையைக் குறைத்து (நெடிலைக் குறிலாக்கி) வேறு சொற்களை உருவாக்கிப் பொருள் கொண்டதால் மாத்திரைச் சுருக்கம் ஆயிற்று

*வானத் திருக்கு மரிகோன் றனதருள் வண்ணமுணர்*
*வானத் திருக்கு மறியானென் றெய்த்தலொர் மாத்திரைதீர்*
*வானத் திருக்கு மறமகட் கேங்கருள் வாரியென்சு*
*வானத் திருக்கு மனமே மணிவரை மன்னினனே*

(*சிரவைக் கந்தசாமி சுவாமிகள், இரத்தினாசல யமக வந்தாதி*, 21)

*உரை* வான திரு குமரி கோன்தனது - வானுலக இளவரசியாகிய தெய்வயானையின் கணவன் ஆகிய முருகப்பெருமானுடைய; அருள்வண்ணம் உணர்வான் நத்தி - திருவருளின் தன்மையை அறிந்துகொள்ள விரும்பி முயன்று; ருக்கும் அறியான் என்று எய்த்தல் - (அவர்) வேதங்களாலும் அறிய முடியாதவராக இருக்கிறார் என்று எண்ணி வருந்தாதே; என் சுவான திருக்கு மனமே - நாயைப்போல் இழிந்தும் குற்றம் நிறைந்ததாகவும் இருக்கும் என்னுடைய உள்ளமே; ஓர் மாத்திரை தீர் வானத்து இருக்கும் மறமகட்கு ஏங்கு அருள்வாரி வானம் என்னும் சொல்லிலுள்ள நெடிலின் ஒரு மாத்திரையைக் குறைக்க வரும் சொல்லாகிய (வானம்→ வனம் = காடு) காட்டில் உள்ள வேடர் மகளாகிய வள்ளி நாச்சியாரை விரும்பி ஏக்கம் கொள்பவரும் கருணைக்கடலுமாகிய முருகக் கடவுள்; மணிவரை மன்னினன் - இரத்தினாசலத்தில் திருக்கோவில் கொண்டுள்ளார்.

ஓர் மாத்திரை தீர் வானம் என்பது வனத்தைச் சுட்டியதால் மாத்திரைச் சுருக்கம் *

## மாத்திரைப் பெருக்கம்

▶ மாத்திரை வருத்தனம்

## மாத்திரை வர்த்தனம்

▶ மாத்திரை வருத்தனம்.

## மாத்திரை வருத்தனம் (மாத்திரைப் பெருக்கம்/மாத்திரை வர்த்தனம்)

செய்யுளின் சொல்லொன்றில் உள்ள ஓர் எழுத்தின் மாத்திரையைக் கூட்ட வேறொரு பொருள் தரக்கூடியதாக மாறும் வகையில் இயற்றப்படும் செய்யுள் இது மாத்திரைச் சுருக்கத்திற்கு மாறானது

*மாத்திரை பெருகமறு பொருள்உணர்த்துஉரை*
*மாத்திரைப் பெருக்கம் எனவகுத் தனரே* (*மாறனலங்காரம்*, 299 *உரைச்சூத்திரம்* )

*மாத்திரைச் சுருக்க மறுதலைப் படவொரு*
*மாத்திரை ஏற்றிடின் மாத்திரை வருத்தனம்* (*முத்துவீரியம்*, 1149)

*. ஓர் சொல்லின்ஓ ரளவு*
*புங்கம்உறப் பொருள்வேறுஆம் மாத்திரை வர்த்தனம்* (*சுவாமிநாதம்*, 199)

[தண்டியலங்காரம், 98, உரை, இலக்கண விளக்கம், 690.]

***சான்றுப் பாடல்***

1. *அளிபொன் றேறிய வண்டதி னார்ப்பினால்*
*அளிபொன் றேறிய மண்ணதிர்ந் துக்குமால்*
*அளிபொன் றேறிய பாட லருஞ்சுனை*
*அளிபொன் றேறிய கூடலைந் தாடுமால்*
(*தண்டியலங்காரம்*: *மேற்கோள் பாடல், ப* 249)

வண்டு - **அளி** மாத்திரை கூட **ஆளி** - **சிங்கம்**
மண் - **தரை** மாத்திரை சேரத் **தாரை** - **கண்ணீர்**
பாடல் - **கவி** மாத்திரை சேரக் **காவி** - **கண்**
அழகு - **வனப்பு** மாத்திரை சேர **வானப்பு** - மழை

இச்செய்யுள் நற்றாய் இரங்கல் துறையாக அமைந்தது தலைவி தலைவனுடன் அடவியிற் செல்லுங்காலத்தே ஆளி ஆர்ப்பினால், அவளுடைய காவி போன்ற கண்கள் வானத்து மழை போன்ற கண்ணீரில் மூழ்கியாடும், கண்ணீர்த் தாரைகள் மார்பின் மேல் உகும் என்பது இதன் தேர்ந்த பொருள்

2. *ஒன்று மாத்திரை ஒன்றிய பூமியால்*
*ஒன்று சேர்விண் ணவர்உணவு ஓங்குவ*
*ஒன்று சேர ஒளிரும் இழைஎலாம்*
*ஒன்று சேரும் விளர்ப்புஉற்று உயருமே*
(**திருநாகைக் காரோணப் புராணம்**. நந்திநாதப்படலம், 42)

***உரை*** ஒன்று மாத்திரை ஒன்றிய பூமியால் - பூமி என்பதன் பரியாயச் சொல் ஆகிய நிலம் என்பதன் முதலெழுத்தை நெடிலாக்க வரும் நீலம் (நீலம் - குவளைமலர்) என்பதால், ஒன்றுசேர் விண்ணவர் உணவு ஓங்குவ - தேவர்களின் உணவு ஆகிய அவி என்னும் சொல்லின் முதலெழுத்தை நெடிலாக்கவரும் ஆவி (ஆவி - குளங்கள்) பொலிவு பெற்றன குவளைமலர்களால் பொய்கைகள் அழகுற்றன என்றவாறு; ஒன்றுசேர ஒளிரும் இழை எலாம் - இழை என்பதன் பரியாயச் சொல் ஆகிய கலம் என்பதன் முதலெழுத்தை நெடிலாக்கத் தோன்றும் காலம் (காலம் - அறுவகைப் பருவங்கள்) யாவும்; ஒன்று சேரும் விளர்ப்பு உற்று உயருமே - விளர்ப்பு என்பதன் பரியாயச்சொல் ஆகிய சிதம் (சிதம் - வெண்மை) என்பதன் முதலெழுத்தை நெடிலாக்க வரும் *சீதம்* (சீதம் - குளிர்ச்சி) அமைந்து விளங்கும் ஏ - அசை ஆறு பருவங்களிலும் அந்த இடம் குளிர்ச்சிபெற்று விளங்கும் என்றவாறு. *

பூமி, விண்ணவர் உணவு, இழை, விளர்ப்பு எனப் பொருள்தரும் நிலம், அவி, கலம், சிதம் என்னும் நான்கு சொற்களிலும் முதல் எழுத்தில் ஒரு மாத்திரை கூட்டி (குறிலை நெடிலாக்கி) முறையே நீலம், ஆவி, காலம், சீதம் என்னும் சொற்களைத் தோன்றச் செய்ததால் மாத்திரை வருத்தனை ஆயிற்று.

## மாலை மாற்று

தொடக்கத்திலிருந்து வாசித்துச் சென்றாலும், இறுதியிலிருந்து வாசித்து வந்தாலும் எழுத்துகளின் முறை மாறாது இருக்கும்படி நிரலே அமைத்துப் பாடப்படும் செய்யுள்

*ஒருசெயுள்முதல்ஈ றுஉரைக்கினும் அஃதாய்*
*வருவதை மாலை மாற்றுஎன மொழிப* (*மாறனலங்காரம்*, 287)

*இறுதி முதலாக எழுத்துவா சிப்பினும்*
*அதுவே ஆவது மாலைமாற்று ஆகும்* (*முத்துவீரியம்*, 1146)

. *ஒருபாட்டு ஈறு ஆதியதாய்*
*இரையினும்அப் பாட்டுஆதல் மாலைமாற்று* (*சுவாமிநாதம்*, 196)

[வீரசோழியம், 179; தண்டியலங்காரம், 98; இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281.]

***சான்றுப் பாடல்***

*வாமனா மானமா*
*பூமனா வானவா*
*வானவா னாமபூ*
*மானமா னாமவா* (*மாறனலங்காரம்*: மேற்கோள் பாடல்., 793)

*தாமா ருதிநா தாதான வாகாரா*
*வீமா மிசாமரா மேதாமா - பூமாபூ*
*மாதாமே ராமசாமி மாவீரா காவான*
*தாதாதா நாதிருமா தா* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்' தனிப்பாடல்*)

## முண்டகப்பாட்டு

'விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டு' என்னும் யாப்பருங்கல விருத்தி (96:14) யில் வரும் தொடருக்கு விளக்கம் கூறும் பழைய விருத்தியுரையினின்றும் இவ்வகைச் சித்திரக் கவியினை அறியமுடிகிறது எனினும் இக்கவி வகை பற்றிய விளக்கம் எதுவும் தெளிவாகவில்லை.

## மும்மண்டில வெண்பா

ஒரு வெண்பாவின் இரண்டாம் மூன்றாம் சீர்களை முதல் சீராகக் கொண்டு பாடலை மாற்றி அமைத்தாலும் அதன் யாப்பு சிதையாத வண்ணம் இயற்றப்பெறும் செய்யுள்.

*குறிப்பு* இரண்டாம் சீரை முதல் சீராக மாற்றுகையில் முதல் சீர் வெண்பாவின் இறுதிச் சீராக அமையும். மூன்றாம் சீரை முதல் சீராக மாற்றினால் முதல், இரண்டாம் சீர்கள் வெண்பாவின் இறுதி அடியில் அமையும்

***சான்றுப் பாடல்***

1 அ *மன்னவா! வேலவா! மாறில்அரு ணைச்சிகரி*
*பின்அணிசேர் மேலவனே! வீறிசைய - வெல்நலத்தாய்!*
*சீலம்மிகும் ஆறிருதோள் சேமணியே!* என்று *செப்பும்*
*மால்அடைந்தும் மாறிலன்அம் மா*
(*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், திருவிளக்காயிரம்*, 844)

ஆ *வேலவா மாறில்அரு ணைச்சிகரி பின்அணிசேர்*
*மேலவனே வீறிசைய வெல்நலத்தாய் - சீலம்மிகும்*
*ஆறிருதோள் சேமணியே என்றுசெப்பும் மால்அடைந்தும்*
*மாறிலன்அம் மாமன்ன வா*

இ *மாறில்அரு ணைச்சிகரி பின்அணிசேர் மேலவனே*
*வீறிசைய வெல்நலத்தாய் சீலம்மிகும் - ஆறிருதோள்*
*சேமணியே என்றுசெப்பும் மால்அடைந்தும் மாறிலன்அம்*
*மாமன்ன வாவேல வா*

2. அ *சலமேதோ சங்கந்தா பூணாரந் தாமே*
*கலைதாநற் புங்கவன்மால் காணாப் - புலவுடைய*
*சங்கரா கோணா கலாமதியக் கோடீர*
*சங்கரா சோணா சலா* (*இராமச்சந்திரக் கவிராயர், தனிப்பாடல்*)

ஆ *சங்கந்தா பூணாரந் தாமே கலைதாநற்*
*புங்கவன்மால் காணாப் புலவுடைய - சங்கரா*
*கோணா கலாமதியக் கோடீர சங்கரா*
*சோணாச லாசலமே தோ*

இ *பூணாரந் தாமே கலைதாநற் புங்கவன்மால்*
*காணாப் புலவுடைய சங்கரா - கோணா*
*கலாமதியக் கோடீர சங்கரா சோணா*
*சலாசலமே தோசங்கந் தா*

## மும்மீன் பந்தனம்

மூன்று மீன்கள் ஒன்றையொன்று சந்திக்கும் வகையாக அமைந்த சித்திரத்தில் மீன்களின் உடல் முழுவதும் எழுத்துகள் பொருந்தும் வகையில் பாடப்படும் செய்யுள்

*வாருலவு மாவேர்சேர் செந்திற்க திர்வேல்*
*வாரணவி லோதனனே வாமிமகா - ஏரகா*
*வாதணவா காவேநீ நாடக மாகிவல*
*வாதர வாகிடவே வா* (**கந்தன் சித்திரபந்தன மாலை**, ப. 15)

**வாசிக்கும் முறை**

மூன்று மீன்கள் சந்திக்கும் இடத்திலுள்ள எழுத்தில் தொடங்கி, இடப்பக்கம் உள்ள மீனின் உடலில் வலமிருந்து இடம், இடமிருந்து வலமாகப் படித்துக்கொண்டே வால் பகுதிக்குச் சென்று அங்கிருந்து நேராகப் படித்துக் கொண்டே தொடங்கிய இடத்துக்கு வந்து மற்ற இரு மீன்களிலும் இவ்வாறே படிக்கச் செய்யுள் கிட்டும்



**துருவம்**

1/19/37/55 - வா, 3/18 - ல, 6/17 - வே, 9/16 - ர், 12/15 - தி, 21/36 - ண, 24/35 - த, 27/37 - வா, 30/33 - கா, 39/54 - வே, 42/53 - ட, 45/52 - கி, 48/51 - வா

பாடலில் அமையும் எழுத்துகள் 55; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 40.

## முரச பந்தம்

முரசத்தின் படம் ஒன்றை வரைந்து, அதில் உரியமுறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்

செய்யுளின் முதல் இரண்டடிகள், இறுதி இரண்டடிகள் கோமூத்திரியாகவும், முதல் அடி மற்ற மூன்று அடிகளில் கீழுற்று மேல்நோக்கவும், இறுதிஅடியும் அவ்வாறே மற்ற மூன்றடிகளில் மேலுற்றுக் கீழ்நோக்கவும் நிறைவுபெறும்

*எழுதிய வரிநாலின் உள்முதல் ஈறன*
*பழுதற மந்திரிச் செலவாய்ப் படர்ந்தயல்*
*ஒழுகியும் கீழ்மேற் றனதீற்று உற்றபின்*
*அறைதொறும் ஏனைய அடைவே பாதியின்*
*முறைதடு மாறுதல் முரச பெந்தம்* (**மாறனலங்காரம்**, 284)

*உங்குவரி நான்கடிநான் காய்க்கோமூத் திரிபோல்*
*உயர்ந்தவரி இரண்டுசிறு வாராய்மேல் வரிகீழ்*
*இங்கு பிறவரியின்மேல் கீழ்மூக்காய்ப் பெருவார்*
*எனப்புகறல் முரசபெந்தம்* (**சுவாமிநாதம்**, 199)

[தண்டியலங்காரம், 98, உரை; இலக்கண விளக்கம், 690]

*சான்றுப்பாடல்*

*போதவான துவாதரா*
*மாதவா தணவாதநா*
*நாதவான தவாரவா*
*வேதவான துவாரகா*
(**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 788)



*கான வாரண மரிய வாயினனே*
*தான வாரண மரிய வாயினனே*
*தான வாரண மரிய வாயினனே*
*கான வாரண மரிய வாயினனே*
(**தண்டியலங்காரம்**: மேற்கோள் பாடல், ப 251)



## மூவெழுத்துப் பாட்டு

- ▶ எழுத்துப்பாட்டு ▼

## மெல்லினப் பாட்டு

- ▶ ஓரினப்பாட்டு ▼

## வக்கிர உத்தி

மாறாகப் பொருள் கொள்ளும்படிப் பேசுதல் என்னும் இவ்வணி வடமொழியில் வக்ரோக்தி என வழங்கும் ஒருவர் மற்றொருவரை அழைக்கும் போதும், ஏதாவதொன்றை வினவும்போதும் கேட்டவர் முன்னவரின் கருத்துக்கு மாறான பொருளைக் கொண்டு பதில் கூறுகிறார்; இதற்குத் தரப்படும் பதிலையும் இரண்டாமவர் தவறாகப் புரிந்து கொள்ளுகிறார் இவ்வாறு மொழிகள்தோறும் நேர்பொருள் ஒன்று பிறபொருள் ஒன்று என இரட்டுறமொழிதலாக அமையுமாறு இயற்றப்படும் செய்யுள்.

*வெளிப்படை விளியினும் வினாவினும் மெய்ம்மை*
*ஒளித்துமற் றொன்றினை உரைப்புழி மறித்தும்*
*நிரைத்தபன் மொழிதொறு இசைதிரி நிலைத்தாய்*
*உரைப்பது தானே வக்கிர உத்தி* (**மாறனலங்காரம்**, 279)

*சான்றுப் பாடல்*

1. *ஏற்றம்உறும் ஓதிமத்தா என்றேன்; விண்ணோர்க்கு*
*இன் அமுதுஅன்று அளித்தவன்பேர் என்றான்; வெற்பில்*
*தோற்றம்உறும் எகினவா கனத்தா என்றேன்;*
*தொன்மறையோன் பெயர்என்றான்; சுரந்து விண்ணோர்*
*போற்றவரும் அன்னவா கனத்தா என்றேன்;*
*புரந்தரனார் பெயர்என்றான்; பொன்னே! என்னே!*
*மாற்றம்உரைப் பகர்ந்தமகிழ் மாறற்கு எந்தன்*
*மையல் உரைத்து எவ்வாறு மருவு வேனே?*

(**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 779)

இது திருவீதி உலா வந்த நம்மாழ்வரைக் கண்டு காதல் கொண்ட பெண்பாற்கைக்கிளைத் தலைவி கூற்று தான் கூறியவற்றையெல்லாம் தவறாகப் பொருள் கொண்டு பதில் கூறும் இவரை எப்படி அடையப்போகிறேன் எனக் கவல்கிறாள்

| உரை | தலைவி கொண்ட பொருள் | மாறர் கொண்ட பொருள் |
|---|---|---|
| ஓதி மத்தா - | அன்னப்பறவையை ஊர்தியாக உடையவரே | கடலைக் கடைகின்ற மத்தினை உடைய திருமால் பெயர் என்றார் |
| வெற்பில் தோற்றம் - உறும் எகின வாகனத்தா | மலையைப் போன்று விளங்கும் அன்னப்பறவையை ஊர்பவரே | இமயமலையில் பிறந்த அன்னம் போன்ற உமாதேவியைத்தன் இடப்பாதியாக உடைய சிவபெருமானைப் படைத்த பிரமன்பெயர் என்றார் |
| சுரந்து விண்ணோர் - போற்றவரும் அன்ன வாகனத்தா | நன்றாகக் கூடித் தேவர்களால் தேவர்களால் புகழப்படுபவராகிய அன்னப்பறவை வாகனரே | கூடிப் புகழப்பெறும் மன்னவனும், மேகத்தை (ஊர்தியாக) உடையவனும் ஆகிய இந்திரன் பெயர் என்றார் |

இவ்வெடுத்துக்காட்டில் வக்கிர உத்தி விளியின்கண் வந்தது

2. *அஞ்சக் கரனோ என்றேன்; சங்*
*கரன்ஆம் என்றான்; தனிஆழி*
*மிஞ்சத் தரித்த திருத்தேர்வெய்-*
*யவனோ என்றேன்; வெயில்என்றான்;*
*செஞ்சொல் பரிதி வலம்பயில்விண்-*
*டோஎன் றேன்,பொற் சிலம்பு என்றான்-*
*வஞ்சர்க்கு இரங்கா அரங்கனுக்குஎன்*
*மால்எப் படியே மொழிவேனே* (**மாறனலங்காரம்**: மேற்கோள் பாடல், 780)

| உரை. | தலைவி கொண்ட பொருள் | அரங்கன் கொண்ட பொருள் |
|---|---|---|
| அம் சக்கரனோ - | அழகிய ஆழிப்படையை உடைய திருமாலோ? | அஞ்சு அக்கரன் - திருவைந்தெழுத்தை உடைய சிவபெருமான் |
| ஆழி மிஞ்சத் தரித்த - | நிகரற்ற சுதர்சன சக்கரத்தைப் பெருமையுடன் கையில் தாங்கியுள்ளவனும் | ஒற்றைச் சக்கரத்தைப் பெருமையோடு பெற்றுள்ள தெய்வீகமான இரதத்தைக் கடவுகின்ற வெப்பமானவன் சூரியன் |
| திருதேர் வெய்யவனோ - | திருமகளால் தேர்ந்தெடுக்கப் பெற்று விரும்பப்பட்டவர் ஆகிய திருமாலோ? | |
| செம்சொல் பரிதி வலம் பயில் விண்டோ - | செம்மையும் புகழும் மிக்க சக்கராயுதத்தை வலக்கையில் தாங்கியுள்ளவிட்டுணுவோ? | செம்மையும் புகழும் வாய்ந்த சூரியன் வலம் வருவது பொன்மலை |

இந்த எடுத்துக் காட்டில் வக்கிர உத்தி வினாவின்கண் வந்தது

## வட்டச் சக்கரம்

▶ சக்கரம் ▼

## வத்துத் தாரணை

▶ தாரணை.

## வயிரத் தாரணை

▶ தாரணை.

## வல்லினப்பாட்டு

▶ ஓரினப்பாட்டு.

**வாவன்ஞாற்று**

ஓரெழுத்துக் கொடுக்க அதனை முதலாகக் கொண்டு ஈற்றடி பாடிப் பின்னும் ஓரெழுத்துக் கொடுக்க ஈற்றயல் அடி பாடி மற்றோரெழுத்துக் கொடுக்க இரண்டாமடி பாடிப் பின்னும் ஓரெழுத்துக் கொடுக்க முதலடி பாடிப் பொருள் முடிய எதுகை வழுவாமல் அமையும் செய்யுள்.

[யாப்பருங்கலம், 96 ]

***சான்றுப் பாடல்***

கிட்டவில்லை

**வாவனாற்றி**

▶ வாவன்ஞாற்று

**விசித்திர அகவல்**

குறள் வெண்பாவின் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் அமையுமாறு பாடப்படும் அகவற்பா

***சான்றுப் பாடல்***

*வருக வருக தருமபுர வரத*
*பண்டார சந்நி தானமரப் பலரு*
*மேத்தும் இறைவ வருக விம்ம*
*ணலலல் உறவிழை அசுரர்சேர் திரிபு*
*ரந்தனை எரித்தவ ரன்றன் சிறு*
*தமர்ந்த சைவ சமய மவனிவீ*
*ரியமுற வொளிரவி ரியைய வருகச*
*ராசரத் துளசைவ ராசிகட் குரையிசை*
*தேசிக வருக சீவர் களுக்கிவ*
*ணவல மொழித்துநல் அமுதம் அருள்புரி*
*ஞானசம் பந்த வருக நனிநசை*
*கொண்டினி துலகங் கொளத்தமிழ்க் கல்வியை*
*அன்புடன் விருத்தி அமையச்செய் யாரிய*
*வின்புடன் வருக வியைந்தவிச சைவ*
*மடத்திலோர் தம்பிரான் வைக்க வருடரு*
*மத்தவருக அகிலம் இசை மிக்த*
*புகழ்கொடே சிகர்தமிற் பெருமை வாய்புங்கவு*
*மகிழ்ந்திவண் வருக கல்வி வாயொரு*
*மன்றனி மாதவ வருகநல் அருண்மண*
*மடியேன் பாலுநின் அடிமலர் சொல்லால்*
*வாழ்த்தும் அன்பர் பாலுமகிழ் மிக*
*வாய்ந்து தந்து காத்தனின் மாண்பமா*
*மேற்கோள்சொல் அடிகளில் விளங்கிய வீற்றி*
*லுளவக் கரங்களை உவப்புட னிசைக்கில்*
*தருமபுர வீச சைவரிசை யைய*
*வருக வருணல்க மாவென வேயொரு*
*குறள்வெண் பாவருங் குலவிய*
*மனதில் ஏற்று மகிழ்வு கொள்கவே*

*(தரும புரவீச சைவரிசை யைய*
*வருக வருணல்க மா!)*

(இப்பாடல் இடம் பெறும் நூல். வே இரா. மாதவன், சித்திரக் கவிகள் பக் 300 - 301)

**விசித்திரப்பா**

யாப்பருங்கல விருத்தி நூற்பா(96)வில் இச்சித்திரக்கவி வகை குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விருத்தியுரை இதனைப் பின்வருமாறு விளக்குகிறது

"விசித்திரப்பா என்பது, எங்கும் ஏழ் அறையாகக் கீறி, மேலை ஒழுங்கினுள் மொழிக்கு முதலாயின எழுத்து ஒரு பொருள் பயக்க நிறுவி அவ்வெழுத்துகளை ஒழுங்கும் கண்ணறையும் படாமே நிறுவி, ஓர் எழுத்துக்கு ஓர் அடியாகவானும் ஒரு சீராகவானும் முற்றுப் பெறப்பாடுவது

எழுத்து நிறுவுதற்கு இலக்கணம் ஒருவன் பாண்டவர் யானைக் கொம்பே புள்ளித்தாய் கண்ணன்றொடு திசையே எனக் கொள்க நான்காவது முதலா நான்கிறுதியாக அதன் மூன்று முதலாக முடிவது எனவும் கொள்க அமிதபதி கவி எனவரும்" (யாப்பருங்கல விருத்தி, 96)

இச் சித்திரக் கவி வகையை யாப்பருங்கல விருத்தி தவிரப் பிறநூல்கள் கூறுகிற போதிலும் இதைப் பற்றிய விளக்கங்கள் தெளிவை ஏற்படுத்தவில்லை

## வித்தாரக்கா

வெண்பாப் பாட்டியலின் செய்யுளியல் 4 -ஆம் நூற்பாவின் உரை வாயிலாக இது ஒரு சித்திரக் கவிவகை என அறியப்பட்ட போதிலும் இதைப் பற்றிய விளக்கம் எதுவும் கிட்டவில்லை

## விதான வருக்கம்

இரண்டு குறில் இரண்டு நெடில் அல்லது இரண்டு நெடில் இரண்டு குறில் என்பதாக மாறிமாறி அமையும் செய்யுள்

[நவநீதப் பாட்டியல், 67, பிரபந்த மரபியல், 54]

*சான்றுப் பாடல்*

*துங்கக் கனகச் சோதி வளாகத்*
*தங்கப் பெருநூல் ஆதியை ஆளும்*
*செங்கட் சினவேள் சேவடி சேர்வார்*
*தங்கட் கமரும் தண்கடல் நாடே* (*யாப்பருங்கல விருத்தி ப.* 560)

யாப்பருங்கல விருத்தி விதானச் செய்யுள் என்று இதனைக் குறிப்பிடும் போதிலும் இதனைச் சித்திரக்கவியாகக் கொள்ளவில்லை

## விருச்சிக பந்தம்

விருச்சிகம் - தேள்; பந்தம் - பிணிப்பு தேள் உருவச் சித்திரத்தில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள்.

*திங்கண்முக மானேதே னேமாகச் செங்கமல*
*மங்கைதிற நின்வாய் மலர்* (*கலாவதி நாடகம்*)

*சேம னன்பர் சேவிகவி சேர்புலவ ராராயு*
*மாமதமன் னைப்பணிகு வாம்* (*அணியிலக்கண வரலாறு ப.* 219)



**வாசிக்கும் முறை**

தேளின் தலைப்பகுதியில் இடப்புறம் தொடங்கும் கொடுக்கில் ஆரம்பித்து வலப்புறக் கொடுக்குக்குச் சென்று அதன் வழியே கீழிறங்கி அடுத்த வலப்புறக் கொடுக்குக்கு வந்து பின் இடப்புறம் சென்று வாசித்து, இவ்வாறே மாறிமாறி வாசித்தவாறு வால்பகுதியில் இறங்கினால் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

6/12 - க, 7/11 - மா, 8/10 - னே

செய்யுளில் அமையும் எழுத்துகள் 30; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 27.

(வே இரா மாதவன் சித்திரக் கவிகள் பக் 287 - 288)

## விளக்குப் பந்தம்

விளக்குவடிவச் சித்திரம் ஒன்றில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்படும் செய்யுள்

விளக்கின் வடிவ அமைப்பு அடிப்படையில் இதனை இரண்டாகக் காணலாம்' 1 காமாட்சி விளக்கு, 2 குத்து விளக்கு

### 1. காமாட்சி விளக்கு

காமாட்சி விளக்கு வடிவச் சித்திரத்தில் உரிய முறையில் எழுத்துகளைப் பொருத்துவது

*தாயின் மணிவிளக் கேந்தித் தருமந்*
*தழைக்கமனை செழிக்க மாடத் திருத்திநன்*
*மங்கள மஞ்சட் குங்கும மப்பி*
*விரைசெறி மாலை வேய்ந்தன் புடனே*
*மணநிறை மடுவென ஆநெய் யோம்பித்*
*தாமரை நூற்றிரி யமர்த்தித் தண்ணளி*
*யாட்சி யாக அருளொளி யேற்றிச்*
*சிவ சாட்சியே தேவ காட்சியே*
*மாதாவே தாதாவே காமாதே*
*காவாயே தாயே நீதா*
*நீயே தாயே வாகா தேமா*
*காவே தாதா வேதா மாயே*
*எனதின மனமுற அறுநான் மனையின்*
*தேவிஶ்ரீ காம கோடி நாலெண்*
*ணறமரு ணன்றென் றன்னை*
*ஶ்ரீகா மாட்சி யம்மன் விளக்கே*
(ஶ்ரீகாமாட்சி அம்மன் அலங்காரப் பஞ்சகம், 18)



**வாசிக்கும் முறை**

காமாட்சி அம்மன் விளக்கு வடிவச் சித்திரத்தின் அடிப்பகுதியில் இடதுபுறம் தொடங்கி, வலப்புறம் வாசித்துச் சென்று, மேலேறி இடதுபுறம் வாசித்து, இவ்வாறே மாறிமாறி வாசித்துக் கொண்டே மேலேறி இடம்வலம், வலம்இடம் எனப் படித்து விளக்கின் மேல்பகுதியிலுள்ள திருவாசிப்பகுதியின் இடதுபுறம் மேலேறி வலதுபுறம் இறங்க வேண்டும் இறுதி அடியை மேலிருந்து கீழ் வாசிக்கச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

9/203 - கே, 25/202 - க், 39/201 - ள, 51/200 - வி, 61/199 - ன், 69/198 - ம, 77/197 - ம், 87/196 - ய, 99/195 - சி, 113/194 - ட், 129/193 - மா

செய்யுளில் அமையும் எழுத்துகள் 203; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 92.

(வே இரா மாதவன், சித்திரக்கவிகள் ப 289)



**2. குத்து விளக்கு**

நிலைமண்டில ஆசிரியப்பா

*சித்ர வேலைகள் செய்துயர் தமிழில்*
*அழிவிலாக் கவிவான் அழகு துவள*
*நந்தமிழ் மாமுகில் நாமகள் நீவ*
*வெல்லத் தேன்மழை வீழ்ந்து தீம்புனல்*
*பாயச் செய்த பாசச் செல்வன்*
*மாதவச் செம்மல்நீ மகிழ்ந்துவா ழியவே*
(வே இரா மாதவன், சித்திரகவிகள், 'வாழ்த்து')

**வாசிக்கும் முறை**

விளக்கின் அடிப்பகுதியின் இடதுபுறத்தில் தொடங்கி வாசித்து வலப்பக்கம் மேலேறி வாசித்து, இவ்வாறே இடமிருந்து வலம், வலமிருந்து இடம் என மாறி மாறி வாசித்துக் கொண்டே மேலேறிச் சென்று விளக்கின் நுனியிலிருந்து நேரே கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்.

**துருவம்**

4/94 - வே, 11/93 - ய, 18/92 - ழி, 24/91 - வா, 29/90 - து, 33/89 - ந், 36/88 - ழ், 39/87 - கி, 42/86 - ம, 45/85 - நீ, 48/84 - ல், 53/83 - ம, 60/82 - ம், 67/81 - செ, 72/80 - ச், 75/79 - வ

செய்யுளில் அமையும் எழுத்துகள் 94; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 78.

நிலைமண்டில ஆசிரியப்பா

*சீர்மிகு முருக வேளைச் சிரந்தாழ*
*வணங்கிநல் நேய மாகி, அவனதன்*
*இணங்குறு மெழில்கழல் துணையினை நினைவில்*
*வாங்கி, எந்நாளும் பாடும் புலவர்*
*நீடு வாழவே நின்றாய், தூயநல்*
*தோணி யாயென்று மகலா திருந்து*
*அவரவர் பணிகளை ஆதரிப் பாய்; பின்*
*தமிழையில் வுலக முவப்ப பேசவே*
*சுப்பிர மணியன் நீடுவா ழியவே*
(வே இரா மாதவன், *சித்திரகவிகள்*, '*ஆசிரியர் வணக்கம்*')



**வாசிக்கும் முறை**

குத்துவிளக்கின் அடிப்பகுதியில் இடதுபுறம் தொடங்கி வலப்பக்கமாக வாசித்து வந்து ஒரு கட்டம் மேலேறி இடம்நோக்கி வாசித்து இவ்வாறே மாறிமாறி விளக்கின் உச்சிவரை சென்று அங்கிருந்து நேரே கீழிறங்கினால் செய்யுள் நிறைவடையும்.

**துருவம்**

8/137 - வே, 23/136 - ய, 37/135 - ழி, 50/134 - வா, 59/133 - டு, 65/132 - நீ, 71/131 - ன், 75/130 - ய, 79/129 - ணி, 84/128 - ம, 93/127 - ர, 106/126 - பி, 118/125 - ப்

செய்யுளில் அமையும் எழுத்துகள் 137; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 128

## வினாவிடை

▶ வினாவுத்தரம்

## வினாவுத்தரம்

வினா - கேள்வி, உத்தரம் - விடை. கேள்வி, விடை என அமையும் கவி அதாவது, செய்யுளின் தொடக்கத்தில் சில வினாக்கள் தொடர்ந்து அமைய, அவ்வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் விடைகளைச் சொல்லி அவ்விடைகளைச் சேர்க்கக் கிடைக்கும் சொல் செய்யுளின் இறுதியாக அமையும் வகையில் இயற்றப்பெறும் பாடல்

*துதித்திடும் ஒருபொருள் தொடர்சொலைப் பிரித்து*
*மதிப்பட வினாய வகைக்குஎதிர் மொழியாய்*
*விதிப்பட உரைப்பது வினாஉத் தரமே* (*மாறனலங்காரம்*, 280)

*வினாவொடு விடையும் விரித்து வருவது*
*வினாஉத் தரமென விளம்பப் படுமே* (*முத்துவீரியம்*, 1143)

*அங்கு வினாச் சொற்றொடரைப்*
*பிரித்து வெவ்வேறு வினா*
*அதற்குவிடை பொருளாகச் சொலல்*
*வினாவிடையாம்* (*சுவாமிநாதம்*, 199)

[யாப்பருங்கலம், 96, வீரசோழியம், 179; தண்டியலங்காரம், 98; இலக்கண விளக்கம், 690; குவலயானந்தம், 281.]

***சான்றுப் பாடல்***

*இரவல னேஉனக்கு இல்லாதது என்ன? இதயம்என்ன?*
*பரஉணவு ஏது? சுவையற்றது என்ன?சொல் பான்மைஎன்ன?*
*தரவுரை செய்திடஎன்றான் அதற்கொன்றும் சாற்றிலன்யான்*
*வரதிரு வேங்கட நாதாஎன் றேன்பொன் வழங்கினனே* (**தனிப்பாடல்**)

*யாசிப்பவனே உனக்கு இல்லாதது எது? (திரு)*
*உன் மனம் எவ்வாறு இருக்கிறது?* (வேம், *அதாவது* வேகின்றது)
*நின் உணவுக்கு வேறு வழி யாது? (கடன்)*
*சுவையில்லாதது எது? (நா)*
*நீ அடிக்கடி சொல்லும் சொல் யாது? (தா)*

இக் கேள்விகளுக்கான விடைகளைச் சேர்த்தால் திருவேங்கட நாதா என்னும் விடை கிடைக்கும் இதுவே பாடலின் இறுதி அடியில் அமைந்துள்ளது

*பின்னையின்பேர் ஆவதெது? பீட்டின்சொல் என்? பழகி*
*என்னும்மொழி என்? கவரி ஏந்திமிக்கார் - முன்அசைத்தே*
*உய்பவனை ஏவுரையா தோ? சேய்பண் ணூலெனுரை*
*செய்திருவ லங்கற் றிரட்டு* (*திருவலங்கற்றிரட்டு*)

*உரை·* பின்னையின் பேர் - (இலக்குமி) திரு; பீட்டின்சொல் (பீடு) - (வலிமை) வலம்; பழகு - கற்று; முன் அசைத்தே உய்பவனை ஏவுரையாதோ (சாமரம் வீசுபவனை எவ்வாறு ஏவுவார்?) - இரட்டு

இவ்விடைகளைச் சேர்ப்பின் திருவலங்கற்றிரட்டு என்பது கிடைக்கும். இது பாடலின் இறுதி அடியில் அமைந்துள்ளது

## வேலாயுத பந்தம்

வேல் வடிவிலான சித்திரம் ஒன்றை வரைந்து அதில் உரிய முறையில் எழுத்துகள் பொருந்தும் வகையில் இயற்றப்பெறும் செய்யுள். இது இருவகையாக அமைகிறது

1. வேலின் தண்டுப் பகுதி ஒரு வரிசையாக அமைதல்
2. வேலின் தண்டுப் பகுதி மூன்று வரிசையாக அமைதல்

***சான்றுப் பாடல்***

வஞ்சி விருத்தம்

1. *வேல வாகுக நாதனே*
*வால வேதமு மோதியே*
*கால வேதயே நாசுற*
*நீல மாமயி லூர்வையே*
(***கந்தன் சித்திரபந்தன மாலை, ப.*** 30)



**வாசிக்கும் முறை**

வேலின் நுனிப்பகுதியில் தொடங்கி வலமாகச் சுற்றி வந்து உள்கட்டத்திற்கு இறங்கி அங்கும் அவ்வாறே சுற்றித் தண்டில் இறங்கினால் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/11 - வே, 2/22 - நா, 12/20 - த, 16/21 - யே.

செய்யுளில் அமையும் எழுத்துகள் 33; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 29.

இணைக் குறளாசிரியப்பா

2. *வேறு கதிபாழ் வினைவாய் மோது*
*கோரத் தருழை நேர்தலோ வரிதே*
*சளமெனு மக்குணஞ் சார வேநிச*
*மொளிர்வழி கண்டு கசிதலு மரிதே*



*குருபர னெறிதரு ஞானந் தனையே*
*பரசு மாறெமை யாண்டுச்*
*சிறந்திட வைத்த பிரபு*
*சிரவைச் சுந்தர தேசிகர்*
*சரண முளரி தழைத்து வாழ்கவே*
(தோத்திர மஞ்சரி, ப 116)

**வாசிக்கும் முறை**

வேலின் அடிப்பகுதியில் தொடங்கி இடமிருந்து வலம் வலமிருந்து இடம் என மாறிமாறிப் படித்துக்கொண்டே உச்சிவரை சென்று அங்கிருந்து கீழ் இறங்கச் செய்யுள் நிறைவடையும்

**துருவம்**

1/115 - வே, 3/114 - க, 6/113 - ழ், 9/112 - வா, 12/111 - து, 15/110 - த், 18/109 - ழை, 21/108 - த, 24/107 - ரி, 27/106 - ள, 30/105 - மு, 33/104 - ண, 36/103 - ர, 39/102 - ச, 42/101 - ர், 45/100 - க, 49/99 - சி, 54/98 - தே, 58/97 - ர, 61/96 - த, 65/95 - ந், 71/94 - சு, 78/93 - ச், 84/92 - வை, 88/91 - ர .

செய்யுளில் அமையும் எழுத்துகள். 115; சித்திரத்தில் அமையும் எழுத்துகள் 90

பின்னிணைப்பு

**1. சித்திரக் கவியின் சாயல் கொண்ட பாடல்கள்**

இலக்கண நூல்களில் குறிப்பிடப்படாத சில சித்திர(க்)கவி வகைகளைப் பிற்காலக் கவிஞர்கள் படைத்துக் கொண்டுள்ளனர் அவை ககர வருக்கமோ, சகர வருக்கமோ, தகர வருக்கமோ இல்லாது பாடுவது; கொம்பில்லாமல் பாடுவது; காலில்லாமல் பாடுவது; மூக்கொலி இல்லாது பாடுவது; அகர வருக்க உயிர்மெய்களை மட்டும் கொண்டு பாடுவது போன்றவையாகும்

**சகர வரிசை இல்லாத பாட்டு**

*ஓதுவிக்கும் பண்பில் உயர்ந்த பிளாநகனென்று*
*ஓதுஉரை எல்லா உயிர்க்குமே - நீதி*
*தரும்அனகன் ஆதித் தனிமைக் கடவுள்*
*திருவருளால் வாழ்க திகழ்ந்து* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனிப்பாடல்*)

*குறிப்பு* பிளாநகன் என்பது ஓர் ஐரோப்பிய வள்ளலின் பெயர்

**தகரவரிசை இல்லாத பாட்டு**

*பங்கயன்ஆக் கும்படைப்புள் பட்டிங்கு உழலாமல்*
*பங்கமற எற்குஅருள்வாய் பைப்பணிப்பூண் - சங்கரனே*
*நல்அம் புலியொன்று நண்சடையாய் நின்அடியாம்*
*மெல்அம் புயம்என்னும் வீ* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனிப்பாடல்*)

**ளகர வரிசை இல்லாத பாட்டு**

*கல்லே நிகர்த்துக் கனிவில்லா என்மனமே*
*மல்லார் வணிகபுரி வாழும்மை - சொல்லார்ந்த*
*மாப்பிட்டு வந்தான் மனைவிவிசா லாட்சியைக்கை*
*கூப்பிட்டு நித்தம்வணங்கு* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனிப்பாடல்*)

**ஒற்றைக் கொம்பில்லாத பாட்டு** (இது மோழை வெண்பா எனப்பெறும்)

*முத்திதந்து ஆளும் முனிவர் இருவர்முனம்*
*பத்திதர நின்று பணிந்துஇறைஞ்ச - நத்தமிடும்*
*கண்ணம் புயத்தான் கருதுபதத் தான்பத்துத்*
*திண்ணம் புயத்தான் சிவன்* (*சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனிப்பாடல்*)

ஒற்றை இரட்டைக் கொம்புகள் (ெ, ே) இல்லாத (எ, ஏ ஏறிய உயிர்மெய்கள் இல்லாத) பாட்டு

*பாலும் அமுதும் பழகும்நிகர் முத்தமிழால்*
*நாலு கவியும் நவிலாமல் - காலும்*
*தலையும்அறி யாதுபுலும் தாழ்வுதீர் அண்ணா*
*மலையின் சிகரிமன்ன வா*
(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், *திருவிளக்காயிரம்*, 856)

**காலில்லாத பாட்டு** (உயிர்மெய் நெடில் இல்லாத பாடல்)

*அம்புவியின் முன்னோர் அரிதின் இயற்றிவைத்த*
*பம்புகுளிகை பழுதுறுமே - நிம்ப*
*வகைவண்டு இமிர்கண்ணி மன்னன்மது ரைக்குப்*
*புகைவண்டி வந்தபின் பு* (சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், *தனிப்பாடல்*)

*குறிப்பு* அண்மைக் காலத்தில் பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் பழக்கத்திற்கு வரும்வரை நகர னகரங்களின் நெடில்களைக் காட்டத் தனியாகக் கால் என்னும் துணையெழுத்துப் பயன்படுத்தாமல் அவற்றின் குறில்களையே ஈற்றில் வலப்புறமாக நீட்டி மேலே வட்டமாக அமைத்துக்காட்டினர் இவ்வகையில் முன்னோர் என்பதில் உள்ள 'ா'- காலாகக் கருதப்பெறாது

*கீழ்நோக்கி இருவளை(வு) ஒன்றோடொன் றிட்டு*
*வலத்துள வரையைக் கீழுற இழுத்திட*
*நகரந் தோன்றும் அவ்வரை அளவிற்*
*றொட்டுக் குகரத் தீறுகாட்ட*
*நாவெனல் விளங்கும்* (*அறுவகை இலக்கணம்*, 34)

எனவேதான் இது கால் இல்லாத பாட்டு எனக் கூறப்பெறுகின்றது

சென்னிமலை வேலவற்குச் சேர்ந்தகொம்பு ரெண்டுண்டு;
கன்னிகுற வள்ளிக்குக் கால்இல்லை; - முன்னமே
ஆட்டுக்குக் கொம்பில்லை, ஆனைக்குக் காலில்லை;
பாட்டுக்குள் ஆராய்ந்து பார் (*தனிப்பாடல்*)

இவ்வெண்பாவில் சென்னிமலைவேலவர் என்பதில் ஒற்றைக்கொம்பு (செ), இரட்டைக் கொம்பு (வே) ஆகிய இரு கொம்புக் குறிகளும் உள்ளன வள்ளி என்று எழுதினால் நெட்டெழுத்தின்மையின் கால் ஆகிய துணைக் குறியீடு இல்லை. ஆடு என்று எழுதும்போது கொம்பாகிய குறி இல்லை. ஆனை என எழுதும்போது ஆகாரம் நெடில் ஆயினும் துணைக்குறியாகிய கால் எழுதப்படுவதில்லை எனவே ஆனைக்குக் கால் இல்லை என்றார்

முருகனுக்கு இருமனைவியர்; வள்ளி, (தெய்வ) ஆனை இருவருக்கும் கால் இல்லை; வாகனமாகிய ஆட்டிற்கோ கொம்பில்லை என்பது வெளிப்பொருள். இதில் முற்கூறப்பெற்ற சித்திர(க்)கவிக் கூறுகளைக் காணலாம்

**2 புதுக்கவிதைகளில் சித்திரக் கவிகளின் சாயல்**

மரபை மறுதலித்துப் பிறந்த புதுக் கவிதைகளும் மரபின் தாக்கத்திலிருந்து முற்றாக விடுபடவில்லை எனலாம் சித்திரக் கவியின் காட்சிப்படுத்தும் பண்பு புதுக் கவிதைகளிலும் தொடர்வதைக் காண முடிகிறது. சித்திரக் கவியைப் போலப் புதுக் கவிதைகள் சித்திரத்தில் பொருத்தப்படுவதில்லை; பொருந்துவதில்லை என்றாலும் எழுத்துகள் அவை உணர்த்தும் பொருளுக்கேற்ப அமைக்கப்படுகின்றன

*சான்று*

1 ஓ..டி.. ய .மேகம்

நீண்டதூரம் வேகமாக ஓடிய செயல் எழுத்துகளுக்கு இடையே புள்ளிகளை இட்டுக் காட்டப்பட்டுள்ளது.

நோக்கி
தை
த்
ன
2 வா

மேல் நோக்கி உயர்தல் என்னும் கருத்து எழுத்துகளைக் கீழிருந்து மேல் நோக்கி எழுதி உணர்த்தப்பட்டுள்ளது

3 இ . ன்
று னா
ங் றி
கி ஏ

இறங்கி ஏறினான் என்பது எழுத்துகளைப் படிப்படியே இறக்கி, ஏற்றி உணர்த்தப்படுகிறது

4 முதுகுவரை

நீ
ண்
டு
விட்ட
கூந்தலுக்கு
மேலும் வளரத்
துடிதுடிப் பென்ன! (வைத்தீஸ்வரன் கவிதைகள் ப 37)

நீண்டு என்ற சொல் மேலிருந்து கீழாக நீள்வாக்கில் காட்டப்பட்டுள்ளது

5. Le
af
falls
from
the
t
r
e
e (இ இ கம்மிங்ஸ்)

இலை மரத்திலிருந்து விழுவதைப் போலவே கவிதையும் மேலிருந்து கீழாக எழுதப்பட்டுள்ளது

6. மௌனம்

மௌனமாக இருக்கும் கவிஞனின் மனதுக்குள் நிகழும் போராட்டம், ஆதங்கம், சிந்தனை ஆகியவற்றை உணர்த்துவதாகச் சதுரம் அமைந்துள்ளது எழுத்தால் வடிக்க இயலாத ஒன்றை உணர்த்துவதாக இது அமைகிறது

(கோ. புண்ணியவான் - "மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளின் நவீன சிந்தனைகள்" - முதலாவது மலேசியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை, மலாயாப் பல்கலைக் கழகம், கோலாலம்பூர், பிப்ரவரி 19-20, 2005)

இப்புது வடிவத்திற்கும் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது

*'கூறும் கருத்தை வடிவம் கொண்டு*
*சித்திரத்துக் காட்டல் சித்திரக் கவியே'*

சித்திர வடிவே பொருளோடு பொருந்தும்-

*ஏறுவது போன்றும் இறங்குவது போன்றும்*
*சாய்வது போனறும் வளைவது போன்றும்*
*தலைகீழத் தோறறமும் உள்ளக் குழப்பததைப்*
*பொருந்தும் வடிவில் காட்டியும் வரூஉம்*
*இருமூன்று வடிவம் கொள்ளும் அதுவே.*

*வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே*
(இரா. இராசேந்திரன், **புதுக்கவிதை இலக்கணம்**, 83 - 86)

கவிதையில் இடம்பெறும் ஒரு சொல் அல்லது சில சொற்கள் மட்டுமே சித்திரத் தன்மை பெற்று வரும்

முற்கூறிய இலக்கணத்துடனே, சித்திரம் என்பது இங்குப் பொருளோடு தொடர்புடையது என்றும் சித்திரப்பா அமையும் வகைகள் பற்றியும் புறநடை ஒன்றையும் கூறிச் சித்திரப்பாவிற்குப் புதுவகை இலக்கணம் ஒன்றை வகுத்திருக்கிறார் இரா இராசேந்திரன்

3 சொற்களற்ற கவிதைகள்

1. காளியப்பன்

$$\frac{29 - 12 - 39}{30 - 10 - 04}$$

இதுபோன்ற பெயரையும், தேதியையும் கல்லறைகளில் காணலாம் பிறந்த தேதிக்கும், இறந்த தேதிக்கும் இடைப்பட்ட கோட்டைத்தான் சொற்களற்ற கவிதை என்கிறார்கள். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயான ஒரு வெற்றுக்கோடுதான் வாழ்க்கையா? இவ்வளவுதான் உன் சாதனையா? என சொற்களற்ற இக்கோட்டிற்கு அழுத்தமான பொருள்கள் பலவற்றைக் கூறலாம்

2. 


(கோ புண்ணியவான் - "மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளின் நவீன சிந்தனைகள்" - முதலாவது மலேசியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை, மலாயாப் பல்கலைக் கழகம், கோலாலம்பூர், பிப்ரவரி 19-20, 2005).

'ம்' என்ற ஒரு எழுத்து வாசக மனநிலைக்கேற்பப் பல்வேறு புரிதல்களை ஏற்படுத்தும்

***

# குறிப்புகள்

குறிப்புகள்

2726
நாள் 04/11/10
நூலகம்



இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வ. ஜெயதேவன் இல்லினாய்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா அவர்களிடம் நேரிடையாக அகராதியியலில் பயிற்சி பெற்றவர்; தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் முதல் இயக்குநர்; தமிழ் மொழித்துறையின் முன்னைத் தலைவர்; தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியர்; தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் தலைமைப் பதிப்பாசிரியர்; இந்திய அகராதியியல் கழகத்தின் பொதுச் செயலாளர்; ஆசிய அகராதியியல் கழகத்தின் தலைவர்; அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுநூல்கள், பதிப்புக்கள் பலவற்றின் ஆசிரியர்; இவர் மேற்பார்வையில் 28 பேர் முனைவர் பட்டமும் 100 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

சித்திரக் கவியை இயற்றுவதும் படிப்பதும் எல்லோராலும் இயலக்கூடியன அல்ல. இவ்வகைக் கவிதையை இயற்றவும் பாடவும் தனிப் புலமையும் தனித் திறமும் தனிப் பயிற்சியும் தேவை. பண்டைய தமிழ்க் கவிஞர்கள் சித்திரக் கவி பாடுவதிலும் படிப்பதிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். சித்திரக் கவி பாடும் மரபு இப்போது அருகிவிட்ட நிலையில் அதனை ஆவணப்படுத்தும் வகையிலும் எளிமையாக அதனை அறிந்துகொள்ளும் வாயிலாகவும் இந்நூல் அமைந்துள்ளமை இதன் தனிச் சிறப்பு ஆகும்.

சித்திரக் கவிக் களஞ்சியம்

சென்னைப் பல்கலைக்கழகம்
2007